بسم الله الرحمن الرحيم

“

முஃமீன்களே!
நீதியை, நிலை
நாட்டுவதற்காக
அல்லாஹ்வுக்கு நீங்கள்
உறுதியான சாட்சியாக
இருங்கள். எந்த ஒரு கூட்டத்தார்
மீதும், நீங்கள் கொண்டுள்ள
வெறுப்பு நீதி செய்யாமலிருக்க
உங்களைத் தூண்ட வேண்டாம்.
நீதி செய்யுங்கள், இதுவே
பயபக்திக்கு மிக
நெருக்கமாகும்.
அல்லாஹ்வுக்கு அஞ்சுங்கள் ;
நிச்சயமாக அல்லாஹ் நீங்கள்
செய்பவற்றையெல்லாம் (நன்கு)
அறிந்தவனாக இருக்கின்றான்
(அல்குர்ஆன் - 5:8)

”


அமெரிக்க அதிபரின் சாதனை - 8
நந்தினி - கோரமான கொலை - 12
மீண்டும் பொதுசிவில் சட்டம்
ஒன்றும் ஒன்றுக்கு அதிகமான மனைவியரும் - 17
தயை கூர்ந்து சற்றுக் கவனமாக இருங்கள் - 20
பாகிஸ்தானிற்கு உளவு பார்த்த பி.ஜே.பி. - 23
வேடனை விடு, வீட்டிலிருப்பவனை கெடு - 25
ஜல்லிக்கட்டும் - பி.ஜே.பி.யும் - 30
சிமி என்கவுண்டர் போபாலில் கொலை செய்யப்பட்டவர்கள் சிமி உறுப்பினர்கள் அல்ல - 36
எது முதலில் ? - 40
முஸ்லிம்களின் வீழ்ச்சியால் உலகம் இழந்ததென்ன ? - 44
கற்காலம் ஒரு வரலாற்றுப் பொய் - 47
இந்துக்கள் - ஒரு மாற்று வரலாறு - 51
நிர்வாக இயலின் தந்தை செர்ஷா சூரி - 53
கறுப்புப் பண ஒழிப்பு மோடியின் கபட நாடகம் - 56
டேங்கர் கப்பலும் கூடங்குளமும் - 62
தொடரும் சிறுபான்மைக்கு எதிரான அத்துமீறல்கள் - 64



ஏப்ரல் - 2017

ரஜப் - 1438

# வைகறை
## வெளிச்சம்

தனி இதழ் : ரூ. 20 /-
ஆண்டுச் சந்தா
உள் நாடு : ரூ. 240 /-
வெளி நாடு : ரூ. 3000 /-
பணவிடை மூலம் சந்தா செலுத்துவோர்
**DARUL ISLAM FOUNDATION TRUST**
என்ற பெயரிலேயே அனுப்ப வேண்டுகிறோம்.

விளம்பரங்களுக்கு 81481 29887



ஆசிரியர்
**மு. குலாம் முஹம்மது,** M.A.,
Journalism & Mass Communication

துணை ஆசிரியர்
**கே.எம். இலியாஸ் ரியாஜி,** M.A.,



All disputes arising out of any publication in this monthly will come under the jurisdication of Chennai courts.



**VAIGARAI VELICHAM**
52/1, Mannady Street, Room No. 7, Mannady,
Chennai - 600 001. Tel : 81481 29887
Email : darultrust@yahoo.com
Web : www.darulislam.in

http:/www.facebook.com/vaigarivelicham

# தற்கொலைகளுக்கு தீர்வு காண்வோம்..

கடந்த மாதம் நாடாளுமன்றத்தில் ஒரு மனதாக இந்திய குற்றவியல் சட்டம் ஐ.பி.சி. பிரிவு 309 திருத்தப்பட்டு "Suicide no more a crime" அதாவது மனநிலை சரியில்லாதவர்கள் என்று தெரியப்படுபவர்கள் தற்கொலை செய்வது, அதற்கு முயற்சி செய்வது குற்றமல்ல என்று சட்ட ஏற்றப்பட்டுள்ளது.

பொதுவாகவே மனிதனுடைய மனம் வாழ்க்கையில் சில தோல்விகளை சந்திக்கும் போது துவண்டுபோவதுண்டு. ஆனால் தோல்வி மட்டுமே வாழ்க்கயில்லை. வெற்றி, தோல்வி, இன்பம், துன்பம் இவையெல்லாம் கலந்ததுதான் வாழ்க்கை. சிலரின் வாழ்க்கை வசந்தம் வீசும் இன்பப் பூஞ்சோலையாகிறது. சிலரது வாழ்க்கையே வறுமையும், விரக்தியும், துன்பமும் சுழன்று தாக்க வாழ்க்கையை சோகமாகி சுட்டெரிக்கும் பாலைவனமாக மாறிவிடுவதுண்டு.

உலகில் பிரச்சனை இல்லாத மனிதர்களே அல்ல. சிலருக்கு பொருளாதார பிரச்சனை, சிலருக்கு இல்லற வாழ்வில் பிரச்சனை என்று ஏதோ ஒரு வகையில் ஒவ்வொரு மனிதனும் சில பிரச்சனைகளை சந்தித்து கொண்டுதான் இருக்கின்றான். தமக்கு ஏற்படுகின்ற துன்பங் களை தாங்கிட முடியாமல் பரச்சினைகளை எதிர்கொள்ள தயராக இல்லாமல் விரக்தியில் வீழ்ந்து மனககோளாறுகளுக்கு ஆட்படு கின்றனர்.

பலர் தட்டுடைய வாழ்க்கை முடித்துக் கொண்டால் தற்கொலை செய்து கொண்டால் இவற்றை விட்டு தப்பித்து விடலாம் என தப்புக்கணக்கு போடுகின்றனர். விளைவு இன்று தினசரி செய்தித்தாள்களை புரட்டினால் விவசாயி தற்கொலை, தொழிலதிபர் தற்கொலை, பரீட்சையில் மதிப்பெண் குறைந்ததால் மாணவன் தற்கொலை, காதல் தோல்வியால் தற்கொலை, ஏழை, பணக்காரன், இளைஞர், சிறியவர், பெரியவர் என்று பேத மில்லாமல் நடந்தேறுவதை பார்க்கின்றோம். இந்திய சுகாதரத்துறை தரும் புள்ளி விவரப்படி 5 நிமிடத்திற்கு ஒரு தற்கொலை நடந்தேறுகிறது. இவர்களில் நான்கில் மூன்று பகுதியினர் இளம் வயது ஆண்கள் மற்றும் பெண்கள். தற்கொலைக்கான காரணத்தை கண்டறிகிறபோது மன அழுத்தம் கோளாறுகள் என்று மனநலம் சார்ந்த காரணிகளே சொல்லப் படுகின்றது. இப்படி மனநலக் கோளாறுகளால் பாதிக்கப்பட்டவர்கள் இந்தியாவில் 26 கோடி பேர் என்கின்றது புள்ளிவிவரம். - Souce Financial Express

மக்கள் தொகையில் ஐந்தில் ஒருவர் மன அழுத்தத்தால் பாதிக்கப்பட்டிருக்கின்றனர். இது இந்தியாவின் ஒட்டுமொத்த மக்கள் தொகையில் 20 சதவீதம். இவர்கள் அத்துனை பேரும் தற்கொலைக்கு தயாரானால் தேசத்தின் நிலை என்னவாகும். அல்லது தற்கொலைதான் தீர்வை தந்திடுமா ? உயிரை மாய்த்துக் கொண்டால் இந்த உலகத்தோடு எல்லாம் முடிந்து விடுமா? என்ற கேள்விகளுக்கு நம்மைப் படைத்த இறைவன் பதில் சொல் கிறான். இந்த உலக வாழ்க்கை நிரந்தரமான தல்ல இது ஒரு சோதனைக்களம்.

“உங்களில் எவர் செயல்களால் மிகவும் அழகானவர் என்பதை சோதிப்பதற்காகவே அவன் மரணத்தையும் வாழ்வையும் படைத்தான்” – (அல்குர்ஆன் 67 : 2)

“இந்த உலக வாழ்க்கையே ஒரு சோதனைக் களம். இங்கே எதிர்கொள்கின்ற சோதனை களை சவால்களாக எடுத்துக்கொண்டு இறைவனின் மீது முழு நம்பிக்கை வைத்து முழு முயற்சியில் ஈடுபட வேண்டும் என்று பணிக்கின்றது இஸ்லாம்”.

உலகில் வாழ்கின்ற எல்லோருக்கும் பாமரன் முதல் நாட்டை ஆளும் பிரதமர் வரை

பார்க்கின்ற வேலைகளில் அழுத்தங்களும், பிரச்சனைகளும் இருக்கத்தான் செய்யும். இறுதி தூதர் முஹம்மது நபி (ஸல்) கூறினார்கள்.

“உங்களில் ஒவ்வொருவரும் பொறுப்பு தாரிகள் ஆட்சியாளர்கள் குடிமக்களின் மீது பொறுப்புள்ளவர்கள் ஆண் தன் குடும்பத்தின் மீது பொறுப்புள்ளவர், பெண் தன் கணவன் வீட்டின் மீதும், பிள்ளைகளின் மீதும் பொறுப் புள்ள. ஒரு பணியாளன் தன் எஜமானின் பொருட்களின் மீது பொறுப்புள்ளவன். உங்களின் ஒவ்வொருவரும் பொறுப்பு தாரிகள் அந்த பொறுப்புகளை பற்றி விசாரிக் கப்படுபவர்கள்”. (ஆதாரம் : சஹீஹுல் முஸ்லிம் 1829) என்றார்கள்.

தேசத்திற்கு பிரச்சனை அல்லது தனக்கு வேலை பளு என்று ஆட்சியாளர் மன முடைந்துபோவது, தற்கொலைக்கு தயாராவது எப்படி பொறுப்பற்ற செயல், கோழைத்தனம் என்று சொல்வோமா அதைபோன்றுதான் ஒவ்வொருவருக்கும் அது பொருந்தும்.

பாரமரன் முதல் பிரதமர் எல்லோரும் ஏதோ ஒரு வகையில் பொறுப்புள்ளவர்கள் என்பதையே மேற்கண்ட நபிமொழி உணர்த்து கிறது. மரணித்த பின் மறுமையில் மீண்டும் எழுப்பப்படுவோம். இங்கே சுமந்த பொறுப்பு களுக்கு பதில் சொல்லியாக வேண்டும் என்கிறது இஸ்லாம்.

தற்கொலையை வன்மையாக கண்டிக்கிறது இஸ்லாம். அதை தடை செய்யப்பட்ட குற்றம் என்கிறது இஸ்லாம். இங்கே நாம் சுட்டிக் காட்டுவது ஐ.பி.சி. 309 பிரிவு திருத்தம் செய்யப்பட்டு தற்கொலை முயற்சிக்கு தண்டனை இல்லை என்று கூறுவதை அல்ல. அது ஒரு குற்றமே அல்ல என்று கூறுவதைதான்.

உலகத்தில் வருகின்ற தற்கொலை என்ற தகாத செயலுக்கு இந்த உலகத்தில் வருகின்ற கஷ்ட, நஷ்டங்களை இன்ப, துன்பங்களை பொறுத்துக்கொண்டு, சகித்துக்கொண்டு வாழ தைரியமற்ற மனநிலை என்பதோடு உலகமே சதம் என்று வழமுகின்ற இந்த வாழ்க்கை முறை யும் தான் முக்கிய காரணம்.

படைத்த இறைவன் ஒருவன் இருக் கின்றான். இந்த உலகிலே செய்கின்ற அத்துனை செயல்களுக்கும் மரணித்தபின் மறுஉலக வாழ்வில் பதில் சொல்லியாக வேண்டும் என்று நம்பிக்கை கொண்டு முயற்சிக்களை செய்து பொறுப்புகளை இறைவனின் மீது சாட்டி அவனை துதி செய்வோம். தாம் இம்மையிலும் மறுமையிலும் வெற்றி பெற முடியும். மன அழுத்தங்களிலிருந்து தப்பிக்க முடியும்.

படைத்த இறைவன் சொல்கிறான்

“அல்லாஹ்வை நினைவு கூறுவதின் மூலம் உள்ளங்கள் அமைதியடைகின்றன” (அல்குர்ஆன் 13 : 28)

“எவரையும் அவரது சக்திக்குட்பட்டே தவிர அல்லாஹ் சிரமமப்படுத்த மாட்டான்” (அல்குர்ஆன் 2:286)

ஆகவே இந்த வாழ்க்கையில் நிகழும் அனைத்து சம்பவங்களும், நமக்கு வழங்கப் பட்டுள்ள அனைத்துமே சோதனைதான். அதை ஒவ்வொருவரும் உணர்ந்து செயல்பட வேண்டும்.

“அல்லாஹ் எங்களுக்கு விதித்ததை தவிர எங்களுக்கு வேறு எதுவும் ஏற்படாது. அவன் எங்கள் அதிபதி நம்பிக்கை கொண்டோர் அல்லாஹ்வையே சார்ந்திருக்க வேண்டும்”. (அல்குர்ஆன் 9 : 61)

நமக்கு ஒரு தீமை ஏற்பட்டால் அதற்கு பின்னால் இறைவன் ஒரு நன்மையை நாடி இருக்கின்றான் என்று நம்பிட வேண்டும் என்று இறைவன் கூறுகிறான்.

“ஒவ்வொரு கஷ்டத்திலும் ஒரு இலேசும் இருக்கின்றது”. (அல்குர்ஆன் 94 : 6)

இப்படி சிந்திக்க தொடங்கிவிட்டால் எவ்வளவு பெரிய கஷ்டங்களையும் துன்பங் களையும் எளிதாக வென்றுவிடலாம்.

விரைவோம் இஸ்லாத்தை நோக்கி!

மார்ச் 6ம் தேதி தனுஷ் கோடி-கச்சத்தீவு பகுதியில் இந்திய எல்லைக்குள் மீன் பிடித்து கொண்டிருந்த இந்திய மீனவர்கள் மீது திடீரென்று துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டது. இதில் பிரிட்ஜோ என்ற இளைஞன் கரை சேர்வதற்குள்ளே மரண மடைந்தார்.

மீனவர் தரப்பில் இலங்கை கப்பற்படையால் தான் சுடப் பட்டது என்று சொல்லப்பட்டாலும் இலங்கை அரசு அதனை மறுத்துள்ளது. இதுவரை இலங்கை கடல் எல்லையில் மட்டும் 600 க்கும் மேற்பட்ட தமிழக மீனவர்கள் துப்பாக்கிச் சூட்டில் கொல்லப்பட்டிருக்கின்றனர். ஆனால் அதற்காக இந்திய அரசு இன்று வரையிலும் எவ்விதமான எதிர்ப்பு நடவடிக்கையையும் சொல்லிக் கொள்ளும் அளவுக்கு எடுத்திடவில்லை. இதற்கு முன்னால் ஆட்சி செய்த மத்திய அரசுகள் எதை செய்ததோ அதே மெத்தனத்தை பாஜக அரசும் மேற்கொள்கிறது.

பாஜகவின் முக்கிய தலைவர்களில் ஒருவரான சுப்ரமணியசுவாமி “தமிழக மீனவர்களின் மீன்பிடி படகுகளை சிறைபிடித்து வைத்து கொள்ளுமாறு இலங்கை அரசுக்கு ஆலோசனை வழங்குகிறார்.” (திஇந்து, செப்டம்பர் 2,2014, மதுரை)

முந்தைய, மத்தியில் அமர்ந்த அரசுகளிடமிருந்து பாஜக விலகி இலங்கை அரசுக்கு தமிழக மீனவர்களின் படகுகளை பிடுங்கிக் கொள்ளுங்கள் என்று அறிவுரை சொல்லும் அளவுக்கு இலங்கையுடன் நட்பை பேணுகிறது.

சீனா, நேபாளம், பாகிஸ்தான் என எந்த அண்டை நாடுகளுடனும் சுமூக உறவு இல்லாத நிலையில் டெல்லி அரசாங்கம் தமிழர்களை தொடர்ச்சியாக வஞ்சிக்கும்

# இலங்கை பாகிஸ்தானாக இருந்திருந்தால்!





இலங்கையுடன் மட்டும் அளவில்லாத நட்புறவை பேணுகிறது.

**தமிழ்நாட்டுக்கு அருகில் பாகிஸ்தான்?..**

ஒருவேளை, இலங் கைக்கு பதிலாக பாகிஸ்தான் தமிழகத்திற்கு அருகில் இருந் திருந்தால் நிம்மதி கிட்டி யிருக்கலாம். ஆம், அப்படித் தான் இதுவரை நடந்துள்ளது. பாகிஸ்தான் எல்லைக்குள் நுழைந்த இந்திய மீனவர்கள் எப்படி கைது செய்யப்பட்டார்கள்! எப்படி நடத்தப்பட்டார்கள்! எப்படி விடு தலை செய்யப்பட்டார்கள்! என்று பார்க்கும் போது நம் நட்பு நாடாக பாகிஸ்தான் இருந்திருக்கக் கூடாதா என்று தான் நினைக்க தோன்றுகிறது.



218 Indian fishermen released

NO BITTERNESS: Indian fishermen pose for a selfie by a policeman at the Cantonment railway station in Karachi on Thursday. — PHOTO: REUTERS

ஜனவரி 8, 2012ல் பாகிஸ்தான் சிறையில் அடைக்கப்பட்டிருந்த 183 இந்திய மீனவர் களை பாகிஸ்தான் அரசு விடுதலை செய்தது. இதில் 179பேர் குஜராத்திகள். விடுதலையான மீனவர்களை பேட்டியெடுக்க Sunday Times Of India ஆங்கில நாளிதழ் செல்கிறது, பேட்டியின் தொடக்கத்தை பதிவு செய்யும் முன் இப்படி எழுதினார்கள், “நாங்கள் பயங்கர மான சம்பவங்களை எல்லாம் சொல்லுவார்கள் என எதிர்பார்த்தோம் ஆனால் அவர்கள் கூறிய ஒவ்வொன்றும் புதிதாக இருந்தது”. விடுதலையான மீனவர்களில் ஒருவரான பாரத் சூதா சோமா, “ நாங்கள் (பாகிஸ்தானிய கைதிகளும் இந்திய கைதிகளும்) சிறையி லிருந்து வெளிவரும் நாளில் ஒரு பெரிய குடும்பமாகவே மாறிப்போனோம் என்றார்.

**விடுதலையான இன்னொரு மீனவர் கூறும்போது...**

எங்களை எந்தவித கொடுமை களுக்கோ சித்ரவதைகளுக்கோ யாரும் ஆட்படுத்தவில்லை. எங்களுக்கு தேவைப்படும் துண்டு, சோப் போன்ற அடிப் படைத் தேவையான பொருட் களையும் எங்களுக்கு சிறையி லிருந்த பாகிஸ்தானியர்கள் தான் கொடுத்து உதவினார்கள். சிறை யிலிருந்த ஜெயிலர்கள் உட்பட மிக நெருக்கமாக பழகினார்கள். நீங்கள் வேகமாக வீடு திரும்பு வீர்கள் என அடிக்கடி சொல்வார்கள்.

பாகிஸ்தான் நீதிபதி நசீர் அஸ்லம் ஜாஹீத் அவர்களும் அவரது அலுவலகத்திலுள்ளவர் களும் தினமும் இந்திய சிறைவாசிகள் எப்படி இருக்கிறார்கள் என்று பார்த்து செல்ல வருவார்கள். எங்களுடன் சிறையில் 18 வயதுக்கு குறைந்த மூன்று இந்திய சிறுவர்கள்

இருந்தார்கள். நீதிபதி நசீர் அவர்களின் போனிலேயே மூன்று பேர் பெற்றோருக்கும் போன் செய்து வாரத்திற்கு மூன்று நாட்கள் பேசவிடுவார்கள். (Sunday Times Of India,Madurai 14/01/12)

பாகிஸ்தானில் இந்தியர்கள் இருந்த சிறை களை பார்வையிட்டு இந்தியா வந்த பாகிஸ் தான் - இந்தியா அமைதி மற்றும் ஜனநாயக மன்றத்தின் பொதுச்செயளாலர் தபான் போஸ் அவர்களிடம் சிறையில் உள்ள இந்திய மீனவர் களின் நிலை பற்றி கேட்ட போது,

"இந்திய சிறைக்கைதிகள் யாரும் மோச மாக நடத்தப்படுவதில்லை. மற்ற கைதிகளை போல் தான் இந்தியர்களும் சகஜமாக நடத் தப்படுகிறார்கள். ஜெயிலர்கள் முதற்கொண்டு சிறையில் இருக்கும் இந்தியர்களிடம் மிக இயல்பாக பழகுகிறார்கள். அடையாளமில்லா மல் இருக்கும் கைதிகளின் அடையாளத்தை கண்டுபிடிக்க கூட ஜெயிலர்களே உதவுகின்ற னர். (Times Of India, Madurai 01/07/12)

டிசம்பர் 25ம் தேதி பாகிஸ்தான் அரசு சிறையிலிருந்து 220 இந்திய மீனவர்களை விடுதலை செய்தது. அதை தொடர்ந்து ஜனவரி 5,2017ல் 218 இந்திய மீனவர்களை விடுதலை செய்து பாகிஸ்தான்-இந்திய எல்லைப் பகுதி யான வாகா பகுதியில் இறக்கிவிட்டு அவர் களுக்கு 500ரூபாய் பணமும் பரிசுகளும் வழங்கி அனுப்பியது. இதை விட மிகச்சிறப்பானது விடுதலை செய்யப்பட்ட இந்திய மீனவர் களுடன் பாகிஸ்தான் இராணுவத்தினர் எடுத் துக் கொண்ட புகைப்படத்தின் மூலம் பாகிஸ் தான் அதிகாரிகளுக்கும் மீனவர்களுக்கும் இடையில் இருந்த நெருக்கத்தினை உணர முடிகிறது. (The Hindu 06/01.17)

இவைகளெல்லாம் கூட சீமான் போன்ற அரசியல்வாதிகளையும் பாகிஸ்தான் நம் அண்டை நாடாக இருந்திருக்கக் கூடாதா என்ற கருத்தை முன்வைக்க காரணமாக இருந்திருக் கலாம். நியாயம் தானே!

**இந்திய கப்பற்படை தன் பணிகளை மறந்துவிட்டதா?**

இந்திய கப்பற்படையின் மிக முக்கிய பணி களில் ஒன்று எல்லைகளை சரியாக பாதுகாப்பது தான். ஆனால் இதுவரை தமிழக மீனவர்கள் இந்திய எல்லைகளை கடக்கும் போது ஒருமுறை கூட தடுத்திடவில்லை. தடுக்காமல் இருந்தாலும் பரவாயில்லை அண்டை நாடுகள் வைக்காத குற்றச்சாட்டையே தமிழக மீனவர்கள் மீது மத்திய கப்பற்படை மதுரை நீதிமன்றத்தில் வைத்தது, " தமிழக மீனவர்கள் போதைப்பொருள் கடத்துவதாலும் இலங்கை எல்லைக்குள் அத்துமீறி நுழைவதாலும் மீனவர்களுக்கு ஏற்படும் பாதிப்புகளுக்கு மத்திய கடலோர காவற்படை பொறுப்பேற்க முடியாது."( தி இந்து ஜூன்02, 2014)

பாதுகாப்பு கேட்கும் போது, பழியை மக்கள் மீது போட்டு விடுகிற கப்பற்படை எப்போதும் எல்லா சூழ்நிலைகளிலும் தனது கையாலாகாத செயலை மறைக்க மற்றவர்கள் மீது பழி போடுகிறது. சமீபத்தில் சென்னையில் இரு டேங்கர் கப்பல்கள் மோதிய போதும் கப்பற்படையின் தயாரற்ற தன்மையும் அதன் நிர்வாக கோளாறுகளையும் தெளிவாக பார்க்க முடிந்தது.


Warm memories of time in Pak jail

Some Indian fishermen just released from prison in Pakistan come back not with horror stories but fond remembrances. Aman ki Asha at its best

தமிழக எல்லையோரங் களில் உள்ள அனைத்து மீன்பிடி படகுகளிலும் GPS கருவி பொருத்தப்பட்டுள்ளது. எந்த படகும் எல்லை தாண்டும் போது கப்பற்படையினருக்கு சிக்னல் கிடைத்து விடும். ஆனா லும் ஒருமுறை கூட இந்த டெக்னாலஜிகள் தமிழக மீனவர் களை காப்பாற்றியதில்லை.



நிர்வாக குறைகளும் மத்திய அரசின் தமிழக துரோக மன நிலையும் தொடர்ச்சியாக தமிழக மீனவர்களை வஞ்சித்து வருகிறது.

## பாகிஸ்தான் அரசியலும் மோடி அரசும்!

மோடி மார்பு விரித்து பாகிஸ்தானை வசைபாடுவதில் எப்போதுமே வல்லவர். இந்த வசைப்பாடுதல்களின் மூலமும் போலி வாக்குறுதிகள் மூலமும் ஆட்சியை பிடித்தது மட்டுமல்லாமல் மக்கள் மனதில் பாகிஸ்தான் வெறுப்பை வேரூன்ற செய்தவர். மோடியை இயக்கும் ஆர்.எஸ்.எஸ் இதைத்தான் வரலாறு நெடுகிலும் செய்து வந்தது.

வருகிறது. ஆர்.எஸ்.எஸ், பாஜகவுடைய பாகிஸ்தான் பூச்சாண்டி அரசியல் சுத்தமாக பழிக்காமல் சென்றது தமிழ்நாட்டில் மட்டும் தான்.

பாஜகவின் சூழ்ச்சி அரசியலுக்கு தமிழ்நாடு பலியாகாது என்பதனை சமீபத்தில் ஜல்லிக் கட்டிற்காக நடந்த மாணவ புரட்சி உறுதிப் படுத்தியது.

பெண்களின் அடிப்படை கல்வியில் பாகிஸ் தான் 74% ஆனால் இந்தியா 48% அடிப்படை கல்வி கடந்து மேற்படி படிக்க செல்லும் பெண் களின் விகிதம் இந்தியாவை பொறுத்த வரை 20%க்கும் குறைவு ஆனால் பாகிஸ்தானில் சரிபாதி மடங்கு உயர்கிறது. (தி இந்து 24/10/16).

பார்லிமெண்டில் பெண்களுக்கான ஒதுக்கீடு தருவதில் இந்தியா 11.8%, பாகிஸ்தான் 20.6%.

மதச்சார்பற்ற நாடு என்று அடையாளம் கொண்ட இந்தியாவில் பொது சிவில் சட்டம் கொண்டு வர கடும் முயற்சி! ஆனால் மதச் சாயம் பூசப்படும் பாகிஸ்தானில் இந்து திருமண சட்ட மசோதா வெற்றிகரமாக நிறைவு.

பாபரி மஸ்ஜித் விவகாரத்தில் பேசித்தீர்த்து கொள்ளுங்கள் என்று கட்டப்பஞ்சாயத்து முறைகளை நீதிமன்றம் கருத்தாக சொல்கிறது! மத்திய அரசாங்கம் ராமர் கோவில் கட்டியே தீருவோம் என தேர்தல் அறிக்கை தயார் செய்கிறது! பாகிஸ்தானில் கோவில்கள், தேவாலயங்கள், குருத்வாரங்களை பாதுகாப்ப தற்காக மட்டும் 40 கோடிகளை பாகிஸ்தான் அரசு ஒதுக்கியுள்ளது.

எதிரி நாடு என சொல்லப்படும் பாகிஸ்தான் முன்னேறிக் கொண்டும் வளர்ச்சி பணிகளில் கவனம் செலுத்தி வரும் வேளையில் நமது மத்திய பாஜக அரசு மக்களுக்குள்ளே பிளவு களை உண்டாக்கும் பணிகளையும் மதவாத அரசியலையும் திணித்து வருகிறது.

இன்றைய தமிழக மீனவர்களிடம், இலங்கை மீனவர் பிரச்சனையில் பாகிஸ் தானாவது நமது அண்டை நாடாக இருந்திருக் கலாம் என நினைக்கும் சூழலுக்கு தள்ளப்பட் டுள்ளார்கள்.

**- அபூ சித்திக்**

# 49 இஸ்லாமிய சிறைவாசிகளின் விடுதலை

**"தமிழகம் தம் இஸ்லாமியப் பிள்ளைகளின் விடுதலையைப் பேசட்டும்" என்ற நூலுக்கு மூத்த வழக்கறிஞர் பவானி மோகன் என்ற பா.பா. மோகன் வழங்கிய அணிந்துரை...**

"தமிழகம் தன் இஸ்லாமிய பிள்ளைகளின் விடுதலையைப் பேசட்டும்" என்ற தலைப்பில் எழுதப்பட்ட இந்த சிறிய நூல் தமிழகத்தில் பெரும் பாதிப்பை ஏற்படுத்தும் அல்லது ஏற்படுத்த வேண்டும்.

தோழர் திருப்பூர் குணா இந்த நூலுக்கு அணிந்துரை அளிக்க வேண்டும் கூறியபோது இருந்த நிலைஇன்று அணிந்துரையை முடிக்கும் போது, பெரும் மாற்றத்திற்கு உள்ளாகி இருப்பதை நான் கவனத்தில் கொள்கிறேன். வீரப்பன் கூட்டாளி என்று கூறப்பட் துப்பாக்கி சித்தன், அன்புராஜ் உட்பட 300–க்கும் மேற்பட்டவர்களை கர்நாடக அரசு சுதந்திர தினத்தன்று விடுவித்துள்ளது. கேரளத்தில் வாழ்நாள் சிறைவாசிகள் 7 ஆண்டு சிறை தண்டனை அனுபவித்தாலே அறிவுரை ஆன்றோர் குழு மூலம் விடுதலையாகி வருகிறார்கள்.

துருக்கியில் கூட 36,000 அரசியல் கைதிகள் விடுவிக்கப்பட்டுள்ளார்கள்.

தமிழகத்திலும் 2008–ஆம் ஆண்டு தி.மு.க. ஆட்சியின்போது வாழ்நாள் சிறைவாசிகள் உட்பட 1,405 பேர்கள் விடுவிக்கப்பட்டார்கள். ஆனாலும், இஸ்லாமிய சிறைவாசிகளுக்கு

## என்பது இன்றைய காலக்கட்டத்தில் ஜனநாயகவாதிகள் அனைவரின் முக்கியக் கோரிக்கையாகும்

விடுதலை மறுக்கப்பட்டது.

இந்த பாகுபாடு வரலாற்றில் தொடர்ச்சியாக நடந்து கொண்டிருக்கிற ஒரு கொடுமையாகும்.

மதுரை மாநகர் மன்ற உறுப்பினரும், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியை சார்ந்தவருமான லீலாவதியை பட்டப்பகலில் நகரின் மையமான அங்காடித் தெருவில் வெட்டிக் கொன்றவர்களை உச்ச நீதிமன்றம், இந்தக் குற்றவாளிகளுக்கு எந்த வகையிலும் கருணைக் காட்டக்கூடாது எனத் தீர்ப்பளித்திருந்தது. 6 1/2 ஆண்டுகள் மட்டுமே சிறைவாசம் இருந்த அவர்களைக்கூட மு.க.அழகிரிக்கு வேண்டியவர்கள் என்ற காரணத்தினால் அரசாணையை வளைத்து, திருத்தி அப்போது விடுவித்தார்கள்.

ஆனால், அன்றைய காலக்கட்டத்திலேயே இஸ்லாமிய வாழ்நாள் சிறைவாசிகள் 10 ஆண்டுகளுக்கும் மேலாக தம் சிறை வாழ்க் கையை கழித்திருந்தனர். அவர்களில் இருவ ருக்கு அப்போது விடுதலை வருமென்ற நிலை யுமிருந்தது. இறுதி அவர்களின் விடுதலை மறுக்கப்பட்டது. அது தொடர்கதையாக “ஜெய லலிதாவின்” ஆட்சியிலும் தொடர்கிறது.

ஆளும் வர்க்கம் தலித்துகளை, ஆதிவாசி களை சிறுபான்மையினரை, உழைக்கும் மக்களை மேலும் மேலும் விளிம்பின் நிலைக் குத் தள்ளுவதும், அவர்களையே குற்றவாளி களாக்கிதூக்குத்தண்டனைவரைதண்டிப்பதும் இந்திய வரலாற்றில் தொடரக்கூடியதாகும்.

இந்த நிலையில் தமிழகத்தில் அரசியல் கட்சிகளும், மனித உரிமை பண்பாட்டாளர் களும், இஸ்லாமிய சிறைவாசிகளுக்கு ஆதரவாக ஒன்றுபட்ட விடுதலைப் போர்க் குரலைஎழுப்பாதகாரணத்தினால்நூலாசிரியர், சிறைவாசிகளுக்கு இழைக்கப்பட்ட அநீதியை, பாகுபாட்டை ஆதாரத்துடன் அடுக்கடுக்காக இந்நூலிலே விவரித்திருக்கிறார்.

“சிறை” காலனி ஆதிக்கத்தின் தொடர்ச்சி யான சித்தரவதை முகாம்களாக இருப்பதை யாராலும் மறுக்க முடியாது.

சுனில் பத்ரா வழக்கில், மனிதநேய நீதி நாயகம் வி.ஆர்.கே. அவர்கள், சிறைகளில் நடக்கும் கொடிய மனித உரிமை மீறல்களைத் தோல்உரித்துக்காட்டிய நிலைமையே இன்றும் தொடர்கிறது. சல்றையின் கட்டிடங்கள் வெறும் செங்கல், மண் கொண்டு கட்டப்பட் டவை அல்ல ; அவை சிறைவாசிகளின் இரத்தத் திலும், சதையிலும் தோய்ந்தவை என்று தன் தீர்ப்பிலே அவர் வர்ணித்ததை இன்றும் நாம் காண்கிறோம்.

சிறைச்சாலை மருத்துவமனையாக ; குற்றம் செய்தவரின் மனதை திருத்தும் அறச்சாலை யாக இருப்பதற்கு பதிலாக மனிதவதை கொட்டடிகளாக மாற்றப்படுவதும், தனிமைச் சிறையில் அடைத்து கொடுமைப்படுத்துமே தொடர்கிறது. தூக்குத் தண்டனைக் கைதிகள், தண்டனைக் குள்ளாக்கப்பட்ட சிறைவாசிகள் மட்டுமல்ல சாதாரண சிறு வழக்கில் சிக்குண்ட “சேலம் பியூஸ்” போன்ற சமூக ஆர்வலர்கள் கூட தனிமைச் சிறையில் தள்ளப்பட்டு, காட்டு மிராண்டித்தனமான காவலரின் சித்திரவதை களுக்கு உள்ளாக்கப்படுகிற சம்பவங்கள் ஏராள மாக தமிழகத்தில் தொடர்கின்றன. தமிழக சிறைகள் மட்டுமல்ல, இந்தயி சிறைகள் முழுவதுமாக நிரம்பி வழியும் மனிதர்கள் விளிம்புநிலை மனிதர்களும், மனித உரிமைக் குப் போராடுபவர்களும், இஸ்லாமியர்களும் தான் என்பதில் சந்தேகம் இல்லை.

மைய அரசு நியமித்த நீதிபதி சச்சார் குழுவின் அறிக்கையிலும், இந்திய இஸ்லாமிய மக்களின் நிலை, தலித்துகளைக் காட்டிலும் மோசமானது என்றும், சிறையில் மட்டும்தான் அவர்களுக்கு இட ஒதுக்கீடு அதிகம் உள்ளது என்றும் வெட்ட வெளிச்சமாக்கினார். குற்றங்கள் சமூக, பொருளாதார ஊற்றுக்கண் சமூகத்தின் ஏற்றத்தாழ்வு, பாகுபாடு, பொருளாதார, சமூக, பண்பாட்டுத் தளங்களில் ஏற்படுத்தியுள்ள சம நீதியற்ற தன்மை.

இந்தியாவில் இஸ்லாமியர்கள் வரலாறு தொன்மையானது. இந்தியா வேரோடுடிம், வேரடி மண்ணோடும் நிலைத்துவிட்ட பன்முகத்தன்மை கொண்டதாகும்.

இஸ்லாமிய ஆட்சி என்பது இந்தியாவில் பல துறைகளில் மாட்சிமையை, மாற்றத்தை ஏற்படுத்தியது மட்டுமல்ல ; வெள்ளை ஏகாதி பத்தியற்கு எதிராக வீரம் செறிந்த போராட் டத்திற்கு அடித்தளம் இட்டவர்கள் இசுலாமி யர்கள். தங்களை ஆகிருதி ஆக்கிக்கொண்டு சஹித் ஆனவர்கள். வெள்ளையனை விரட்டிய போரில் இஸ்லாமியர்கள் பங்கு மகத்தானது.

இப்படிப்பட்ட இஸ்லாமிய சமூகத்தவர் ஆளும் வர்க்கங்களின் பிரித்தாளும் சூழ்ச்சிக்கு இறையாகி, இந்துத்துவத்தின் சூழ்ச்சிக்கு பலியாகிப்போனது கொடுமை. இவர்கள் இந்தியாவில் அடிமைப்பட்ட நிலைமைக்குத் தள்ளப்பட்டிருக்கிற கொடுமை சிறைகளிலும் தொடர்கிறது.

அரசியல், விடுதலைக்குப் பிறகு இந்திய அரசியல் சாசனத்தின்படி, சட்டத்தின் ஆட்சி நடைமுறையில் வெற்றி பெற்றிருக்கு மேயானால் தீண்டாமை ஒழிந்திருக்க வேண்டும் ; சாதியம் மறைந்திருக்க வேண்டும் ; விளிம்புநிலை மக்களின் வாழ்வு உயர்ந்திருக்க வேண்டும் ; மதச் சிறுபான்மையினர் சமநிலை பெற்று அதிகாரம் ஆட்சி, கல்வி, வேலை வாய்ப்பு ஆகியவற்றில் பங்கு பெற்றிருக்க வேண்டும்.

ஆனால் இவையெதுவுமே நடைபெற வில்லை. மாறாக வளர்ச்சி, திட்டம், ஆகிய வைகள் பன்னாட்சி பகாசுர கம்பனிகளிடம் போய்விட்டது மட்டுமல்ல, இந்தியாவின் ஆட்சியும் காந்தியை சுட்டுக்கொன்ற ஆர்.எஸ். எஸ். சங்பரிவார் கூட்டத்தின் கையில் விழுந்து விட்டது.

இந்திய இஸ்லாமியர்கள்ன பயங்கரவாதி கள் என்றும் ; விளிம்புநிலை மக்களை, பழங் குடி மக்களை மாவோயிஸ்டுகள் உள்ளாக்கும் இந்துத்துவ, பாசிச பன்னாட்டுக் கம்பனி களின் வெறியாட்டம் தமிழகத்தின் பல பகுதி களிலும் கோரத்தாண்டவம் ஆடத் தொடங்கி யிருக்கிறது.

இதன் பின்னணியில் தமிழக சிறைகளில் வாழும் இஸ்லாமிய வாழ்நாள் சிறைவாசி களுக்கு ஏற்பட்டுள்ள சார்பு போக்கையும், அரசியல் கட்சிகளின் ஒருதலைபட்சமான போக்கையும் தெளிவாக அரசியல் பார்வை யுடன் விளக்குகிறது இந்த நூல்.

சிறையில் பல்லாண்டுகளாக கொடுமை களினால் சிதைந்துபோன மனிதத்துடன் கடக்கும் 49 இஸ்லாமிய சிறைவாசிகளின் விடுதலை என்பது இன்றைய காலக்கட்டத்தில் ஜனநாயகவாதிகள் அனைவரின் முக்கியக் கோரிக்கையாகும். இதில் யாருக்கு முதன்மை பங்கு என்ற பேச்சுக்கே இடமில்லை.

இந்நூலில் 1990–களுக்குப் பிறகு ஏற்பட்ட இஸ்லாமிய விரோதப் போக்கின் பின்னணி யில் உள்ள இந்துத்துவ பாசிச ஆபத்தை ஆதாரங் களுடன், ஆசிரியர் தம்முடைய அனுபவத் துடன் நேரடியாகத் தொடர்புகொண்டு அறிந்து விவரித்திருக்கிறார்.

2000 ஆம் ஆண்டு கோவை நீதி மன்றங் களில் அல் உம்மா இயக்கத்தை சார்ந்தவர்கள் என்று முத்திரைக் குத்தப்பட்ட இஸ்லாமிய மக்களின் வழக்குகளில் ஏற்பட்ட தொடர் பினால் அந்த மக்களோடு குடும்பமாக, சகோதரனாக நான் பத்து ஆண்டுகள் வாழ்ந்தேன் என்றுதான் கூற வேண்டும்.

குற்றம் சாட்டப்பட்ட இஸ்லாமிய சிறை வாசிகளுக்கான வழக்குரைஞர் எனப்தாலே காவல்துறை, நீதித்துறை, ஆட்சியாளர்கள், அரசியல்வாதிகள், வழக்குரைஞர்கள் பலரும் ; ஏன்? இடது சாரி இயக்கங்களைச் சார்ந்த சிலரும் கூட என்னைப் பாகுபடுத்தி, இழிவு படுத்திப் பேசியதை ஒருபோதும் என்னால் மறக்க முடியாது. ஆனாலும், அவர்களின் வழக்கை நடத்தியபோதுதான் இஸ்லாமிய சிறைவாசிகள் மற்றும் அவர்கள் குடும்பங்கள் பட்ட துன்ப துயரங்களை கண்ணுற கண்டேன், உணர்ந்தேன்.

கோவை மத்திய சிறைச்சாலை காவலர் பூபாலன் கொலை வாக்கு, காவலர் செல்வராஜ் கொலை வழக்கு, உக்கடம் நடராஜ் பெட்ரோல் பங்க அருகில் நடந்த கொலை வழக்கு, நாகப்பட்டினம் ஆலிம் ஜார்ஜ் மனைவி கொலை வழக்கு, கோவை குண்டுவெடிப்பு வழக்கு எனத் தொடர்ந்து பல வழக்குகளில் ஆஜரானதால் தமிழகம் முழுக்க உள்ள இஸ்லாமிய சிறைவாசிகளின் நிலையைப் பற்றி மிகத்தெளிவாக எனக்குத் தெரியும். இந்த வழக்குகளில் பெரும்பாலானவற்றில் பெரும் கடின முயற்சியால் விடுதலை பெற்றாலும், தண்டனைப் பெற்ற வழக்குகளும் உள்ளன. அவை சாட்சியத்தின் அடிப்படையில் தண்ட னைப் பிறப்பிக்கப்படவில்லை என்பதையும் அறுதியிட்டு கூறுவேன், வழக்குகள் மேல் முறையீட்டில் உள்ளதால் நான் அவைப்பற்றி இப்போது கருத்துக் கூற முடியாது. காலம் கனியும்.

கோபால் கோட்சேவுக்கும், பூலான்

தேவிக்கும் திறக்கும் சிறைக் கதவுகள் இஸ்லாமிய சிறைவாசிகளுக்கு மட்டும் திறக்க மறுப்பது என்பது ஆட்சியாளர்களின் இந்துத்துவ போக்கு, இஸ்லாமிய எதிர்ப்பு மனோபாவம் காரணமாகத்தான்.

அ.தி.மு.க. உறுப்பினராக வெற்றி பெற்ற தமீமுன் அன்சாரி சட்ட மன்றத்தில் இஸ்லாமிய சிறைவாசிகளின் விடுதலையை அழுத்தமாக பதிவு செய்திருக்கிறார். இந்தியக் கம்யூனிஸ்ட்டு கட்சியும், மார்க்சிஸ்ட்டு கம்யூனிஸ்டுக் கட்சியும் தனித்தனியான மாநாட்டில் தீர்மானங்கள் நிறைவேற்றி இருக்கிறார்கள். ஈரோட்டில் மார்க்சிஸ்ட்டு கட்சியின் சார்பில் இஸ்லாமிய சிறைவாசிகளை விடுதலைக்கு மாநாடே நடத்தப்படுகிறது.

ஆனால் தமிழகத்தின் பிரதான எதிர்க்கட்சி தி.மு.க. இஸ்லாமிய மக்களின் உற்ற நண்பன் என்று கூறிக்கொள்ளும் தி.மு.க. காங்கிரஸ் மற்றும் பிற இயக்கங்கள் இஸ்லாமிய சிறைவாசிகளின் விடுதலையை அழுத்தமாக மக்கள் முன்பு வைத்து போராடவில்லை என்பதை நூலாசிரியர் எடுத்துரைத்திருக்கிறார்.

மரணத்தின் வாசலில் நிற்கும் கோவை அபுதாகீர், திண்டுக்கல் மீரான் மொய்தீன் உட்பட 18 ஆண்டு சிறைவாசத்திற்கு பிறகும், விடுதலை மறுக்கப்பட்டவர்கள் ; வயது முதிர்ந்த, நோய்வாய்ப் பட்டவர்கள் ; தன் மனைவி குழந்தைகளைப் பிரிந்து 18 ஆண்டுகளுக்கு மேலாக சிறைக் கம்பிகளுக்கு பின்னால் சுதந்திரக் காற்றை சுவாசிக்க்கத் துடிப்பவர்களான அனைத்து இஸ்லாமியர்களுக்கும் மறுக்கப்படும் விடுதலை என்பது இந்திய ஜனநாயகம் குறித்த கேள்விக் குறியாகும்.

பல இஸ்லாமிய சிறைவாசிகள் மனச் சிதைவுக்குள்ளாகி உள்ளார்கள். முகமது அன்சாரி போன்றோர் மற்றவர்களின் விடுதலைக்காகத் தொடர்ந்து போராடி, அரசு அடக்குமுறையை அம்பலப்படுத்தி வருகிறார்கள். இஸ்லாமிய சிறைவாசிகளை விடுவிக்க மறுப்பது அரசமைப்பு இறையாண்மைக்கும், சமய சார்பற்ற கொள்கைக்கும், ஜனநாயகத்திற்கும் விடப்பட்டுள்ள சவால். தமிழகத்தில் சிறைகளில் வாழ்நாள் சிறைத்தண்டனை பெற்றுள்ள 6,400 பேர்கள் 14 ஆண்டுகளுக்கும் மேலாக சிறைவாசம் அனுபவித்தவர்களுக்கு அறிவுரை குழுமம் அமைத்தும் விடுவிக்கப்படாதது மிகப்பெரிய துரோகம் ஆகும்.

இஸ்லாமிய சிறைவாசிகள் இந்திய தண்டனைச் சட்டத்திற்கு உட்பட்டு தண்டிக்கப்பட்டவர்கள்தான். இவர்கள் தடா, பொடா மற்றும் சட்ட விரோத நடவடிக்கைகள் தடுப்புச் சட்டம் ஆகியவைகளினால் தண்டிக்கப் பட்டவர்கள் அல்ல இவர்களின் 49 குடும்பங்களின் வாழ்வுரிமைக் கோட்பாறற்றுக் கிடக்கிறது.

இஸ்லாமியர்களின் சிறைவாழ்க்கைக்குப் பின்னே, இந்துத்துவ பாசிச பன்னாட்டுக் கம்பளிகளின் கூட்டுக் களவானித்தனம் உள்ளதை அரசியல் சித்தாந்த ரீதியாக இந்த நூல் அம்பலப்படுத்துகிறது.

தமிழகத்தில் மனித உரிமைகள் பற்றி பேசும் அனைத்து பொதுச் சமூகமும், ஜனநாயக அரசியல் இயக்கங்களும் களம் இறங்கி ஒன்றுபட்ட குரலில் அனைத்து வாழ்நாள் சிறைவாசிகளையும் பாகுபாடின்றி விடுதலை செய்ய இந்நூல் ஒரு சிறு பொறியாக விளங்கட்டும்.

விடுதலை வெளிச்சத்தை எப்போது காண்போம் என தவித்துக்கொண்டிருக்கும் சிறைவாசிகளுக்கும், அவர்தம் குடும்பத்தாருக்கும் இந்நூல் ஒரு ஆறுதல் மருந்து, இயக்கவாதிகளுக்கு ஒரு போர்வாள்.

மனித மாண்பை சிதைக்கும் சிறைச்சாலை கொட்டடிக்குள் இருந்த நெல்சன் மண்டேலா, ஜூலியஸ் பூசிக் போன்றோரின் நெருப்பு வார்த்தைகளை, வைர வரிகளை நாம் நினைவு கூறுவோம்.

சோவியத்தின் மகத்தான் மக்கள் கவிஞன் சிமோவின் "எனக்காக காத்திரு" என்ற கவிதையை ஆந்திராவின் மக்கள் கவி வரவர ராவ் தெலுங்கில் மொழிப் பெயர்த்திருந்தார். "சிறைப்பட்ட கற்பனை" என்று தமிழாக

வடிவம்பெற்ற அது நமக்கு நம்பிக்கையளிக்கும்.

எனக்காக காத்திரு ; நான் திரும்பி வருவேன்,
காத்திரு, நிச்சயம் வருவேன்
இலையுதிர் காலத்தில் மஞ்சள் நிற மழையினோடும்
அதன் களிப்புகளோடும் காத்திரு
குளிர்கால பனியினூடே காத்திரு
காற்று, புயலின் போதினிலும்
கொளுத்தும் வெயிலிலும் காத்திரு.
பிறர் காத்திருப்பதை நிறுத்திவிட்ட பிறகும் காத்திரு.
காத்திரு, நம்பிக்கையை கைவிடாதே,
எனக்காகக் காத்திரு. நான் திரும்பி வருவேன்.
பொறுமையை அன்பைக் கற்றுக்கொள்
நான் திரும்பி வரமாட்டேன்
என்று சொல்பவரைக் கைவிடு
என் மகனும்,
தாயும் அழுகைக் கண்ணீர் சிந்தட்டும்
என் நண்பர்கள் நம்பிக்கையிழந்து
என்னை மறந்துவிடு என கூறட்டும்
பரிதாபமிக்க அவர்களது
அன்பு வார்த்தைகளுக்கு செவிசாய்க்காதே
எனது நலத்திற்கு அவர்கள் மது அருந்தினால்
அவர்களோடு சேராதே
எனக்காக காத்திரு
காத்திராதவர்கள் நான் உன்னோடு சேரும்போது
அதை அதிர்ஷ்டம என்பார்கள்
ஆனால்,
நான் சாவுகள் ஒவ்வொன்றையும் கொன்று,
அக்கினியை எச்சிலால் அணைத்து
பாதுகாப்பாக வந்ததன் காரணம்
நீ காத்திருக்கக் கற்றதனால்தான் என
நீயும் வீரமிக்க மட்டுமே அறிவோம்

என்ற வீரமிக்க கவிதையுடன் பூட்டிய இரும்புக் கூட்டின் சிறைக் கதவுகள் இஸ்லாமிய மக்களுக்கும், இஸ்லாமிய சிறைவாசிகளுக்கும் திறக்க இந்த நூல் ஒரு நெம்புகோலாகட்டும் ; மக்கள் இயக்கம் வெடிக்கட்டும் ; மனிதாபிமானம் மலரட்டும் என வாழ்த்துகளோடு முடிக்கின்றேன்.


# ஹிஜாமா (நபி வழி சிகிச்சை)

( முஸ்லிம் )

அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் "நீங்கள் எவற்றால் சிகிச்சை பெறுகிறீர்களோ அவற்றிலெல்லாம் விட சிறந்தது இரத்தம் உறிஞ்சி (ஹிஜாமா) எடுப்பதாகும்" என்று கூறினாரர்கள்.

## அல்-கர்ளாவி அக்குபஞ்சர் & ஹிஜாமா கிளினிக்

இடம் : பாரத் நகர் 4வது வீதி, சாரமேடு, கரும்புக்கடை, கோவை -8.

கிளை : L.M.R. வீதி, சின்ன பள்ளிவாசல் எதிரில், கோட்டைமேடு, உக்கடம், கோவை -1.

**உடல் மற்றும் மனம் சம்மந்தமான அனைத்துப் பிரச்சனைகளுக்கும் ஹிஜாமா செய்யப்படும்.**

**பெண்களுக்கு பெண் தெரஃபிஸ்ட் மூலம் சிகிச்சை அளிக்கப்படும்.**

தொடர்புக்கு : எஸ்.உமர் M.DAT., : 96 55 811 811, 97 89 473 999




# மனிதர்கள் அனைவரும் சீப்பின் பற்கள் போன்று சமமானவர்கள் (நபிமொழி)

அமெரிக்காவில் நிறவெறிக்கெதிராக போராடிய மாவீரன் மால்கம் X (எ) மாலிக் அல் ஷாபாஸ் பிப்ரவரி –21, 1965 இன்று ஷஹீத் ஆக்கப் பட்டார்கள்.

தாருல் இஸ்லாம் கடந்த 37 ஆண்டுகளாக மக்களை – இஸ்லாம் அல்லாதோரை இஸ்லாத்தின் பக்கம் அழைத்து வருகிறது.

நபி மார்களுக்கு பிறகு இஸ்லாத்தின் பக்கம் மக்களை அழைப்பது முஸ்லிமே உம்மத் நம்மீது கடமையாக அல்லாஹ் கட்டளையிட்டுள்ளான்.

அல்லாஹ்வின் பக்கம் மக்களை அழைக்கும் பணியை நாம் செய்யாமல் மரணித்தால் நிச்சயமாக நம்மோடு சேர்ந்து வாழ்ந்து வரும் சகோதர சமூகம் நம்மை குற்றம் சாட்டி அல்லாஹ்விடம் மறுமையில் சிக்க வைத்து விடுவார்கள்.

இறைவா! நீ ஒருவன்தான், உன்னை மட்டுமே வணங்க வேண்டும், இஸ்லாத்தை மட்டும் பின்பற்றிட வேண்டும் என்று எங்களுக்கு சொல்லித் தரவில்லை என்று அல்லாஹ் விடம் நம்மை அல்லாஹ்வின் கோபத்திற்கு ஆளாக்கி விடுவார்கள்.

அல்லாஹ்வின் கோபத் திற்கு ஆளானவர்கள் நிலை என்னவாகும் என்பதை நான் சொல்லித் தெரிய வேண்டிய தில்லை உங்களுக்கு.

அவன் கோபத்திலிருந்து தப்பிக்க இஸ்லாத்தை பூமி முழுவதும் உள்ள மக்களுக்கு சொல்லி, அழைக்க வேண்டும். அவன் கருணையும், அன்பும் பெற்றாக வேண்டும் அப்படி பெற்றால் தான் சொர்க்கம் செல்ல இயலும்.

மறுமையில் சொர்க்கம் செல்வதற்கான இஸ்லாமிய அழைப்புப்பணி (நிகழ்ச்சி) மால்கம் X என்று ஓங்கி முழங்கிய நிகழ்ச்சி ஒன்றை மார்ச்–5 ஞாயிறு அன்று மாலை மக்ரீப் தொழுகைக்குப் பின் தொடங்கி நடத்தியது நீதி அமைதிக்கான மக்கள் இயக்கம். இடம் செரியன் நகர், சென்னை. அதில் அனைத்து சமுதாய மக்களை அழைத் திருந்தோம், இஸ்லாம் அல்லாத மக்கள் அதிகமாக கலந்து கொண்டார்கள் முஸ்லிம்களும் கலந்து பலன டைந்தார்கள்.

நிகழ்ச்சியின் தலைமை A.W. முஹம்மது யூசுப் அவர்கள் ஏற்று, செரியன் நகர் பொதுநல மன்றம் தலைவர் N. ஹனிபா மற்றும் தேசிய நகர் பொதுநல மன்றம் பொது செயலாளர் வி. லோகநாதன் முன்னிலையில்



சகோதரர் கமாலுத்தீன் நிகழ்ச்சி தொகுக்க குர்ஆன் வாசித்து ஆரம்பமானது.

சகோதரர் M. ஜாஃபர் வரவேற்புரை நிகழ்த்தினார். ஒடுக்கப்பட்ட மக்களின் விடுதலைக்காக போராடியவர்கள் கடைசியில் இஸ்லாத்தையே தேர்ந்தெடுத்தார்கள். அதில் மால்கம் X–ம் தவறவில்லை. அவர் சார்ந்த மக்களை அனைவரையும் இஸ்லாத்தில் இணைத்தார். ஆக ஒடுக்கப்பட்ட மக்கள் அனைவரையும் இஸ்லாத்திற்கு வாருங்கள் சமத்துவத்தோடு வாழ்வோம் என்று வரவேற்புரை முடித்தார்.

அடுத்து இஸ்லாமிய அழைப்பாளர் சகோதரர் ; ஹமீமுல் இஸ்லாம். அவர்கள் அழைப்பும் பணி ஏன்? எதற்கு என்ற தலைப்பில் உரை நிகழ்த்தினார். அதில் அவர் இறைவன் ஒருவனே என்ற ஏகத்துவத்தையும், இஸ்லாம் என்றால் கட்டுப்படுவது, கீழ்ப்படிதல் என்று அடிப்படை கோட்பாட்டை முன் வைத்து பேசி முடித்தார்கள்.

பிறகு, தாருல் இஸ்லாம் நிர்வாகிகளில் ஒருவரான சகோதரர் S.A. ரஹ்மத்துல்லா அவர்கள் மால்கம்–ல ஓர் அறிமுகம் என்ற தலைப்பில் பேச ஆரம்பித்தார்.

மால்கம் X–ன் மொத்த வாழ்வையும் எத்திவைக்க முயன்று நேரமில்லாமல் சுருக்கி பேசினார். அதில் கறுப்பின மக்கள் நாடு கடத் தப்பட்டு அடிமைத்தனம் செய்ய வைத்தது அமெரிக்கா என்றும், கறுப்பின மக்களுக்கு நேர்ந்த கொடுமைகளைபட்டியிலிட்டு வர்ணித் தார்கள். எத்தி வைத்தார்கள்.

மால்கம் X அநாதை ஆக்கப்பட்டது முதல் அவரின் தாயார் பைத்தியக்காரியாக ஆக்கி மனநிலை மருத்துவமனையின் சேர்க்கப்பட் டார் என்றும் அரசு சீர்த்திருத்தப் பள்ளியில் மால்கம் X பயனின்று இளைஞன் ஆனான், பிறகு குத்து சண்டை வீரனான வெள்ளையன் குத்துச் சண்டை வீரர்களை வென்றாலும் அது சமத்துவத்தை பெற்றுத் தரவில்லை என்று உணர்ந்தார்.

அநீதிகள் தொடர்ந்தன, கிருஸ்துவத்தின் பக்கம் சாய்ந்த தந்தையின் நிலையை உணர்ந் தார். சமத்துவம் அங்கும் இல்லை என்று ஆன பிறகு கடைசியில் இஸ்லாத்தை ஏற்றார் என்று உரை முத்திரை செய்தார்.

கடைசியாக நீதி அமைதிக்கான மக்கள் இயக்கம் தலைவர் மு. குலாம் முஹம்மத் அவர்கள் மால்கம் X கண்ட சவால்களும், சோதனைகளும் தீர்வும் என்ற தலைப்பில் பேச ஆரம்பித்தார்.



மால்கம் X இஸ்லாத்தை ஏற்றபிறகு அமெரிக்காவில் இஸ்லாம் வேகமாக பரவியது. மால்கம் X அவர்களின் பேச்சு வேகமும் விவேகமும் நிறைந்து இஸ்லாத்தை நோக்கி மக்களும் விரைந்தார்கள். அதில் குறிப்பிடத்தக்க ஒரு மாவீரன் கிளேவ் என்ற குத்துச் சண்டை வீரனின் சண்டையும், அவர் இஸ்லாத்தை ஏற்ற சூழ்நிலையும் கண்டு அமெரிக்க நாடு அதிர்ந்தன.

இன்னும் ஒருசில ஆண்டுகள் ஆனால் அமெரிக்காவேஇஸ்லாமியநாடாகமாறிவிடும் என்ற அளவில் மால்கம் X–ன் இஸ்லாமிய பிரச்சாரம் இருந்தது.

ஆம் ஒடுக்கப்பட்ட மக்கள் உலகம் முழுவதும் கொடுமைகளுக்கு ஆளாக்கப்பட்டு வருகிறார்கள் இந்தியாவிலும் தாழ்த்தப்பட்ட சமூகம், கீழ் சாதியினர் என்றும் மக்களை கொடுமைகள் செய்து சமத்துவம், சமூக நீதி, நியாயம், மனிதாபிமானம் எல்லாம் அவர் களுக்கு புறக்கணிக்கப்பட்டு ஆண்டாண்டு காலம் வாழ்வின் கீழ்நிலையில் மேல்சாதியின் காலடியில் வாழ்ந்து வருகிறார்கள்.

இவர்களை மீட்பதற்கு நம் இந்திய தலை வர்கள், பெரியார், பெரியார்தாசன், T.M. மணி, சரவணன், அம்பெத்கர் போன்றோர் போராடி கடைசியில் பெரும்பாலோர் இஸ்லாத்தை ஏற்றும் ஒடுக்கப்பட்ட மக்களுக்கு இஸ்லாம் தான் சமத்துவத்தோடு வாழ வைக்கும் ஏனெ ன்றால் அது இறைவனின் மார்க்கம் என்று புரிந்துகொண்டார்கள்.

இஸ்லாத்தின் பக்கமே மக்களை அழைத்தார்கள்.

தலித்கள் அம்பெத்கர் போலவே போராட முடியாது. அதற்கான கல்வி தகுதி, அறிவும், ஆற்றலும் இங்கே யாருக்கும் கிடையாது. மேல் சாதியின மக்களை எதிர்த்து உங்களால் சமத்துவ வாழ்வு வாழருடியவழி நீங்கள் இஸ்லாத்தை ஏற்பதே சிறந்தது.

இஸ்லாம் ஒன்றே விதி, இஸ்லாம் ஒன்றே தீர்வு என்று உரைநிறைவு செய்தார்கள்.

சிலவற்றையே சுட்டிக்காட்டியுள்ளோம்

சிலவற்றை சகோதரர் கமாலுத்தீன் நன்றியுரையில் ஒருங்கிணைந்து ஒத்துழைத்த இஸ்லாமிய அமைப்புக்கும், கட்சிகளுக்கும் நன்றி கூறி இப்பணியின் மூலம் நம் அனை வரின் பாவமும் மன்னித்து அல்லாஹ் நம்மீது கருணை பொழிவானாக என்று துவாவுடன் நிகழ்ச்சியை நிறைவு செய்தார்.

எல்லாம் வல்ல அல்லாஹ் உவந்தளித்த உன்னத மார்க்கமாம் இஸ்லாம் போதிக்கின்றசகோதரத்துவம், சமத்துவம் ஆகிய பொன்னாரிய கோட்பாட்டினை தம் உதிரத்தோடும் சதைகளோடும் உணர்வுகளோடும் கலந்திட்ட அரபுக்கள், பதிமூன்று நூற்றாண்டுகளாக அவற்றைப் பிரச்சாரம் செய்துவந்த அரபுக்கள் மத்தியில் கி.பி. பத்தொண்பதாம் நூற்றாண்டின் இறுதிவாக்கில் இனவெறி நோய் பரவியது கசப்பான அதிர்ச்சியான உண்மை.

இதற்கு பல காரணங்கள் அவற்றுள்சிலபுறக்காரணிகள், சில அகக்காரணிகள்....

இனவெறி அதனால் வரும் அகம்பாவம் இவை மிக முக்கிய அகக்காரணிகளாகும். சில துருக்கி அதிகாரிகள் தம் செயல்கள் வழியாகவும் நடவடிக்கை மூலமும் இதை வெளிப்படுத்தினர்.

இது அரபுக்கள் மத்தியில் சஞ்சலத்தை ஏற்படுத்தியது. 'நாம் ஒரு காலனியாதிக்கத்தின் கீழ் வாழ்கிறோம். நாம்



அபுல்ஹசன் அலீ நத்வீ

இரண்டாம் தரக்குடி மக்களாக நடத்தப்படுகிறோம் என்ற உணர்வை அரபுக்களிடம் ஏற்படுத்தியது.

இதன்றி, அரபுமொழிக்கு உரிய மரியாதை தராமல் துருக்கி மொழியே ஆட்சியாளர்கள் மொழி. அதுவே அரசு மொழி என்ற கருதியதும் அரபுக்கள் மத்தியில் "நாம் ஓரங்கட்டடப்படுகிறோம்'' என்ற எண்ணத்தை அதிகப்படுத்தியது. இவ்வாறான காரணங்களால்அரபுக்களிடையே இனவாத உணர்வு பரவியது.

இதற்கிடையில் துருக்கியர்கள் தனது ஆட்சி கடைசிக் காலத்தில் "ஒருங்கிணைந்த இஸ்லாமிய நாடுகள். (IslamicUnion) ஒன்றுஅவசியம் தேவை" என்ற பிரச்சாரத்தை முன்னெடுத்தபோது அது தமது கவுரத்துக்கு விடப்பட்ட சவால் என்று அரபுக்கள் நினைத்தனர். அரபு இனத்தின் மதிப்பு பாழ்படுத்தப்படுவதாகக் கருதினர். எனவே இனவெறி உணர்வு முன்னெழுந்தது.

இப்படி துருக்கியர்களுக்கும் அரபுக்களுக்கும் மத்தியில் அரசியல் ரீதியாக ஏற்பட்ட இந்த இடைவெளியை மேலும் அதிகப்படுத்திட முனைப்புடன் வேலை செய்தனர் மூத்த கிறிஸ்தவக் கலாச்சார வாதிகள்.

இவர்களுக்கும் துருக்கியர்களுக்கும் மத ரீதியான, நம்பிக்கை ரீதியான ஒருங்கிணைப்பு இல்லை. இந்த கிறிஸ்தவக் கலாச்சார வாதிகள் தமது இலக்கியங்கள், கவிதைகள், தத்துவங்கள், அரசியல் நடவடிக்கைகள் ஆகியவற்றில் உருது வீட்டிருந்த இனவாதம், தேசிய வாதம் இனவாதக் கோட்பாடு ஆகியவற்றை அவர்கள் எடுத்துக் கொண்டனர், கற்றுக்கொண்டனர்.

# அரபுக்களிடம் நிலவிய இனவாதச் சிந்தனை

இதுவே அகக்காரணி அடுத்து புறக்காரணி என்னவென்று பார்ப்போம்...

உஸ்மானியப் பேரரசு வீழ்ந்திட வேண்டும். அதன்பிடி தளர்ந்திட வேண்டும். கிழக்குலகம் பூராவும் பரவியிருந்த அதன் அரசியல், ஆன்மிக செல்வாக்கு சரிந்திட வேண்டும் என்று நீண்ட நெடுங்காலமாகவே கனவு கண்டு கொண் டிருந்த மேற்கத்திய அரசியல் தலைவர்களும் சதிகாரர்களும் இதை அரிய வாய்ப்பாக பயன்படுத்திக் கொண்டனர்.

பேரரசைப் பிடித்த அரபு இளைஞர்கள் சிலரின் நாடி நரம்புகளில் ஊடுருவிப் பாய்ந் திருந்த இனவாதச் சிந்தனை வீரியம் குன்றாமல் பார்த்துக்கொண்டனர் அந்த மேற்கத்திய வாதிகள்.

தமது நூல்கள் இலக்கியங்கள் வழியாகவும் அரபு நாட்டின் பெரு நகரங்களுக்கு சுற்றுப் பயணங்களை மேற்கொண்டே இருந்தனர். அரபுலகின் சிந்தனைவாதிகள் எழுத்தாளர்கள் இனக்குழுவின் தலைவர்கள் ஆகியோரையெல் லாம் சந்தித்து, “நாங்கள் உங்களின் நலம் விரும் பிகள், உங்களின் உரிமைகளைக் காக்க விரும்பு பவர்கள், உங்களிடமிருந்து ஹிஜ்ரி பத்தாம் நூற்ற ாண்டில் கிலாபத் என்ற தலைமைத்துவத்தைப் பறித்துக் கொண்ட கான்ஸ்டான்டி நோபிள் (துருக்கி – இஸ்தான்புல்) இடமிருந்து அதை மீட்டு உங்களிடமே ஒப்படைக்க விரும்பு கிறோம்.

கிலாபத் எனும் தலைமை மக்கா, மதீனா ஆகிய இரு புனித நகரங்களில் ஒன்றிலோ அல்லது அரபு இஸ்லாமிய நகரங்களில் ஒன்றிலோ தான் இருந்திட வேண்டும் என்றெல் லாம் வெறியூட்டினார், ஆசை காட்டினர்.

இந்த சிந்தனை அரபு மக்களின் அறிவை ஆக்கிரமித்தது எப்படி? அது எப்போது தன் வேலையைக் காட்டியது? தொடக்கமாக அரபுலகின் எந்தப் பகுதியில் மேற்கத்திய சிந்தனையாளர்கள் விளையாட ஆரம்பித் தனர்? அரபுக்கள் இதை ஏற்றதும், இதற்குச் சம்மதித்தும் எப்படி? பிறகு இது ஒவ்வோர் இடமாகப் பரவியது எப்படி?

இவற்றையெல்லாம் ஆங்கில நாட்டின் அறிஞர்பர்ட் ஸ்கேவன் பளண்ட் அவர்கள் கி.பி. 1882–ல் எழுதி வெளியிட்ட Future of Islam இஸ்லாத்தின் எதிர்காலம் எனும் நூலில் விரிவாகக் கூறியிருக்கிறார். அது இஸ்லாமிய அரபு தேசங்களில் பெரும் வரவேற்பைப் பெற்ற நூல். அரபி, உர்து ஆகிய மொழிகளில் மொழியாக்கம் செய்யப்பட்டு பல வெளியீடு களைக் கண்ட நூல்.

அந்நூலின சில பகுதிகளை உங்கள் முன்னே வைக்கிறேன் வாதியுங்கள்...

அந்நூலின் முன்னுரையில்

“எகிப்து நாட்டின் தலைவர்களெல்லாம் கிலாபத் பிரச்சனையில் மிக்க நடுநிலையான தொரு வழியையே தெரிவு செய்தனர். இஸ் லாத்தில் விரிசலை ஏற்படுத்தும்படி அவர்கள் பேசவுமில்லை அவர்கள் அதை விரும்பவு மில்லை. சர்ச்சைகள், சச்சரவுகள் எதிலும் அவர் கள் சிக்கவில்லை. பூரண விடுதலை ஒன்றே குறிக்கோள் என்று செயல்பட்டனர். அதற்காக தம் வலிமை அனைத்தையும் திரட்டிச் செயல் பட்டனர்.

“சுல்தான் அப்துல் ஹமீது அவர்களைப் பொருத்த அளவில் மற்றவரையும் விட அவர் தகுதியானவரே. அமீருல் முஃமினீன் இறை நம்பிக்கையாளர்களின் தலைவர்போல் அவர் ஏற்க்கப்பட வேண்டும். உஸ்மானிய கிலாஃபத் தானாக வீழும் வரை கிலாபத்துக்காக நடை பெற்ற இரண்டாவது எழுச்சியும் இதையே தெளிவாகக் காட்டுகிறது. இதுவே எகிப்தியர் களின் உறுதியான நிலைப்பாடு. இப்படிப்பட்ட தெள்ளத் தெளிவான முடிவை எடுத்திட அவர்களால் மட்டுமே முடியும்”

அறிஞர் ப்ளண்ட் மேலும் கூறுகிறார்...

சொற்ப வருடங்கள் நாம் பொறுத்திருந்தால் இந்த வெற்றி பெரிய தாராளமான வெற்றியாக ஆகியிருக்கும். ஒருசிலர் மட்டுமே இதற்கு மாற்றுக் கருத்தை முன் வைத்திருப்பர். சுல்தான் அப்துல் ஹமீது அவர்கள் இறந்தாலோ அல்லது பதவியைத் துறந்தாலோ கிலாஃபத்தின் கேந்திரமாக எகிப்தின் தலைநகர் கெய்ரோ ஆவதற்கு வழி பிறந்திருக்கும். அரபுக்களும்

தாம் இழந்த மார்க்கத் தலைமையை திரும்பப் பெறும் வாய்ப்பு ஏற்பட்டிருக்கும்.''

மேலும் அதேநாளில் ''மக்காதான் உண்மையான தலைநகர்'' என்ற அத்தியாயத்தில் அவர் கூறுகிறார்.

''வரலாற்றைப் பின்நோக்கிப் பார்த்தால் (ஐரோப்பாவின் கான்ஸ்டாண்டி நோபிளிலிருந்து ஆசியாவின் ஏதேனுமொரு நகரத்துக்கு) கிலாஃபத்தின் தலைநகரை மாற்றுவதற்கு பெரும் பயணம் முயற்சி செய்திட வேண்டியதிருக்கும் என்பது முஸ்லிம் அறிவு ஜீவிகளுக்கு தெள்ளத் தெளிவாகத் தெரிந்தது''



''மார்க்கத்தின் மையமும் அதன் தலைநகரும் அரேபிய தீபகற்பத்தில்தான் இருக்க வேண்டும். அது இஸ்லாத்தில் தொட்டில், வஹீ, இல்ஹாம் எனப்படும் இறை அறிவிப்பின் தொட்டில் மார்க்கச் சட்டத்தின் தன்மைகள் அனைத்தையும் பாங்குறப் பின்பற்றும் வாய்ப்பை பெற்ற நிகரற்ற ஊரும் அதுவே. தொலைத் தூர நாடுகளுக்கும் கூட அங்கிருந்து இஸ்லாமிய ஆட்சியைச் செலுத்திட முடியும்''.

''அங்கே யூதர்களும் கிறிஸ்தவர்களும் இல்லை. அதனால் அவர்களுடன் சண்டையும், சச்சரவும் ஏற்படும் பேச்சுக்கே இடமில்லை''

''அது செல்வச் செழிப்பான வளமான நாடும் இல்லை. அதனால் மேற்கத்திய நாடுகளுக்கு அதைப்பிடித்திட ஆர்வம் வராது''

''அங்கிருக்கும் கலீஃபா அந்நிய நாட்டின் படை குறித்த அச்சுறுத்தலுக்கோ ஃபிரான்ஸ் இங்கிலாந்து ஆகிய நாட்டின் தூதர்களின் மிரட்டலுக்கோ அஞ்ச வேண்டியதில்லை''

''இறைத் தூதரின் பிரதி பகுதியாய் சுதந்திரமாக அவரால் செயலாற்ற முடியும். இதனால் அழுக்குகள் கசடுகள் ஏதுமற்ற தூயதாக இஸ்லாம் ஆகிவிடும். இவ்வாறான காரணங்களால் மக்காவோ மதீனாவோ தலைநகர் எதுவாயினும் கிலாஃபத் அதற்கு உரியவர்களிடம் திரும்பிவந்து சேர்ந்துவிடும்''.

மேலும் ப்ளண்ட் கூறுகிறார்

''கான்ஸ்டாண்டிநோபிளிலிருந்து மக்காவுக்கு ஆன்மிகத் தலைநகரை இடம் மாற்றுவது இயற்கையானதும் நம்பிக்கைகளிலும் இது பெரிய பாதிப்பை ஏற்படுத்தாது. அறிஞர்களின் சிந்தனைகளும் எண்ணவோட்டமும் இதை முழுமையாக ஏற்கும்.''

''மக்காவும், மதீனாவும் ஷரீஅத்தைத் தாங்கி நிற்கும் புனித நகரங்கள், புனித எல்லைக்கு வெளியே வாழ்வோருக்கும் அவைதான் ஆன்மிக நிலைக்களம். அவைதான் இனியும் ஆன்மிகத்தின் கேந்திரமாக ஆகப் போகிறது. இதைப்பற்றி பேச்சை எடுத்தாலே அனைவரும் இதையே ஆதரிக்கின்றனர். துருக்கியின் ஆதரவாளர்களைத் தவிர அறிஞர்கள் அனைவருமே இதை ஏற்கவே செய்வார்கள் என்றும் அவர்கள் நம்பினர்.''

''என்னைப் பொறுத்தவரை'' கிறிஸ்தவத்தின் தலைநகர் ரோம் என்ற சொல் சர்வ சாதாரணமாக புழக்கத்திலிருப்பதை நாம் கேள்விப்படுகிறோம். அதேபோல்தான் ''கிலாஃபத்தின் தலைநகர் மக்கா'' என்ற சொல்லும் பொதுச் சிந்தனையில் பெரும் ஏற்பைப் பெறும். இத்துடன் ''குறைஷிகளிடம்தான் தலைமைப் பொறுப்பு இருக்க வேண்டும்'' என்ற சொல்லாட்சியையும் சேர்த்தே கூறினால் குறைந்தபட்சம் அரபு மக்களிடையே அது இன்ப அதிர்ச்சியை ஏற்படுத்தும். அரபுக்களின் தனித்துவம் இதுபோன்ற தேர்வுக்கு துணை நிற்கும்''

''இன்னொன்றையும் நாம் மறந்துவிடக் கூடாது. மொரொக்கோவிலிருந்து போஷ்ஹர் வரை அரபுக்களின் செல்வாக்கு மிக்க பிரதேசம் தான். விரிந்த இந்த பிராந்தியத்தில்தான் இந்திய முஸ்லிம்களும், மலேயா முஸ்லிம்களும் இருக்கின்றனர். அது மாத்திரமன்று,

இஸ்லாமிய இனம் இந்தப்பகுதிக்குள்தான் சுற்றி சுழன்று வரும். துருக்கியர்களைத் தவிர. (அவர்கள் ஐரோப்பியர்கள் என்பதால் இந்தப் பிராந்தியத்தின் கீழ் அவர்கள் இல்லை) காலப் போக்கில் தம் முக்கியத்துவத்தைப் படிப்படி யாக இழந்து விடுவார்கள்" (Source : Future of Islam )

(கி.பி. 1914–1918 ஆண்டுகளில்) முதலாம் உலகப்போர் நடந்து முடிந்தபின் உஸ்மானியப் பேரரசிலிருந்து பிரிந்து சென்றிட அரபு நாடுகளுக்கு வாய்ப்பு ஏற்பட்டது. நேச நாடுகள் இதை ஓதி தங்கமான வாய்ப்பாகப் பயன்படுத்தினர் அரபு இனவாதத்தை ஊதிப் பெருக்கி லாரன்ஸ் என்ற சூழ்ச்சிக்காரன் இன வெறியைப் பற்றவைத்தான். துருக்கியர்களுக்கு எதிராக அரபு மக்களைத் தூண்டினார்கள்.

ஹிஜாஸ் மாகாணத்தில் ஷரீஃப்ஹுஸைன் போர்க்கொடி தூக்கினார். சிரியா மக்கள் சிரியாவில் கிளர்ந்து எழுந்தனர். இஸ்லாத்தின் வல்லமையைக் காத்து அதற்கு அரணாக நின்ற துருக்கி முஸ்லிம்களின் அணியில் நீடித்திருப் பதைவிட (முதல் உலகப் போரில் துருக்கியை எதிர்த்த நேச நாடுகளின் அணியில் இணை வதே மேல் என்று அரபுக்களும் எண்ணத் தலைப் பட்டனர்.

இதுகுறித்து குர்ஆனும் நபிவழியும் சொல்வதென்ன என்பதைப் பற்றியெல்லாம் கவலைப்படாமல் (இஸ்லாத்தின் எதிரிகள்) ஐரோப்பியர்களின் பொய்யான வாக்குறுதி களை நம்பினர். (துருக்கியிடமிருந்து அரபு நாட்டுக்கு கிலாஃபத்தின் தலைமைபீடத்தை மாற்றும்) அரசியல் மாற்றம் ஒரு சீர்த்திருத்தமே. பலப்பிரயோகத்தின் மூலமே இது சாத்தியம் என்று நம்பினர் அரபுக்கள். இதனால் சிரியா வில் ஹாஷிம் குலத்தவர்களின் அரேபிய அரசு வந்தது. பின்னர் நேச நாட்டினர் அரபுக் களுடன் செய்திருந்த ஒப்பந்தத்தை முறித்தனர். அதைப் பற்றிப் பேசவே மறுத்தனர். இதனால் சிரியாவில் ஏற்பட்ட அரபியே அரசு தோன்றிய வேகத்தில் வீழ்ந்ததை அனைவரும் அறிவோம்.

இதன் பின்னர் அரபுக்கள் அரபுக்கள் அல்லாதோர் என்ற இனவாதக் கோட்பாடு தழைத்தது. உண்மையைச் சொன்னால் இந்த இனவாதம் அரபு நாடுகளில் உருவானதல்ல. அது மேற்கத்தியவர்களின் கோட்பாடே இது ஒரு தனித் தத்துவமாக பிரத்யேகக் கோட் பாடாக வடிவமெடுத்து நின்றது.

அதற்கென சில சின்னங்கள், புனிதங்கள், அதைக் காத்திட பெரும் முயற்சிகள் அதைப் பற்றிய பெருமித உணர்வுகள் என ஒரு மதத்துக் கான எல்லாக் கூறுகளுடனும் அரேபிய இன வாதம் வளர்ந்தது. அரபுக் கலாச்சாரவாதிகள் குறிப்பாக இளைஞர்கள் அதைப் பெரிதாய் போற்றி அதற்காக சேவகம் செய்தனர்.

இவர்களெல்லாம் பல்வேறு காரணங்களால் மார்க்கத்துடனான தொடர்பில் பலஹீனமான வர்களாக இருந்தனர். குறுகிய காலத்திலேயே பெரும் பதவிகளையும், பரிசுகளையும் பெற்றிட வேண்டும் என்ற வெறி இவர்களிடம் ஏற்பட்டிருந்தது. நாகரீகத்திலும் முன்னேற்றத் திலும் மேற்கத்தியவர்களுக்குப் போட்டியாக வந்திட வேண்டும் என்று துடித்தனர். இதற்கு ஒரேவழி அரேபிய இனவாதமே என்று கருதினர்.

மேற்கத்திய நாடுகள் அரபு நாடுகளின் நடுவே யூதர்களுக்கென ஓர் அரசை உருவாக்கி அதைப் பராமரித்துப் பாதுகாத்து வருவது அரபுக்கள் மத்தியில் கடும் விரக்தியை ஏற்படுத்தியது. இதை ஆக்ரோஷமாகவும் மூர்க்கமாகவும் எதிர்த்திட அரபு இனவாதமே ஒரே வழி என்று முடிவுக்கு வந்தனர். சிலர் இதில் வரம்பு மீறிச் சென்றனர். இதற்கு இன வாதத்தை தவிர வேறு தீர்வே இல்லை என்றன ர். இஸ்ரேல் என்ற எதிரியை அழித்தொழிக்கும் ஆயுதமாக அரபுக்கள் இழந்த பெருமையை மீட்டுத் தரும் அருஞ்சாதனமாக இருப்பது இனவாதம் ஒன்றே என்று நம்பினர்.

பரிதாபம், இனவாதம் அவர்களுக்கு எதிர் பார்த்த பலனைத் தரவில்லை. வீரம், தீரம், நம்பிக்கை எல்லாவற்றையும் இழந்து தொலைத்து தவித்தனர். கி.பி. 1967–ல் நடை பெற்ற அரபு நாடுகளுக்கும் இஸ்ரேலுக்கு இடை யிலான யுத்தத்தில் இந்த அரேபிய இனவாதம் சிறு அற்புதத்தைக் கூட செய்யவில்லை என்பது தான் சோகம். – தமிழ் வடிவம் இல்யாஸ் ரியாஜி

எது முதலில்?

# தம்கீன், தக்வீன்

**ஜிஹாத் : அல்லாஹ்வின் பாதையில் அர்ப்பணிப்புடன் பணியாற்றுவது...**

**தர்பியா : நம்மைப் பண்படுத்துவதற்கான பயிற்சி**

''ஜிஹாதைவிட முதன்மையானது தர்பியாதான்'' என்றுதான் இஸ்லாமிய சீர்த்திருத்தச் செம்மல்கள் கூறுகின்றனர்.

(தம்கீன்) ஆட்சியைப் பிடிப்பதைவிட (தக்வீன்) ஒரு சமுதாயத்தை உருவாக்குவதே முதன்மையானது.

பண்பாட்டுப் பயிற்சி (தர்பியா) என்று நாம் கூறுவது (தக்வீன்) சமுதாய உருவாக்கத்தைத்தான்.

அல்லாஹ்வை நோக்கி மக்களை அழைக்கும் (தஅவா) பணியை முனைப்புடன் செய்கின்ற, மார்க்கம் இடுகின்ற கட்டளை சிரமேற்தாங்கிச் செய்கின்ற, சோம்பேறியாகவோ கஞ்சனாகவோ இல்லாத அல்லாஹ்வின் பாதையில் ஏற்படுகின்ற இன்னல்களை இன்முகத்துடன் ஏற்கின்ற, அதே நேரத்தில் செயல் களத்தில் முன்னே நின்று பணியாற்றுவதில் முன்னோடியான சமுதாயத்தை உருவாக்குவதுதான் முதன்மையானது.

இஸ்லாத்தின் நடமாடும் உருவமாக இவர்களைப் பிற மக்கள் பார்க்கும் அளவுக்கு இவர்களின் அமைப்புப் பணியும் இதர மார்க்கப்பணிகளும் இருக்கும்படியான சமுதாயத்தை உருவாக்க வேண்டும்.

இந்த (தர்பியா அல்லது தக்வீன் என்ற) சமுதாயத்தை உருவாக்கும் பணி எப்போதும் நடைபெற்றுக் கொண்டே இருக்க வேண்டும். ஆனால் புதிய மார்க்கத்தை, புதிய கொள்கையுடன் ஒரு சமுதாயத்தை உருவாக்க விரும்பும் போது இதை மேலும் முனைப்புடன் செய்வது அவசியம்.

இதுபோலவே ஒரு மார்க்கம் பலவீனமடையும்போது ஒரு சமுதாயத்தை மரண பயமும் உலக மோகமும் ஆட்டிப்படைக்கும் போது அந்த மார்க்கத்தைப் புதுப்பிப்பிக்க வேண்டிய தேவை ஏற்படும்போது தன் சுயத்தை இழந்து செத்துக் கொண்டிருக்கும் ஒரு சமுதாயத்துக்கு உயிரூட்டும்போது அந்த சமுதாயத்திலிருந்து புதியதொரு தலைமுறையை உருவாக்குவதும் அதற்கு புத்துணர்வும் புத்துயிரும் ஊட்டுவதும் அவசியத்திலும் அவசியமாகிறது.

இஸ்லாத்தைப் பொருத்த அளவில் ஒரு சமுதாய உருவாக்கும் என்பது உண்மையான



இமாம் யூசுப் அல்கர்லாவி

இறை நம்பிக்கையுள்ள ஒரு தலைமுறையை உவாக்குவதாகும்.

அது எழுச்சியின் கொடியை சீர்திருத்தக் காடியை ஏந்திடும் தகுதியுள்ளதாக இருந்திட வேண்டும்.

ஒரு சமுதாயத்திடம் மாற்றத்தை ஏற்படுத்தி அந்த சமுதாயத்தைக் கொண்டே ஓர் அரசை நிறுவிட வேண்டுமென்றால் என்ன பாடுபாட வேண்டியிருக்கும்! அவை அத்தனையையும் தாங்கிப் பணி செய்யும் தலைமுறையாக அது இருக்க வேண்டும்.

*அல்லாஹ்வின் தூதரிடம் உங்களுக்கு ஓர் அழகிய முன் மாதிரி இருக்கிறது ( 33 : 21 ) என்று அல்லாஹ் கூறுகின்றானே!*

சமுதாய உருவாக்கத்திலும் பெருமானார் (ஸல்) வின்

வாழ்வில் நமக்கு முன் மாதிரி உண்டு, அவர்களின் பதிமூன்றாண்டு கால மக்கா வாழ்வில் இறங்கிய வசனங்களெல்லாம் சமுதாய உருவாக்கத்துக்கான வசனங்கள்.

சிந்தனை, பண்பாடு, இறை நம்பிக்கை ஆகியவற்றில் முழுமைபெற்ற ஒரு தலைமுறையை அவ்வசனங்கள் உருவாக்கின.

சரியான கொள்கை, அழகான பண்பாடு நல்லொழுக்கம் ஆகியவற்றையே மையப் படுத்தி அமைந்திருந்தன அவ்வசனங்கள்.

அஞ்ஞானக் கோட்டிபாட்டின் அழுக்கு படிந்த கொள்கைகளை விரட்டி அதைக் கடைப்பிடிப்பதால் ஏற்படும் ஆபத்துகளை விளக்கி அஞ்ஞான சிந்தைகளிலிருந்து மனிதனை மீட்டெடுத்து இறைவனுடன் இறுக்கமாகப் பிணைத்தன.

முஸ்ஸம்மில் என்றோர் அத்தியாயம் அருள்மறையில் உண்டு. அது ஆரம்பக் காலக் கட்டத்தில் அருளப்பட்டதே, அதில் அல்லாஹ் இப்படிக் கூறுகிறான்...



“போர்வை போர்த்திக் கொண்டிருப்பவரே இரவில் கொஞ்ச நேரம் தவிர எழுந்து தொழுவீராக, அதில் பாதி (நேரம்) அல்லது அதைவிடச் சற்று குறைத்துக் கொள்வீராக, அல்லது அதைவிட அதிகப்படுத்திக் கொள்வீராக. மேலும் குர்ஆனை தெளிவாக, நிறுத்தி, நிறுத்தி ஓதுவீராக, நிச்சயமாக நாம் கனமான ஒரு சொல்லை உம்மீது போடுவோம். (73 : 1–5)

இவ்விரண்டு பள்ளிக் கூடங்களிலும் பெருமானார் பெற்ற ஆழமானப் பாடம் “பாரமான சொல்லை” ஏந்திக் கொள்ளுவதற்கு அவர்களைத் தயார் படுத்தியது. எந்த பாரமான சொல்லை அவர்கள் மீது இறக்கி வைக்கப்போவதாக இறைவன் கூறினானோ அதை அவர்கள் எதிர்பார்த்துக் கொண்டிருந் தார்கள். அமானத் (அமானிதம்) என்ற பாரம் தான் அது.

ஆரம்பக் கால வசனங்கள் இப்படித்தான் அகீதா எனும் கொள்கை சார்ந்த நம்பிக்கை களையும் புரிதல்களையும் இதயத்தில் ஊன்றின.

பெருமதிமிக்க பண்புகளையும், சிறப்பு இயல்புகளையும் விதைத்தன.

ஜாஹிலிய்யா எனும் அஞ்ஞான அழுக்கு களிலிருந்து அவர்களின் இதயங்களையும் சிந்தனைகளையும் அவை சுத்தப்படுத்தின.

நிலைகுலையாமை, எதிர்கொள்கை யுடையோரிடமிருந்து வரும் இன்னல்களை சகித்துக் கொள்தல், மனத்திண்மை, தவறான கொள்கைகளை எதிர்த்தல், உண்மையான உதவும் மனப்பாங்கு ஆகிய ஈமானின் நற்பண்புகளை அவர்களிடம் அவ்வசனங்கள் ஏற்படுத்தின.

தம் இனத்தலைவர்களையும் பிரமுகர் களையும் பெற்றோரையும் மூதாதையர்களை யும் குருட்டுத்தனமாகப் பின்பற்றவிடாமல் அவர்களின் சிந்தனையைக் காப்பாற்றின.

இதெல்லாம், “தீய சக்திகளை வணங்கி வழிபடுவோருடன் மோதுங்கள். இணை வைப்பவர்களுடன் ஆயுதம் ஏந்திப் போரி டுங்கள் என்று கட்டளையிடுகின்ற ஒரு வசனம் கூட இறங்குவதற்கு முன்னரே நடந்துவிட்டது.

ஆம்! சமுதாய உருவாக்கம் என்பது நடந்து முடிந்த பிறகே அநீதிக்கு எதிரான போர் பற்றிய கட்டளைகள் வந்தன.

மக்கா வாழ்க்கையின்போது நபித் தோழர்கள் பெருமானாரிடம் வந்து தமது பரிதாபச் சூழ்நிலைகளைக் கூறினார்கள்.

காயங்களுடன், ரத்தம் வடிய, வடிய அடி பட்டு வந்தார்கள். தம்மைத் தாமே காப்பாற்றிக் கொள்ள ஆயுதம் ஏந்த அனுமதி கேட்டனர். மார்க்கத்தின் எதிரிகளையும் தம்முடைய எதிரிகளையும் எதிர்த்துப் போராட அனுமதி கேட்டனர். ஆனால்பெருமானாரோ அல்லாஹ் சொன்னதையே சொன்னார்கள் : "உங்களை கட்டுப்படுத்திக் கொள்ளுங்கள். தொழுகை யைக் கடைபிடியுங்கள். தர்மம் வழங்குங்கள்" (4:77) இதுவே அல்லாஹ்வின் கட்டளை.

இதன் பொருள் இஸ்லாத்தின் அதி முக்கியப்பகுதியான ஜிஹாதைப் புற க்கணியுங்கள் என்பதல்ல. இப்போது எதற்கு முன்னுரிமை தருவது என்பதே நம் பேச்சு.

சமுதாய உருவாக்கமும் தலைமுறையை உருவாக்குவதுமே முதல்பணி என்பது பொருள்.

தலைமுறை உருவாக்கம், பண்படுத்தும் பயிற்சி என்பதில் உரிய நேரத்தில் "ஜிஹாத்" –க்குப் புறப்படும் கூட்டத்தை உருவாக்குவதும் அடங்கும்.

சமுதாய உருவாக்கத்துக்கான மக்கா வாழ்வில் ஆரம்பக் கட்டத்தில் இறக்கியருளப் பட்ட முஸ்ஸம்மில் என்ற அதே அத்தி யாத்தின் கடைசி வசனம் இப்படிக் கூறுகிறது.

"நீங்கள் குர்ஆனில் உங்களுக்கு சுலபமான அளவுக்கு ஓதுங்கள். (ஏனெனில்) நோயாளிகளும் அல்லாஹ் வின் அருளை (செல்வத்தை)த் தேடி பூமியில் பயணம் செல்பவர்களும் அல்லாஹ்வின் பாதையில் போர் புரியக் கூடியவர்களும் உங்களில் இருப்பார்கள் என்பதை அல்லாஹ் அறிந்துள்ளான் ( 73 : 20 )



அதாவது இனி வரும் நாட்களில் ஆயுதப் போராட்டம் வரும். அது வாள், ஈட்டி ஆகியவற்றால் நடக்கும் என்ற கருத்து இவ்வசனத்தில் உள்ளது.

ஆனால் பிரச்சாரம், உரை, திருக்குர்ஆனை எடுத்துரைத்தல் என்ற ஜிஹாத் ஆரம்ப நாள் முதலே உண்டு. மக்காவில் இறங்கிய அல்ஃபுர்கான் அத்தியாயத்தில் ஒரு வசனம் இப்படிக் கூறுகிறது.

"இறை மறுப்பாளர்களுக்கு (நபியே) நீர் கட்டுப்படாதீர். அதை குர்ஆனைக் கொண்டு அவர்களிடம் பெரிய ஜிஹாத் செய்வீராக" ( 25 : 52 )

இது ஒரு ஜிஹாத் என்றால் பொறுமை நிலைகுலையாமை, அல்லாஹ்வின் பாதையில் மக்களை அழைக்கும் பணியில் ஏற்படும் இன்ன ல்களை இன்முகத்துடன் ஏற்பது ஆகியவையும் ஜிஹாத்தான்.

இதோ அல்லாஹ் கூறுகிறான் :

"நீங்கள் ஈமான் கொண்டிருக்கிறோம்" என்று கூறுவதால் (மட்டும்) அவர்கள் சோதனைக் குள்ளாக்கப்படாமல் விட்டு விடுபடுவார்கள் என்று மனிதர்கள் எண்ணிக் கொண்டார்கள்.

நிச்சயமாக அவர்களுக்கும் முன்னிருந் தோரையும் நாம் சோதித்திருக்கிறோம். எனவே நிச்சயமாக அல்லாஹ் உண்மை பேசுபவர் களையும் அறிவான், பொய்யுரைப் பவர்களை யும் அறிவான் ( 29 : 23 )

பின்னர் இப்படிச் சொல் கிறான் : யார் அல்லாஹ்வின் பாதையில் உழைக்கிறாரோ அவர் தமக்காகவே உழைக் கிறார். நிச்சயமாக அல்லாஹ் அகிலத்தவர்களின் (உதவி) தேவைப்படாதவன் ( 29 : 6 ). ஆக நாம் கூறிக்கொண்டி ருக்கும் மனித உருவாக்கம் என்பதும் ஜிஹாத்–ன் இன்னொரு வகைதான்.



# பண மதிப்பு நீக்க நடிவடிக்கை

ரூ. 500 மற்றும் ரூ. 1000 நோட்டு செல்லாது என்ற அறிவிப்பால் 4 லட்சம் தொழிலாளர்கள் ஏற்கனவே வேலை இழந்துவிட்டனர் என்று (Financial Express) ஃபினான்சியல் எக்ஸ்பிரஸ் பத்திரிகைநவம்பர்24-ந்தேதி செய்தி வெளியிட்டுள்ளது.

தொழிலாளர்களை சார்ந்து இருக்கின்ற ஜவுளி மற்றும் ஆடை உற்பத்தித் துறை, தோல் உற்பத்தித்துறை மற்றும் நகை உற்பத்தித்துறை கடுமையான பாதிப்புகளுக்கு உள்ளாகியிருக்கின்றது. பெரும்பாலும் தினக்கூலிகள் தங்கள் வேலையை இழந்துள்ளனர். காரணம் பணத்தட்டுப்பாடு ஏற்பட்டது, பழைய நோட்டுகளை மதிப்பிழக்க செய்தது தான். ஆடை மற்றும் ஜவுளி உற்பத்தித் துறையில் மட்டும் கிட்டதட்ட 13.2 கோடி தொழிலாளர்கள் பணியாற்றுகிறார்கள். இவர்கள் யாவரும் தின அல்லது வாரக்கூலி பெறுபவர்கள். இவர்களில் ஐந்தில் ஒரு பகுதியினர் மரணப்பிடியில் தள்ளப்பட்டுள்ளனர்.

ஆடை மற்றும் ஜவுளி உற்பத்தித்துறை கேந்திரமான திருப்பூர் போன்ற பகுதிகளில் 70 சதவீத பேர் வட மற்றும் வட கிழக்கு மாநிலங்களிலிருந்து வந்து பணிபுரிகின்றனர். இவர்களில் பெரும்பாலானவர்கள் வங்கி கணக்கு இல்லாதவர்கள். தோல் உற்பத்தித் துறையில் 2.5 லட்சம் பேர் தினக்கூலி பெறும் தொழிலாளர்கள். இவர்களின் வாழ்வாதாரம் இப்போது கேள்விக் குறியாக்கப்பட்டிருக்கின்றது.

நகை உற்பத்தித்துறையில் 15-20 சதவீதம் பேர் தினக் கூலி பெறும் தொழிலாளர்கள். இவர்கள் இப்போது வேலையின்றி தவிக்கின்றனர். இப்படி பல்வேறு உற்பத்தித் துறையை சார்ந்த 4 லட்சம் பேர் வேலையிழந்து விட்டதாக கூறுகிறது.

## வீழ்ச்சியில் உற்பத்தித்துறை..? தொடரும் வேலை இழப்புகள்..?



## சரிவைக்கண்ட சிமெண்ட் உற்பத்தி

பணமதிப்பு நீக்க நடிவடிக்கையின் தாக்கத்தால் கடந்த 15 ஆண்டுகளில் இல்லாத அளவு சிமெண்ட் உற்பத்தியில் சரிவு முதல் முறையாக ஏற்பட்டுள்ளது. பணத்தட்டுப்பாட்டின் காரணமாக சிமெண்ட் தேவை குறைந்து விட்டது. இந்தியாவில் உள்ள சிமெண்ட் தொழிற் சாலைகள் 420 மில்லியன் டன்கள் கொள்திறன் கொண்டது. வருடந்தோறும் அதன் உற்பத்தி 5–6 சதவீதம் உயரும். ஆனால் பண மதிப்பு நீக்கம். எதிர்பார்த்ததை விட பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்திவிட்டது.

எச்.டி.எஃப்சி செய்னரிட்டி லிட் தரும் தகவலின்படி 2017 ஜனவரியில் உற்பத்தி வீழ்ச்சி 13% சதவீதம் ஏற்பட்டுள்ளது. இது 2001–க்கு பிறகு ஏற்பட்ட மிகப்பெரும் வீழ்ச்சியாகும்.

ஆதாரம் (Hindustan Times March - 6, 2017)

## விவசாய உற்பத்தியில் ஏற்பட்ட பாதிப்பு

பண மதிப்பு நீக்க நடவடிக்கை மஹாராஸ்டிரா மாநிலத்தில் விவசாய உற்பத்தியை கடுமையாக தாக்கியுள்ளது. ராபி பருவத்தில் சாகுபடி செய்யப்படும் விவசாய நிலபரப்பு 48.07 சதவீதம் குறைந்திருப்பது மிகப்பெரிய வீழ்ச்சியாகும். மொத்தமாக 55.63 லட்சம் ஹெக்டர்கள் நிலப்பரப்பில் செய்யப்படும் ராபி பருவ சாகுபடி இந்த வருடம் வெறும் 28.89 லட்சம் ஹெக்டர்கள் நிலப்பரப்பில்தான் நடந்துள்ளது. முன்னாள் சட்ட மன்ற உறுப்பினரும், நாசிக் மாவட்ட சென்ட்ரல் கூட்டுறவு வங்கியின் இயக்குநருமான சிரிஸ்கோட்வா கூறுகையில்

"This is a reality of demonetisation. November and December are the months of kharif hervesting and Rabi sowing. this is when the farmers didn't get money for their, kharif crops and had no money and credit for the rebi sowing"



“இதுதான் பணமதிப்பு நீக்க நடவடிக்கையின் உண்மைத் தன்மை. நவம்பரும் டிசம்பரும் தான் கரீப் சாகுபடி மற்றும் ராபி பயிர் விதைப்புக்கான மாதங்கள். அது விவசாயிகள் கரீப் சாகுபடிக்கோ, ராபி பயிர் விதைப்புக்கோ பணத்தை பெற்றிட முடியாத பயிர் கடன்களை பெற்றிட முடியாத பணமில்லாத நேரமாக இருந்தது” என்றார்.

எண்ணெய் விதைகள் சாகுபடி செய்யப்படும் நிலபரப்பு மொத்தமாக 2.96 லட்சம் ஹெக்டர்கள். ஆனால் இப்போது வெறும் 0.47 லட்சம் ஹெக்டர்களில்தான் சாகுபடி நடந்துகொண்டிருப்பதை நாம் பார்க்கிறோம்.

நான் சோயா பீன் சாகுபடி செய்யும் விவசாயி. இந்த முறை என்னால் சாகுபடி செய்ய முடியவில்லை. நான் என்னுடைய பணத்தை டி.சி.சி. வங்கியில் வைப்பீடு செய்திருந்தேன். ஆனால் பணத்தை என்னால் எடுக்க முடியாமல் ஆக்கிவிட்டார்கள். ஆகையால் விதை

களையோ, உரங்களையோ வாங்க முடிய வில்லை என்கிறார். ஒஸ்மனாபத்தை சார்ந்த பாபு சோரி என்ற விவசாயி. மேலும் அவர் கூறும் போது பணம் கிடைக்கப் பெற்ற நேரத்தில் மண் அதன் ஈரத்தன்மையை இழந்துவிட்டது என்றார்.

14.87 லட்சம் ஹெக்டார்கள் நிலப்பரப்பில் சாகுபடி செய்யப்படும் பருப்பு வகைகள் 8.54 லட்சம் ஹெக்டார்களாக குறைந்துள்ளது. வழக்க மாக 10.17 லட்சம் ஹெக்டார்களில் சாகுபடி செய்யப்படும் கோதுமை இந்த வருடம் விவசாயிகளால் 2–3 லட்சம் ஹெக்டார்களில் தான் சாகுபடி செய்ய முடிந்தது. விதை, உரம், பூச்சிக்கொல்லி மற்றும் அறுப்பு சாதனங் கள் போன்றவைகளை வாங்குவதற்கு பணம் தேவைப்படுகின்றது. விவசாய தொழிலாளர் களுக்கு தினக்கூலி கொடுப்பதற்கும் பணம் தான் தேவைப்படுகிறது. இதனால் நாங்கள் பெரும் இழப்பை சந்தித்துள்ளோம்.

தானியங்கள் சாகுபடி செய்யப்படும் 27.27 லட்சம் ஹெக்டார்கள் தற்போது கடுமையாக குறைந்து17.58லட்சம்ஹெக்டார்களாகியுள்ளது. நாசிக் மாவட்டம்தான் நாட்டிற்கு தேவையான வெங்காயத்தில் 74 சதவீதம் உற்பத்தி செய்யப் படுகின்ற பகுதி. நாசிக் மாவட்டத்தில் மட்டும் வழக்கமாக 26000 ஹெக்டார்களில் வெங்காயம் சாகுபடி செய்யப்படும். இந்த வருடம் வெறும் 11,000 ஹெக்டார்களில்தான் சாகுபடி நடந்துள்ளது.

மேலும் முன்னாள் சட்ட மன்ற உறுப்பினர் சிரிஸ் கோட்வால் கூறிடும்போது....

"The yeild is bound to be very less, sowing area has dropped drastically and we still don't know whether the farmers will get enough cash to preserve the crops for another four months.

According to him, the low yeild willbe creating huge price rise after four months. moreover, how will the farmers, who whould not do sowing for rabi, survive for another year? "we are asked to suffer and sacrifice in the name of partiotism. will importing all these from pakistan after drop in our yeilds be partiotic thing to do ? aksed shirish kot wal.

“விளைச்சல் மிகவும் குறைவாகவே ஏற்படப் போகின்றது. பயிரிடும் பகுதிகளின் அளவும் கடுமையாக குறைந்துள்ளது. விவசாயிகள் அடுத்த நான்கு மாதங்களுக்கு பயிர்களை கெடாமல் பாதுகாப்பதற்கு போதுமான பணம் வழங்கப்படுமா என்பது கூட இதுவரையில் தெரியவில்லை.”

அவரின் கூற்றுப்படி குறைந்த விளைச்சல் நான்கு மாதங்களுக்கு பிறகு மிகப்பெரிய விலை வாசி ஏற்றத்தை உருவாக்கிடும். இன்னும் சிரிஸ் கோட்வால் இவ்வாறு கேள்வி எழுப்புகிறார்.

ராபி பருவத்தில் பயிரிடாத விவசாயிகள் அடுத்த வருடம் வரை எப்படி உயிர் பிழைக்க முடியும்? நாங்கள் தேசப்பிற்றின் பெயரால் அவதிக்குள்ளாகவும் தியாகம் செய்யும் படியும் கேட்டுக்கொள்ளப்படுகிறோம். எங்களுடைய விளைச்சல்கள் எல்லாம் வீழ்ச்சியடைந்த பிறகு இவை எல்லாவற்றையும் பாகிஸ்தானிலிருந்து இறக்குமதி செய்வதுதான் தேசப்பற்றுக்கான செயலா? ஆதாரம் : The week feb-1, 2017

## இந்தியர்களை வேலை நீக்கம் செய்த 9 தொழில்நுட்ப நிறுவனங்கள்

பண மதிப்பு நீக்க நடவடிக்கைக்கு பிறகு இந்தியர்களை வேலை நீக்கம் செய்ததோடு 2017–ல் வேலை வாய்ப்புக்களை நிறுத்திக் கொண்டதாக அறிவித்த 9 தொழில்நுட்ப நிறுவனங்களின் பட்டியல் இதோ...




**LAYOFFS -** இந்த நிறுவனம் 2017–ல்

**LeEco -** இந்த நிறுவனம் நிதிப்பற்றாக்குறை காரணமாக கிட்டத்தட்ட 85% இந்தியர்களை வேலை நிறுத்தம் செய்துள்ளது.

**AIRCEL -** ஏர்செல் இந்தியா முழுவதும் 8000 ஊழியர்களை கொண்ட நிறுவனம். இதில் 700 பேர் இந்த வருடம் வேலை நீக்கம் செய்யப் பட்டுள்ளனர்.

**SNAPDEAL** - இந்த நிறுவனம் பணமதிப்பு நீக்க நடவடிக்கைப் பிறகு வேலை நீக்கம் செய்து வருவதாக அறிவித்தது. ஆனால் வேலை நீக்கம் செய்தவர்களை எண்ணிக்கையை கூற மறுத்துவிட்டது.

**YePME -** இதன் நிறுவனம் விவேக் காவர் டைம்ஸ் ஆஃப் இந்தியாவிற்கு அளித்த பேட்டியில் நாங்கள் ஜனவரியே நிறுத்திக்கொள்ள விரும்பினோம். ஆனால் பண மதிப்பு நீக்க நடவடிக்கையால் விழுந்த அடி (Cash on delivery) பணம் கொடுத்து வாங்குகின்ற வழி இல்லாமல் போய்விட்டது. எனவே விற்பனை வீழ்ச்சியடைந்துவிட்டது என்றார்.

**Craftsvilla**-இந்த நிறுவனத்தின் மூத்த முன்னாள் நிர்வாகி எக்னாமிக்ஸ் டைம்ஸ் – இடம் அளித்த பேட்டியில் இதுவரை நூற்றுக்கும் மேற்பட்ட ஊழியர்களை கடந்த வாரம் வேலை நீக்கம் செய்யப்பட்டுள்ளார்கள் என்றார்.

**PAYU** - என்ற இந்த நிறுவனம் பணமதிப்பு நீக்கத்திற்குப்பின் கிரடிட் கார்டு கொண்டவரும் தனது திட்டத்தை கை விட்டது மட்டுமின்றி நூற்றுக்கும் மேற்பட்ட ஊழியர்களை வேலை நீக்கம் செய்துள்ளது.

**Tolexo -** இந்த நிறுவனம் தனது 300 ஊழியர்களை வேலை நீக்கம் செய்துள்ளது.

**Grimar Soft -** இணைய தள நிறுவனமான இது சமீபத்தில் நூற்றுக்கும் மேற்பட்ட ஊழியர்களை வேலை நீக்கம் செய்துள்ளது.

**Stayzilla -** இந்த நிறுவனம் தனது ஊழியர்களில் 210 பேரை வேலை நீக்கம் செய்துள்ளது.

ஆதாரம் : March-8, 2017 Economic Times. www.godgetsraw.com/slideshow/9-technology-companies-in-india-that-cut-jobs-in-2017/photolist/5757/1064.cms.




என்பது மட்டுமின்றி இது குறைந்த பட்சக் கணக்கு என்கிறது ஃபினான்சியல் எக்ஸ்பிரஸ். இதற்கு பின்வரும் செய்திகள் சான்று பகிர்கிறது.

**வெள்ளிக்கட்டி கொள்முதல் கடும் சிக்கல் - 3 லட்சத்திற்கு மேற்பட்டோர் வேலை இழந்துள்ளனர்**

செல்லாத நோட்டு பிரச்சனையால் வெள்ளிக்கட்டி கொள்முதலில் கடும் சிக்கல் ஏற்பட்டு 3 லட்சத்திற்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் வேலையில்லாமல் தவிக்கின்றனர். சேலம் மற்றும் அதன் சுற்று வட்டாரப் பகுதிகளில் வெள்ளி கால் கொலுசு, மெட்டி, அரைஞான் கொடி, குங்குமச் சிமிழ் உட்பட பல்வேறு விதமான பொருட்கள் உற்பத்தி செய்யப்படுகின்றது.

இந்த தொழிலில் 4 லட்சத்திற்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் ஈடுபடுகின்றனர். நாள் ஒன்றுக்கு 30 டன் வெள்ளிப் பொருட்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன. ஒரு கிலோ வெள்ளிக்கட்டி வாங்க 35 ஆயிரம் பணம் வேண்டும். ஆனால் வங்கிகளில் அதிக பட்சமாக ரூ. 24,000 தான் ஒரு வாரத்திற்கு

எடுத்திட முடியும். ஒரு நாளைக்கு பல கிலோ உற்பத்தி செய்யும் உற்பத்தியாளர்களுக்கு பணம் எடுப்பதில் போட்ட விதிமுறைகள் பெரும் இழப்பை ஏற்படுத்தியுள்ளது. கடந்த 20 நாட்களாக 90 சதவீத பட்டறைகள் மூடப் பட்டுள்ளன. இத்தொழிலைச் சார்ந்த 3 லட்சம் தொழிலாளர்கள் வேலையின்றி தவிக்கின்றனர்.

ஆதாரம் : தினகரன் 9.12.2016

## அனைத்து இந்திய உற்பத்தியாளர்கள் சங்கத்தின் கள ஆய்வு



பண மதிப்பு நீக்க நடவடிக்கை சம்பந்தமாக மத்திய அமைச்சர் அருண்ஜெட்லீ கூறுகையில்....

மக்கள் பட்ட கஷ்டங்கள் சிரமங்க ளெல்லாம் இரண்டு மாதத்தில்முடிவுக்குவந்து விடும். அதாவது அறிவிப்பு செய்த நவம்பர் 8–ந் தேதி முதல் இரண்டு மாதத்தில் முடிவுக்கு வந்துவிடும் என்றார். இரண்டு மாதங்கள் கழித்து 2017 ஜனவரி மாதம் அளித்த பேட்டியில் கூறும்போது...

அரசாங்கத்தின் இந்த முடிவு எதிர்காலத்தில் நாட்டினுடைய ஜி.டி.பி. உயர்வதற்கு வகை செய்யும். வங்கிகளில் இப்போது நாட்டினுடைய வளர்ச்சிக் காக தருவதற்கு குறையவே பணம் கிடைக்கப் பெறுகின்றது என்றார்.




ஆனால் உண்மை கள நிலவரமோ அதற்கு முற்றி லும் மாற்றமாக உள்ளது. இந்தியா டுடே ஆங்கில வார இதழ் ஜனவரி மாதம் AIMO (All India Manufacturer Organisation) அனைத்து இந்திய உற்பத்தி யாளர்கள் சங்கம் நடத்திய கள ஆய்வை பதிவு செய்துள்ளது. அதன் தமிழாக் கத்தை இங்கே தருகின்றோம்.

அனைத்து இந்திய உற்பத்தியாளர்கள் சங்கம் ஒரு நிபுணர் குழுவை நியமித்தது. அந்த குழு 3000 நேரடி உறுப்பினர்கள் மற்றும் மறை முகமாக 70,000 உறுப்பினர்களை கொண்டது. இந்த குழு மேற்கொண்ட ஆய்வில் பணமதிப்பு அதன் ஆரம்ப 34 நாட்களில் கிட்டத்தட்ட எல்லா தொழிற்சாலை நடவடிக்கைகளும் ஸ்தம்பித்துவிட்டது. குறிப்பாக சிறு மற்றும் நடுத்தரமான வணிக நிறுவனங்கள் (Small and Medium Employers) கடுமையான பாதிப்புக் குள்ளாகியிருக்கின்றது.

### வேலை இழப்பு:

எல்லா வகையான தொழிற்சாலைகளிலும் சிறிய அளவிலான தொழிற்சாலைகள், பெரிய அளவிலான தொழிற்சாலைகள் மற்றும் வெளிநாட்டு நிறுவனங்களுக்கு சொந்தமான தொழிற்சாலைகள் என்று எல்லாவற்றிலும் பண மதிப்பு நீக்க நடவடிக்கையினால் ஏற்பட்ட தாக்கத்தை பாரபட்சம் இல்லாமல் பார்க்க முடிந்தது. அனைத்து இந்திய உற்பத்தியாளர்கள் சங்கம் இந்த சூழ்நிலையில் உற்பத்தித்துறையில் ஏற்பட்டிருக்கும் ஏற்படப்போகும் வேலை இழப்புக்கள் பற்றியும் விரிவான ஆய்வை மேற்கொண்டுள்ளது. இந்த ஆய்வின்படி ஆரம்ப 34 நாட்களில் இந்த எல்லா தொழிற்




சாலைகளிலும் 30–35 சதவீதம் வேலை இழப்பு ஏற்பட்டுள்ளது. இது மார்ச் 2017–ல் 35–60 சதவீதமாக உயரும் என்கிறது ஆய்வு.

## வருவாய் இழப்பு

பண மதிப்பு நீக்க நடவடிக்கையால் ஏற்பட்ட தாக்கத்தை வருவாய் பக்கம் பார்த்தால், ஆரம்ப 34 நாட்களில் இந்த எல்லா வகையான தொழிற்சாலைகளிலும் 20–50 சதவீதம்வரைவருவாய் இழப்பு ஏற்பட்டுள்ளது. இந்த இழப்புக்கள் 31 மார்ச் 2017–ல் 45–55 சதவீதமாக உயரும் என்கிறது ஆய்வு.

## சந்திக்க மறுத்த மத்திய அமைச்சர்

இவை எல்லாவற்றிலும் அதிர்ச்சிக்குரிய விஷயம் என்னவென்றால் AIMO அனைத்து இந்திய உற்பத்தியாளர்கள் சங்கம் சிறு, நடுத்தர மற்றும் குறு வணிக நிறுவனங்களை உள்ளடக்கிய ஆயிரத்திற்கும் மேற்பட்ட உறுப்பினர்களைக் கொண்ட ஒரு பெரிய அமைப்பாக உள்ளது. இந்த AIMO அனைத்து இந்திய உற்பத்தியாளர்கள் சங்கம் வணிக அமைச்சர் மற்றும் நிதி அமைச்சரை சந்திக்க வேண்டுகோள்விடுத்தும் அது பெரிதாக எடுத்துக் கொள்ளப்படவில்லை. அனைத்து உற்பத்தியாளர்கள் சங்கம் (AIMO) தேசிய தலைவர் K.E. ரகுநாதன், இந்திய டுடே–விடம் கூறுகையில்.

"In reply, the finance minister office wrote back saying, he is just busy and be cannot meet AIMO on these issues"

அதாவது “நிதி அமைச்சர் அலுவலகத்தில் இருந்து அனுப்பிய பதிவில் அவர் (அருண் ஜெட்லீ) கொஞ்சம்) பிஸியாக இருக்கிறார் என்றும் இந்த பிரச்சனைகள் கிறித்து சங்கத்தை சந்திக்க முடியாது என்றும் கூறப்பட்டிருந்தது.

மேலும் K.E. ரகுநாதன் கூறுகையில்...

இது இந்திய அரசு விழித்தெழ வேண்டிய முக்கியமான தருணம். 2017 மார்ச்–ல் பெரும்பாலான சிறு மற்றும் நடுத்தரமான வணிக நிறுவனங்கள் (SME) இழுத்து மூடப்படலாம். சிறு குறு தொழிற்ச்சாலைகளால் ஒரு மாதத்திற்கு மேல் கூட நஷ்டங்களை தாங்கிட முடியாது” என்றார்.

அனைத்து இந்திய உற்பத்தியாளர்கள் சங்கத்தின் இந்த ஆய்வு பல்வேறு வகையாக பிரிக்கப்பட்டிருக்கின்றது. பண மதிப்பு நீக்கத்தினால் ஏற்பட்ட தாக்கத்திற்கு பத்து காரணங்கள் அதில் குறிப்பிடப்பட்டிருக்கின்றது. இந்த குழுவின் கண்டுபிடிப்புகள் அரசின் கண்களை திறக்கின்ற வகையில் அமைந்திருக்கிறது.

## 1. சிறு / குறு தொழிற்சாலைகள் - அதன் சேவை வழங்கும் நடவடிக்கைகளில் ஏற்பட்ட பாதிப்பு...

### i) வேலை இழப்பு...

❖ நவம்பர் 8–ல் இருந்து
34 நாட்களில் = 35 சதவீதம்

❖ 2017– மார்ச்–க்கு முன் எதிர்பார்க்கப்படும் வேலை இழப்பு = 60 சதவீதமாக உயரும்

### ii) வருவாய் இழப்பு

❖ 34 நாட்களில் – 50 சதவீத வருவாய் இழப்பு

❖ 2017 மார்ச்சுக்கு முன் வருவாய் இழப்பு – 55 சதவீதமாக உயரும் என எதிர்ப்பார்க்கப்படுகின்றது.

### 2. நடுத்தர மற்றும் பெரிய அளவிலான தொழிற்சாலைகள் உற்பத்தி நடவடிக்கையில் ஏற்பட்ட பாதிப்பு

### i) வேலை இழப்பு

❖ 34 நாட்களில் – 5 சதவீத வேலை இழப்பு

❖ மார்ச்2017–க்குமுன்–10சதவீதமாகவேலை இழப்பு உயரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

### ii) வருவாய் இழப்பு

❖ 34 நாட்களில் – 20 சதவீத வருவாய் இழப்பு

❖ 2017 மார்ச்–க்கு முன் – 15 சதவீத வருவாய் இழப்பு ஏற்படும்.

### 3. நடுத்தர மற்றும் பெரிய அளிவலான தொழிற்சாலைகள் திட்டம் அல்லது உள் கட்டமைப்பு நடவடிக்கையில் ஈடுபட்டபோது ஏற்பட்ட பாதிப்பு

### i) வேலை இழப்பு

❖ 34 நாட்களில் – 35 சதவீத வேலை இழப்பு

❖ 2017 மார்ச்–க்கு முன் – 40 சதவீதமாக உயரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

### ii) வருவாய் இழப்பு

❖ 34 நாட்களில் – 45 சதவீத வருவாய் இழப்பு

❖ மார்ச் 2017–க்கு முன் – 40 சதவீதம் இழப்பு ஏற்படும்.

### 4. நடுத்தர மற்றும் பெரிய அளவிலான தொழிற்சாலைகள் ஏற்றுமதி நடவடிக்கையில் ஏற்பட்ட பாதிப்பு

### i) வேலை இழப்பு

❖ 34 நாட்களில் – 35 சதவீத வேலை இழப்பு

❖ 2017 மார்ச்–க்கு முன் – 35 சதவீதமாக உயரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

### ii) வருவாய் இழப்பு

❖ 34 நாட்களில் – 40 சதவீத வருவாய் இழப்பு

❖ மார்ச் 2017–க்கு முன் – 45 சதவீதம் உயரும்.

ஆதாரம் : India Today, Mumbai January-9, 2017

நம்மையெல்லாம் உறைய வைக்கும் இந்த கள ஆய்வு தரும் புள்ளி விவரங்களையெல்லாம் அரசு கண்டுகொள்ளாமல் நாடு வளர்ச்சிப் பாதையில் செல்கிறது என்று எந்த அடிப்படை ஆதாரமும் இன்றி பேசிவருவது ஒரு பொய்யை திரும்ப திரும்ப கூறினால் உண்மையாகிவிடும் என்ற தத்துவத்தின் அடிப்படையில்தான் என்பதை உணர முடிகிறது.

அனைத்து இந்திய உற்பத்தியாளர்கள் சங்கத்தின் (AIMO) தேசிய தலைவர் K.E. ரகுநாதன் நியூஸ் 18 ஆங்கில செய்தி நிறுவனத்திடம் இந்த பிரச்சனையில் அரசாங்கத்தின் அணுகுமுறையை பற்றி இவ்வாறு குறிப்பிட்டார்.

"They turned a blind eye toward this emergency situation. they simply closed their eyes, ears, kept patting themselves onthei bosses among all the statel, Maharastra and Tamilnadu are worse affacted the ignored, thanks to an inefficient government in tamilnadu and a maharastra that is bound to support the demonetisation drive"

அதாவது அவர்கள் (அரசாங்கம்) தங்கள் குருட்டு கணிகளை இந்த அவசர சூழ்நிலையை நோக்கு திருப்பிக் கொண்டார்கள். அவர்கள் எளிமையாக தங்கள் காதுகளை பொத்திக் கொண்டு தங்களது எஜமானர்களை சந்தித்திருக்கின்றது. இந்த இரண்டு மாநிலங்களிலும் ஏற்பட்ட பாதிப்பு இது வரையிலும் புறக்கணிக்கப்பட்டே வருகிறது. இந்த பண மதிப்புநீக்கநடவடிக்கையைஆதரிக்ககடமைப் பட்டுள்ள கையாகாளாத தமிழ்நாடு மற்றும் மகாராஷ்டிரா அரசுகளுக்கு நன்றி என்றார்.




# JNU மாணவர் நஜீப் அஹ்மதுக்கு தீவிரவாதி பட்டம்

**பாஜகவின் பாசிசம் ஊடுருவியுள்ளது அதிகார அமைப்பில் மட்டுமல்ல பெரிய பல்கலைக்கழகங்களிலும் தான்..**

இந்தியாவில் பாஜகவின் ஆட்சிக்கு முந்தைய காலம் வரையில் ஜவஹர்லால் நேரு பல்கலைக்கழகம் (JNU) என்றால், மிகச் சிறப்பானது பல ஆளுமைகளை உருவாக்கியது என்ற பேச்சு தான் அடிபடும். ஆனால் இன்று பாஜகவின் ஆட்சியில் JNU என்று சொன்னதும் நினைவுக்கு வருவது சாதி பாகுபாடுகளால் தற்கொலை செய்து கொள்ளப் பட்ட ரோஹித் வெமுலா மற்றும் தமிழக மாணவர் முத்துகிருஷ்ணன், காணாமலாக்கப்பட்ட நஜீப்.

இந்த மூவர் தான் இன்றைய JNU உடைய அடையாளம். இந்த மூவரையும் ஒரு புள்ளி இணைக்கிறது. அதுதான் பாசிச எதிர்ப்பு. ஆர்.எஸ்.எஸ்னுடைய மாணவர் அமைப்பான ஏ.பி.வி.பி, பாஜக மத்தியில் ஆட்சி பொறுப்பை அமைத்ததும் தங்களது பாசிசசிந்தனைகளை வெளிப்படையாகவே செயல்படுத்த ஆரம்பித்துள்ளனர்.

பாஜகவை எதிர்த்து பேசும் மாணவர்களில் தொடங்கி அனைவருக்கும் தேசத்துரோகி பட்டம் கொடுக்கப்பட்டு சிறைக்கு அனுப்பப்படுகிறார்கள், தற்கொலைக்கு தள்ளப்படுகிறார்கள்


நஜீப் அஹ்மத்

அல்லது ஒதுக்கப்படுகிறார்கள்.

**பத்திரிக்கைகளிலும் பாசிசம்!** ஐ.எஸ்.ஐ.எஸ் அமைப்புடன் கல்லூரி மாணவரை தொடர்புபடுத்தி பொய் செய்திகள்.




இன்றைய தேசிய ஊடகங்களில் தொடங்கி மாநில ஊடகங்கள் வரை பாஜக, இந்துத்துவ இயக்கங்கள் எதை சொல்கிறதோ அதை ஆராயாமல் செய்தியை வெளி யிடும் அளவுக்கு ஊடகங்கள் இன்று தனது நிலையை மறந்து அரசியல்வாதிகளின் அடிவருடி களாய் செயல்படுகிறார்கள். JNU கல்லூரி விசயத்திலும் ஊடகங்கள் தொடர்ச்சியாக பொய்யை வெளிப் படையாகவே வெளியிடுகிறார்கள்.

16,பிப்ரவரி 2016ல் JNU மாணவர் உமர் காலித்துக்கு ஜெய்ஷ் இ முகம்மது தீவிரவாத இயக்கத்தில் தொடர்பிருப்பதாக உளவுத்துறை ரிப்போர்ட் கூறுகிறது என ஒரு செய்தியை தேசிய ஊடகம் வெளியிட்டு பரபரப்பாக்கியது. ஆனால் அப்படி யெந்த அறிக்கையும் அரசாங்கத்தால் வெளி யிடப்படவில்லை செய்தி தவறானது என பின் வந்த நாட்களில் தெரிய வந்தது. ஆனால் இன்று வரை, உமர் காலித் என்றதும் பாஜக, இந்துத்துவ சக்திகள் பயன்படுத்தும் வார்த்தை “தேசத்துரோகி" "தேச விரோதி".

15 அக்டோபர் 2016ல் JNU கல்லூரி மாணவர் நஜீப் அஹ்மத் மாயமானார். இதற்கு காரணம் ஏபிவிபி மற்றும் ஆர்.எஸ்.எஸ் அமைப்பினர் என்று JNU கல்லூரி மாணவர்கள் குற்றம் சாட்டுகின்றனர். காணாமல் போன நஜீப்பை கண்டுபிடித்து தரக் கோரி தொடர்ச்சி யாக போராடுவது என JNU கல்லூரி மாணவர் களும் நஜீப் தாயாரும் போராட்டத்தில் பங்கெடுத்து வருகின்றனர்.

இந்நிலையில் 21.03.2017 அன்று முக்கிய தேசிய ஊடகங்களான் Times Of India மற்றும் The Hindu போன்ற ஊடகங்கள் காணாமல் போன நஜீப்பிற்கு தீவிரவாத இயக்கமான ஐ.எஸ்.ஐ.எஸ் உடன் தொடர்புள்ளது எனவும் உளவுத்துறை அதை கண்டுபிடித்தாகவும் செய்திகளை வெளியிட்டன. Times Now என்ற பிரபலமான செய்தி காணொளி ஊடகத்திலும், zee news என்ற செய்தி தொலைக்காட்சியிலும் “ நஜீப் ஐ.எஸ்.ஐ.எஸ் அமைப்பில் சேர்க்கப் பட்டாரா” என்ற தலைப்புடன் விவாதங்கள் நடந்தன.

இந்த நிலையில் டெல்லி காவல்துறை ஒரு பத்திரிக்கையாளர் சந்திப்பை நடத்தியது. இதில் நஜீப்பிற்கும் ஐ.எஸ்,ஐ.எஸ் அமைப்பிற் கும் எந்த சம்பந்தமுமில்லை என தெளிவுபடுத் தப்பட்டது.

JNU மாணவர் நஜீப் அஹ்மத்தை கண்டு பிடித்து தரக்கோரி போராட்டங்கள் வலுத்து வரும் நிலையில் அவர் ஐ.எஸ்.ஐ.எஸ் அமைப்பை சார்ந்தவர் என்ற பொய் பிரச் சாரத்தில் தன்னை முழுமையாக ஈடுபடுத்தி கொண்டன ஊடகங்கள். டெல்லி காவல் துறை, அவருக்கும் அந்த இயக்கத்திற்கும் எந்த சம்பந்தமும் இல்லையென சொன்ன பிறகும் சமூக வலைதளங்களில் பிஜேபி மற்றும் ஆர்.எஸ்.எஸ் அனுதாபிகள் அவர் ஐ.எஸ்.ஐ.எஸ் அமைப்பில் சேர்ந்து விட்டதாகவே பிரச்சாரத் தில் முடுக்கிவிடப் பட்டிருக்கின்றனர். இறுதி யில் அவருக்கு “தீவிரவாதி” பட்டமும் வழங்க




தயாராகிவிட்டார்கள்.

**பாஜகவின் பொய் பிரச்சாரத்தின் தொடர்ச்சியான சூழ்ச்சிகள்!**

உத்திர பிரதேச தேர்தல் பிரச்சாரத்தின் போது பிரதமர் மோடி பேசியது "கான்பூர் ரயில் தாக்குதலில் 120 பேர் கொல்லப்பட்டனர். நம் எல்லையை கடந்து வந்து தைரியமாக தாக்கிவிட்டு செல்கின்றனர்." கான்பூர் ரயில் விபத்தை பயங்கரவாதிகளின் தாக்குதலாகவும் அதனை பாகிஸ்தான் முன்னிறுத்தி செய்ததாக வும் பிரச்சார மேடையில் ஒரு பிரதமர் பேசு கிறார். ஆனால், கான்பூர் ரயில் விபத்தில் எந்த விதமான தாக்குதலும் நடைபெறவில்லையென ரயில்வே காவல்துறை அதிகாரப்பூர்வமாக அறிவித்திருக்கிறது.

**ஒரு பிரதமர்!** ஓட்டு கேட்பதற்காக நடக்காத ஒன்றை நடந்ததாக கூறி லட்சக் கணக்கான மக்கள் முன்னிலையில் பேசுகிறார். இன்று வரை இதற்கு பாஜகவின் சார்பாகவும் மறுப்பு வரவில்லை. எந்த அதிகாரிகளும் நடவடிக்கையும் எடுக்கவில்லை. ஆர்.எஸ்.எஸ் நினைப்பதை எங்கும் செயல்படுத்த முடியும் கேள்வி கேட்பதற்கு ஆள் இல்லை என்ற நிலையை இன்று உருவாக்கியுள்ளனர். (The Hindu 01/03/17)

அதேபோல், கார்கில் போரில் உயிரிழந்த ஒரு ராணுவ வீரரின் மகள், லேடி ஸ்ரீராம் கல்லூரியில் முதலாமாண்டு படித்து கொண்டி ருந்த குன்மெஹர் சமூகவலைத்தளத்தில் ஒரு கருத்தை பதிவிட்டார். "நான் டெல்லி பல்கலைக்கழக மாணவி. எனக்கு ஏ.பி.வி.பியை கண்டு பயமில்லை நான் தனியாள் இல்லை. என்னுடன் ஒவ்வொரு இந்திய மாணவரும் இருக்கிறார்."

மேலும் ஏ.பி.வி.பிக்கு எதிரான பேரணி யிலும் கலந்து கொள்கிறார் அம்மாணவி. அதன் தொடர்ச்சியாக மாணவி குன்மெஹருக்கு மிரட்டல்கள். உன்னை கற்பழித்துவிடுவோம், கொன்று விடுவோம் என பாலியல் ரீதியான மிரட்டல்கள் வருவதாக காவல்துறையில் புகார் கொடுக்கிறார். இந்த இடைவெளியில் ஏ.பி.வி.பியினர் குன்மெஹரின் Youtube பக்கத்தில் ஒரு வருடத்திற்கு முன்பு வெளி யான "அமைதியை வலியுறுத்திய நான்கரை நிமிட காணொளியில்" ஒரு சிறு பகுதியை அதாவது, என் தந்தையை கொன்றது பாகிஸ் தான் அல்ல போர் தான் என்ற வாசகத்துடன் குன்மெஹர் நிற்கும் சில நொடி காணொளியை மட்டும் பிரித்து சமூக வலைதளங்களில் பரவலாக்கினார்கள்.

அடுத்த நிமிடம், அந்த பெண்ணுக்கு பாஜக மற்றும் அதன் தாய் அமைப்பான ஆர்.எஸ்.எஸிடமிருந்து தேசத்துரோகி

முத்திரை வந்து குவிகிறது. அப்பெண் தான் குடியிருந்த வீட்டை விட்டு வெளியேறி வேறு இடம் செல்கிறார். மத்திய அமைச்சர் கிரண் ரிஜ்ஜு "அந்த பெண்ணின் மனதை யார் கெடுத்த" என அப்பெண்ணை குற்றவாளியாக்குகிறார். பாஜக எம்.பி பிரதாப் சின்ஹா, தீவிரவாத குற்றவாளியான தாவூத் இப்ராஹிமுடன் இம்மாணவியை தொடர்பு படுத்தி பேசுகிறார்.

கிரிக்கெட் வீரர் சேவாக் இந்த பெண்ணுக்கு எதிரான கருத்துகளை பதிவு செய்கிறார். இறுதியில் இப்பெண்ணுடைய குற்றச்சாட்டுகள் முடக்கப்பட்டு இப்பெண்ணே தேசத்துரோகியாக்கப்பட்டு செய்திகள் மறைக்கப்பட்டது. (தி இந்து மார்ச்-03, 2017)






**Missing JNU student saw IS videos: Cops**

Police have received a report on the browsing history of missing JNU student Najeeb Ahmed, which reveals that he had been looking for information on the so-called Islamic State's ideology, executions and network in the months preceding his disappearance, reports **Rajshekhar Jha**.

Police sources claimed most YouTube videos he watched on his laptop were related to IS. These details, which open another line of probe, have been submitted in the high court. **P 3**

**Najeeb searched for information on IS**

Rajshekhar.Jha
@timesgroup.com

**New Delhi:** A report on the browsing history of Najeeb's laptop received by Delhi Police from Google and YouTube has revealed that in the months preceding his disappearance, Najeeb had been looking for information on Islamic State (IS) — ideology, executions and network. His Google searches included things like ways to join IS. Highly-placed sources claimed that most of the videos he watched on YouTube were also related to the Islamic State. These details, which have opened another line of investigations, have been submitted in the Delhi high court.

Delhi Police has claimed that Najeeb was watching a video of the speech of an IS leader on the night of October 14, just before he had a scuffle with ABVP members when they knocked on his door. He went missing the next morning before being caught on CCTV boarding an autorickshaw.

Desperate to get a breakthrough in the case, the cops are now also exploring – with the help of a counter-intelligence agency – the possibility of him getting radicalised and being lured away via Nepal. Posters with Najeeb's photograph have been put up in several areas of Nepal that are close to UP.

The case has seen many twists and turns in the past four-and-a-half months. The first lead that cops pursued was when they found that he was on medication for obsessive compulsive disorder from 2012. He was prescribed Flunil (20mg) and Zolfresh (5mg) on August 27. The first is used to treat depression and OCD while the latter is used to induce sleep.

On September 9, he was prescribed Lonazep that's used to treat fits, panic attacks and agoraphobia (fear of public places). Police also found Pari 10, an anti-depressant, and another medicine from Ahmed's room, said sources.

The most curious twist came in mid-January when the family received a ransom call of Rs 20 lakh. The cops arrested the caller. It turned out that he was only trying to make some money. When Najeeb's email was accessed last week, they landed up at his house, tracking the IP address, and found his maternal uncle was using his account.

The police have been visiting places that Najeeb had looked up online. One was Manipur but sleuths found that he had a classmate from there.

The police have also been probing if Najeeb took shelter at some shrine as his mother said he was religious since childhood. Cops have visited over 150 mosques and madrasas in Agra, Badaun and other places in western UP, and Ajmer.

In December, more than 600 Delhi Police personnel, assisted by sniffer dogs, had scanned the inhabited and forested areas of the sprawling JNU campus to search for clues. Najeeb's laptop was sent for forensic examination. A reward of Rs 10 lakh has been announced by the police for any information about him.

Najeeb's mother, Fatima Nafees, has expressed dissatisfaction with the police's probe. The Delhi HC has also been pulling up the cops for being unable to track him down.

Go natural
cruelty free and vegan

**காவல்துறை, பத்திரிக்கை, நீதிமன்றம் யாரை நம்புவது?**

நாட்டின் மிக உயரிய அதிகாரம் கொண்டது நீதிமன்றம்!

இந்த நீதிமன்றங்களிலும் பாசிசமே ஊடுருவியுள்ளது என தொடர்ச்சியான தீர்ப்புகள் தெரிவிக்கிறது. கரசேவை என்ற பெயருடன் 500 ஆண்டு கால பழமையான பாபர் மஸ்ஜித் இடிக்கப்பட்டது. காவல் துறையும் இராணுவமும் இடித்தவர்களுக்கு பாதுகாப்பு வழங்குகிறார்கள்.

பத்திரிக்கை இந்த செய்திகளை மறந்தே விட்டது. நீதிமன்றமோ இடித்தவர்களுக்கு 2 பங்கு பாதிக்கப்பட்டவர்களுக்கு ஒரு பங்கு என கொஞ்சமும் யோசித்து பார்க்க முடியாத அநியாயமான ஒரு தீர்ப்பை வழங்குகிறது. மொத்தத்தில் நாட்டின் எந்த மூலைக்கு சென்றாலும் நீதி கிடைக்கப்போவதில்லை என்ற நிலைக்கு மக்கள் தள்ளப்பட்டிருக்கிறார்கள்.

நாட்டின் உளவுத்துறை, காவல் துறை, இராணுவம், நீதித்துறை என அனைத்தும் மக்களின் நம்பிக்கையை இழந்துவிட்டது. மத்திய ஆளும் அரசை கேள்வி கேட்கும் ஒரு மாணவனோ சாமனியனோயாராக இருந்தாலும் இல்லாமலாக்கப்படுவார்கள்! தேசத் துரோகிகளாக, மாற்றப்படுவார்கள் என்பதே இன்றைக்கு நிதர்சனம்.

**- அபூ.சித்திக்**



# கற்காலம் ஒரு வரலாற்றுப் பொய்

**பழங்கால எஹிப்தியர்களின் நாகரீகங்கள் மருத்துவதுறையில் அடைந்த முன்னேற்றத்தின் சான்றுகள்:**

கொம் ஒம்போவில் உள்ள கோவிலின் வெளிப்புற சுவரில் அறுவை சிகிட்சை கருவிகளை உள்ளடக்கிய பெட்டி வரையப்பட்டுள்ளது. இப் பெட்டியில் கத்திரிக்கோல், அறுவை சிகிட்சை கத்திகள், ரம்பங்கள், துருவுகோல், தட்டகப்பை, சிறய கொக்கிகள் மற்றும் பற்று குறடு ஆகியவை காணப்படுகின்றன.

பல்வேறு வகையான தொழில் நுட்பங்களும் கையாளப்பட்டுள்ளன. பிளவுகளும், முறிவுகளும் குணப்படுத்தப் பட்டுள்ளன. முறிந்து போன உறுப்பை சரி செய்வதற்காக கட்டைகளும், காயங்களை குணப்படுத்த கட்டுகளும் போடப் பட்டுள்ளன. சிகிட்சை மேற் கொண்ட பிறகு முறிவுகள் நன்றாக குணமடைந்துள்ளதை மம்மிகளில் காணலாம்.

அறுவை சகிச்சை மேற் கொண்டதற்கான தழும்புகள் மம்மிகளில் காணப்படாவிட்டாலும், காயத்தை மூடிதைப்பதைக் குறித்த 13 வகையான குறிப்புகள் ஸ்மித் பேப்ரஸ்-இல் காணப்படுகின்றன. நார்துணிகளை கொண்டு சரியான முறையில் காயத்தை மூடித் தைத்துள்ளனர் என்பதை இதிலிருந்து புரிந்து கொள்ளலாம்.

காப்பரைகொண்டு ஊசிகள் தயாரிக்கப்பட்டுள்ளன.

நுண்ணுயிரிகள் அற்ற காயங்கள் மற்றும் நுண்ணுயிரிகள் தங்கியிருக்கும் காயங்கள் இவற்றிற்கிடையேயான வேறுபாட்டை எகிப்திய மருத்துவர்கள் அறிந்து வைத்துள்ளனர்.

பென்சிலினும், நோய் எதிர்ப்பு மருந்தும் சில வருடங்களுக்கு முன்னரே கண்டுபிடிக்கப்பட்டன. எனினும் இதனுடைய முதல் இயற்கை வடிவத்தையும்

வெவ்வேறு வகையான நோய் எதிர்ப்பு மருந்து களையும் எகிப்தியர்கள் பயன்படுத்தியுள்ளனர். எந்தெந்த நோய்களுக்கு எந்த வித மருந்துகளை பயன்படுத்த வேண்டும் என்ற குறிப்புகளையும் எழுதியுள்ளனர்.

நகராட்சி திட்டங்களிலும், கட்டுமானத் துறையிலும் எகிப்தியர்கள் மிகுந்த ஆர்வம் காட்டினார்கள் என தொல்லியல் துறை கண்டுபிடிப்புகள் உணர்த்துகின்றன.

**எஹிப்தியர்கள் பயன்படுத்திய உலோகவியல்:**

உலோகவியல் என்பது அறிவியல் தொழில் நுட்பத்தின் ஒரு பகுதி. மூலக்கூறு பொருள்களை தூய்மையாக்குதல், உலோகங் களையும் அதன் கலவைகளையும் வடிவமைத் தல் மற்றும் பாதுகாத்தல் ஆகியவற்றை இது உள்ளடக்கியது. 3000-3500-க்கும் இடைபட்ட காலத்திற்கு முன்னால் கனிமங்களையும் உலோகங்களையும் குறிப்பாக தங்கம், காப்பர் மற்றும் இரும்புகளை பிரித்தெடுப்பதிலும் அதனை உபயோகிப்பதிலும் எகிப்தியர்கள் வல்லுனர்களாக விளங்கியுள்ளனர் என ஆராய்ச்சிகள் தெரிவிக்கின்றன. தாதுக்களை கண்டுபிடித்தல், பிரித்தெடுத்தல், உபயோ கித்தல் ஆகியவற்றிலும் எகிப்தியர்கள் தேர்ச்சி பெற்றவர்களாகவும், வேதியியலிலும் அறிவுடையவர்களாக இருந்துள்ளனர்.

3400 BCE வருடங்களிலேயே காப்பர் தாதுக்களை பற்றிய முழு வேலைகளையும், உலோக கலவைகளின் உருவாக்கத்தையும் எகிப்தியர்கள் அறிந்திருந்தனர் என தொல்லி யல் துறை ஆராய்ச்சிகள் வெளிப்படுத்துகின் றன. பாரோக்களின் நான்காவது வம்சாவளி (2900 BCE) ஆட்சியில் சுரங்க தொழில் ஆராய்ச்சிகளும் செயல்முறைகளும் உயர் அதிகாரிகளால் கண்காணிக்கப்பட்டும் அவைகள் பாரோக்களின் வாரிசுகளால் மேற்பார்வையும் செய்யப்பட்டன.

காப்பர் தவிர, இரும்பையும் பழங்கால எகிப்தியர்கள் அதிகமாக பயன்படுத்தியுள்ள னர். வெண்கலத்தை தயாரிக்க வெள்ளீயமும் (Tin), கண்ணாடியை நிறமூட்ட கோபால்டும் பயன்படுத்தப்பட்டுள்ளன. எகிப்தில் கிடைக் கப் பெறாத உலோகங்களை மற்ற பகுதிகளில் இருந்து குறிப்பாக பெர்சியாவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்டுள்ளன.

தங்கம் அவர்களிடம் அதிகமான புழக்கத் திலும், விலை உயர்ந்த உலோகமாகவும் இருந் துள்ளது. எகிப்திலும், தற்போதுள்ள சூடானி லும் நூற்றுக்கணக்கான தங்க சுரங்கங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. சுமார் 14 நிசிணி நூற்றாண்டுகளுக்கு முந்தைய பாபைரஸ் எனப்படும் நாணற் புல்லின் கையெழுத்துப்






படியில் APOLLINOPOLIS என்ற இடத்திற்கு அருகில் உள்ள தங்க சுரங்கங்கள் பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன. பழங்கால எகிப்தியர்கள் இத்துறையில் வல்லமை பெற்றவர்கள் என்பதை இது காட்டுகிறது. சுரங்கத்தில் வேலை செய்பவர்கள் தங்குவதற்காக 1300-க்கும் மேற்பட்ட குடியிருப்புகளின் குறிப்புகளை பற்றியும் பாபைரஸ்-இல் கூறப்பட்டுள்ளது. இதிலிருந்து பழங்கால எகிப்தில் தங்கத் தொழிலும், ஆபரணக்கலைகளும் முக்கியத்துவம் வாய்ந்ததாக இருந்தது தெளிவாகின்றது.

**பழங்கால எகிப்தின் நகர்புற திட்டங்களும் உட்கட்டமைப்பு வசதிகளும்:**

எகிப்தின் வறண்ட கால சூழ்நிலைகள், அவர்களின் நாகரீகங்களை பற்றிய மிகுதியான குறிப்புகளை தர ஏதுவாக அமைந்துள்ளன. எகிப்திய நகரங்கள் வளர்ச்சியடைந்த உட்கட்டமைப்பு வசதிகளைகொண்டிருப்பதையும் அவை நிரூபிக்கின்றன.

நிச்சயமாக, இத்தகைய வளர்ச்சியடைந்த நகரங்களை உருவாக்கியவர்கள், கட்டிட மற்றும் பொறியியல் துறையில் தனித்தொரு அறிவை பெற்றிருந்தனர் என்பதனையே அதன் உட்கட்டமைப்பு வசதிகள் எடுத்துக் காட்டுகின்றன.

நிலத்தின் கீழ் எவ்வளவு தூரம் தோண்டி அஸ்திவாரம் எழுப்பப்பட வேண்டும், எந்த இடத்தில உத்தரங்களை நிறுத்த வேண்டும், எவ்வாறு சிறப்பான காற்றோட்டமிக்க ஏற்பாடுகளைதிட்டமிட வேண்டும், சுத்தமான மற்றும் அசுத்தமான நீர் ஒன்றுக்கொன்று கலந்துவிடாமல் தனித்தனியே செல்வதற்கென வழிகள், இன்னும் மற்ற சிறந்த திட்டங்களும் கவனத்தில் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன. எல்லாவற்றிலும் முக்கியமாக வேலையில் தவறேதும் ஏற்பட்டு விடக்கூடாது. எகிப்தியர்கள் இந்த நுட்பங்களை அறிந்து வைத்திருந்தனர். அவர்கள் விட்டு சென்ற கட்டிடங்கள் இதை நிரூபணம் செய்கின்றன.

3000 BCE-இல் இவர்கள் பயன்படுத்திய கட்டிடத் தொழில் நுட்பங்கள் தொழில் நேர்த்தி வாய்ந்தவையாகவும், உட்கட்டமைப்பில் ஏற்படும் பிரச்னைகள் மற்றும் சிரமங்களை சரிபடுத்தும் நோக்கிலும் இருந்துள்ளன. எகிப்தை போன்ற வறண்ட நாடுகளில் தண்ணீர் மிக முக்கியம். இதற்கு தண்ணீர் தொட்டிகளை உருவாக்கி நிரந்தர தீர்வையும் கண்டுள்ளனர்.

ஃபாயும் (faiyum) நகர் பாலைவன சோலையில் காணப்படும் பள்ளத்தில் மிகப் பெரிய அளவிலான நீர் தொட்டிகள் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது இவற்றில் ஒன்று. சில குறிப்பிட்ட பகுதிகளில் வாழ்வதற்காக செயற்கை ஏரிகளையும் எகிப்தியர்கள் உருவாக்கியுள்ளனர். இந்த ஏரிகள் நைல் நதியிலிருந்து தண்ணீரை எடுத்து வந்து எகிப்திய பாலைவனங்களை சோலைவனமாக்குகின்றன.





கெய்ரோவின் தென்மேற்கு பகுதியில் 80 கி.மீ தொலைவில் நைல் நதியிலிருந்து கால்வாய்களின் மூலம் கொண்டு வரப்படும் நீரை சேமிப்பதற்காக மோரிஸ் (Moeris) என்ற ஏரியை உருவாக்கியுள்ளனர். இதன் அருகே குடியிருப்புகளும் கோவில்களும் கட்டப்பட் டுள்ளன.

எகிப்தியர்கள் மருத்துவம், நகர்புற திட்ட மிடுதல் மற்றும் பொறியியலில் பெற்றிருந்த அறிவுத்திறன்களும் மேலும் அதை எவ்வாறு ஆக்கப்பூர்வமாக செயல்படுத்தினார்கள் என்பதும் அவர்கள் முன்னேறிய நாகரீகத்தை கொண்டவர்களாக இருந்தனர் என்பதற்கு சில சான்றுகளாகும்.

**ஜவுளித்துறையில் பழங்கால எகிப்தியர்களின் சாதனைகள்:**

எகிப்தியர்களால் 2500 நிசிணி-யில் தயாரிக்கப்பட்ட நார் துணிகளில் இருந்து கிடைக்கப்பெற்றசிறு பகுதிகள்அவர்கள்சிறந்த தரமான துணிகளை நெசவின் மூலம் உற்பத்தி செய்துள்ளனர் என்பதை எடுத்து சொல்கிறது. எகிப்தியர்களால் தயாரிக்கப்பட்ட ஒரு வகையான மெல்லிய நார்துணிகள் தற்போது நவீன தொழில் நுட்பத்தில் இயந்திரத்தின் மூலம் தயாரிக்கப்படுகின்றன. இந்த நார்கள் மம்மிகளை சுற்றி கட்டுவதற்கு பயன்படுத்தப் பட்டுள்ளன. இந்த மென்மையான நெசவுத் துணிகள் எகிப்திய ஆய்வாளர்களை வியப்பில் ஆழ்த்தியுள்ளது. இந்த வகையான துணிகள் எந்த அளவுக்கு மிருதுவானது என்றால் இத்துணிகளை பட்டு துணிகளிலிருந்து பிரித்தறிவதற்கு நமக்கு உருப்பெருக்கி கண்ணாடிகள் தேவைப்படுகின்றன. இன்று எகிப்தில் உருவாக்கப்படும் நார்களுடைய பெருமை 2000 நிசிணி இல் வாழ்ந்த நெசவாளர்களையே சாரும்.

**கணிதத் துறையில் வளர்ச்சி:**

தொன்மை காலங்களிலேயே எகிப்தியர்கள் எண்களை பயன்படுத்தியுள்ளனர். 2000 BCE இல் எழுதப்பட்ட பாபைரஸில் கணித வினாக் களை பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன. இவற்றில் நான்கு முக்கிய ஆவணங்கள் மிகுதியான குறிப்புகளை தருகின்றன. அவை கஹ்ன் பிராக்மென்டஸ், பெர்லின், மாஸ்கோ மற்றும் ரின்ட் பாப்பைரஸ். எந்த அளவு முறைகள் பயன்படுத்தப்பட்டன என்பதையும் உதாரணத்தோடு இந்த ஆவணங்கள் விளக்கு கின்றன. முக்கோணத்தின் பக்கங்களின் விகிதங் கள் 3:4:5 என்றால் அவை செங்கோண முக்கோணம் என்றும் அறிந்து வைத்திருந்தனர். (இவையே பித்தாகரஸ் தேற்றம் எனப்படுகிறது). மேலும் இந்த அறிவாற்றலையே அவர்கள் தங்களுடைய கட்டிடவியல் கணக்கிடுதலில் பயன்படுத்தினர்.

கோள்களுக்கும், நட்சத்திரங்களுக்கும் இடையே உள்ள வேறுபாட்டையும் எகிப்தி யர்கள் அறிந்து வைத்திருந்தனர். சாதாரண கண்களை கொண்டு பார்க்கவியலாத நட்சத்தி ரங்களை பற்றியும் தங்களுடைய வானியல் ஆய்வில் சேர்த்துள்ளனர். எகிப்தியர்கள் நைல் நதியை சார்ந்தே வாழ்ந்ததால், அதனுடைய மட்டத்தையும் கணக்கிட வேண்டியிருந்தது. ஆறுகளின் உயரத்தை கணக்கிட நிலோமீட்டர் எனப்படும் அளவுகோள்களும் அதை அளவிட அதிகாரிகளும் நியமிக்கப்பட்டனர்.



# சமூக நலனின் பெண்கள்

**இறைவன் தன் திருமறையில் 67 : 2 வசனத்தில் ...**

“உங்களில் அழகிய செயலுக்குரியவர் யார் என்பதைச் சோதிப்பதற்காகவே மரணத்தையும், வாழ்வையும் அவன் படைத்தான், அவன் மிகைத்தவன், மன்னிப்பவன்”

இந்த வசனத்தில் மூலம் அல்லாஹ் நமக்கு புகட்டும் பாடம் என்னவென்றால், வீட்டிலும் சரி, சமூகத்திலும் சரி அழகிய செயல் செய்வது ஆண்களுக்கு மட்டும் அல்ல, பெண்களுக்கும் கடமைதான்.

நமக்கு நம் வீட்டை சுத்தம் செய்து, சமையல் அறை வேலை, குழந்தைகள் பாது காப்பு, தொழுகை, கொஞ்சம் குடும்ப கதை பேசி, இப்படி குண்டு சட்டிக்குள் குதிரை ஓட்டுவதே நம் உலகம் என்று நினைத்து வருகிறோம்.

ஏதோ வெந்ததை திண்போம், விதி வரும் போது போய் சேர்வோம் என்று நம் வாழ்நாள்கள் கழிந்துக் கொண்டிருக்கிறது.

இப்படியே நாம் இருப்பதால்தான், இஸ்லாம் பெண்களை அடிமைபடுத்து கிறது, உரிமை வழங்கவில்லை என்று இன்னும் பல விமர் சனங்களையும் நாம் இஸ்லாமிய மார்க்கத்திற்கு வாங்கிக் கொடுத்து கொண்டி ருக்கிறோம்.

அதற்காக நாகரீகத்தின் பெயரால் வெளியே இறங்கி அநாகரீகம் செய்ய வேண்டும் என்பதல்ல பொருள்.

அன்றைய காலத்தில் பெண்களிடம் வெட்கமும், ஒழுக்கமும் எப்படி உயர்வாக இருந்ததோ, அதைவிட ஒருபடி மேலாகவே நம்மிடம் வெட்கமும், ஒழுக்கமும் இருக்க வேண்டும். காரணம், என்னவென்றால் இடைப் பட்ட காலத்தைவிட தற்கா லத்தில் மார்க்க கல்வியும், உலக கல்வியும் நமக்கு அதிக மாகவேகிடைத்துக்கொண்டி ருக்கிறது.

நாம் நமது குடும்பத்தில் என்ன நடக்கிறது, தம்மை பற்றி யார் என்ன சொன்னது, அதற்கு பதில் எப்படி கொடுப் பது என்பதை அறிவதில் அதிக அக்கறை எடுக்கிறோம். அதை போல சமூகத்தில் என்ன நடக்கிறது? யாருடைய மார்க்கம் மக்களிடையே எப்படி புரியப்பட்டிருக் கிறது. அதற்கு நாம் என்ன, எப்படி எதில் கொடுப்பது என்றும் அக்கறை எடுக்க பதில் கொடுப்பது என்றும் அக்கறை எடுக்க வேண்டும்.

**இறைவன் தன் திருமறையிலே 3 : 110 வது வசனத்தில் கூறுகிறான்....**

‘நீங்கள் மனித குலத்துக் காகத் தேர்வு செய்யப்பட்ட சிறந்த சமுதாயமாக இருக் கிறீர்கள். நன்மையை ஏவுகிறீர் கள், தீமையை தடுக்கீறீர்கள்! அல்லாஹ்வை நம்புகிறீர்கள் என்று கூறுகிறான். இதில்

ஆண் என்றோ, பெண் என்றோ சமுதாயம் குறிப்பிட்டு கூறவில்லை, சிறந்த சமுதாயம் எப்படி இருக்க வேண்டும் என்றால் நன்மையை ஏவுபவராகவும், தீமையை தடுப்பவராகவும் இருக்க வேண்டும். சமூகம் என்றால் ஆண், பெண் எல்லோரும் அடங்கியதே ஆகும்.

எனவே ஆண்கள் மட்டும் சிறந்தவர்களாக இருந்தால் போதுமா? பெண்களும் இறைவனது பார்வையில் சிறந்தவர்களாக ஆக வேண்டும் என்றால், நன்மையை ஏவி, தீமையை தடுக்கும் பணியில் நாமும் அங்கம் வகிக்க வேண்டும். இதற்காக நம்மிடம் முதலில் இருக்க வேண்டியது என்னவென்றால், இறை அச்சமும், ஈமானிய உறுதியும், நாம் பிறருக்கு சொல்லப்போகும் விஷயத்தை நாம் முதலில் செய்பவர்களாக இருக்கும் தன்மையும் ஆகும்.

**இறைவன் கூறுகிறான்...**

“நம்பிக்கை கொண்டோரே! நீங்கள், செய்யாததை ஏன் சொல்கிறீர்கள்”! ( 61:2 )

“நீங்கள் செய்யாததைச் சொல்வது அல்லாஹ்விடம் கடும் கோபத்திற்குரியது” ( 61 :3 ) என்று

முதலில் இறைஅச்சம் இருந்தால்தான் தவறுகள் செய்யாமல் நம்மை நாம் தற்காத்துக் கொள்ள முடியும் ;

ஈமானில் உறுதி இருந்தால் தான் நன்மையான காரியங்களை உறுதியோடும், நிறைவோடும் செய்ய முடியும்.

இந்த இரண்டும் செவ்வனே நம்மிடம் வந்துவிட்டால் நன்மை, தீமைகளை பிரித்தறியும் அறிவோடு நாம் செயல்கள் செய்ய ஆரம்பித்து விடுவோம். இப்போது நாம் எந்நேரத்திலும் நன்மையை ஏவி, தீமையை தடுக்கும் பணியை செய்யும் தகுதியையும் பெற்று விடுகிறோம்.

இறைப் பணியை நபி (ஸல்) அவர்களும், அவர்களோடு ஸஹாபாக்களும் கூடவே ஹஸாபி பெண்மணிகளும் செவ்வனே செய்தார்கள். அதிகமான ஹதீஸ்கள் நபியுடைய மனைவிமார்கள் வழியாக அறிவிக்கப்பட்டிருப்பதை நாம் ஹதீஸ் கிரதங்களில் பார்க்கிறோம்.

அவர்களும் தங்களின் பொறுப்புகளை உணர்ந்து இருந்தார்கள், எவ்வளவு கஷ்டங்கள், சிரமங்கள் வந்தபோதும் இறைப்பணி செய்தார்கள், தன் உயிரையும் கொடுத்தார்கள். அதனால் அவர்கள் ......... அல்லாஹ்வால் பொருந்திக் கொள்ளப்பட்டவர்கள் எனும் அந்தஸ்தை பெற்று, சொர்க்கத்தில் இருக்கிறார்கள்.

நாமும் இதுபோன்று இருக்க வேண்டும் என்றால், வீட்டுப் பணியோடு, இறைப்பணி செய்ய வேண்டும்.

நபி (ஸல்) அவர்கள் தன் இறுதி வேளையிலும் கூட ................. என்னிடம் இருந்து ஒரு வசனத்தை கேட்டாலும் மற்றவர்களுக்கு அதை எத்தி வைத்து விடுங்கள் என்றே கூறினார்கள்.

அவர்களை இவ்வாறு கூற வைத்தது எது? இறைவன் நாளை நம்மை குற்றவாளிக் கூண்டில் நிறுத்தி விடக்கூடாதே என்ற அச்சம் தான். நாமெல்லாம் இறுதி நிலையில் எப்படி இருக்கிறோம், உலகை விட்டு செல்லப்போகிறோமே இதை செய்தோமா? அதை செய்தோமாஎன்றுஉலகசிந்தனையில்இருக்கிறோம்.

இந்த நிலையை எல்லாம் நாம் மாற்றிக் கொள்ள வேண்டும், ஏனென்றால் நம்மை நாம் மாற்ற முயற்சிக்காதே வரை யாராலும் நம்மை மாற்ற முடியாது.

மாற்றக்கூடிய இந்த உலகில் “மாற்றம்” ஒன்றுதான் மாறாமல் இருக்கிறது.

மனிதன் மாற்றத்தை விரும்பக் கூடியவன் என்பதை உணர்ந்த இறைவன் செய்த அதிசயத்தை நாம் என்றாவது சிந்தித்துப் பார்த்தோமா? நமது படைப்பையே 7 நிலைகளாக மாற்றி அமைத்துள்ளான்.

1. குழந்தை 2. சிறியவன், சிறுமி
3. மாணவன், மாணவி
4. இளைஞன், இளம் பெண்
5. ஆண், பெண்
6. தந்தை, தாய்
7. முதியவர், மூதாட்டி

இப்படி பல நிலைகள் நம் வாழ்விலே சுவாரஸ்யமாக நாம் அனுபவித்து வருகிறோம்.




இதில் நாம் கவனிக்க வேண்டிய முக்கியமான விஷயம் என்வென்றால், இந்த 7 நிலையிலோ நாம் இறைவனின் அடியார்களா கவும் இன்றும் நம் பெற்றோர்களுக்கு பிள்ளை களாகவும் மாறா நிலையிலே இருக்கின்றோம்.

இதனால்தான் தானோ என்னவோ இறைவன் தன் அருள்மறையிலே ( 17:23 )–வது வசனத்திலே,

“என்னைத் தவிர வேறு யாரையும் வணங்காதீர்கள், பெற்றோருக்கு உபகாரம் செய்யுங்கள்! என்று உமது இறைவன் கட்டளையிட்டுள்ளான்,

உம்முடன் இருக்கும் அவ்விருவருமோ, இருவரில் ஒருவரோ முதுமையை அடைந்து விட்டால் அவ்விருவரை நோக்கி ‘சீ’ எனக் கூறாதே! அவ்விருவரையும் விரட்டாதே! மரியாதையான சொல்லையே அவ்விருவரிட மும் கூறு என்று, இப்படி நமது தேவைகளை பல விதங்களில் நிறைவேற்றி தரும் இறைவனுக்கு, நாம் எந்த வகையில் நன்றி செலுத்துகிறோம், அவன் நமக்கு எண்ணற்ற உதவிகளை செய்துள்ளான், நாம் அவனுக்கு என்ன ரீதியில் உதவுகிறோம் என்பதை நாம் ஒரு கனம் சிந்தித்துப் பார்க்க கடமைப் பட்டுள்ளோம்.

இறைவன் நமக்கு வழங்கிய அருட் கொடைக்கு நன்றி செலுத்தும் விதமாக 5 வேளை தொழுகிறோம், இன்னும் பல கடமை களை நிறைவேற்றுகிறோம்.

அவன் நமக்கு செய்த உதவிகளுக்கு பதில் உதவியாய் அவன் மார்க்கத்தை மக்கள் மத்தியில் எத்தி வைப்பதே, நாம் அவனுக்கு செய்யும் பெரிய உதவி ஆகும். இறைவன் கூறுகிறான்...

“நீங்கள் என்னை நினைவு கூறுங்கள், நானும் உங்களை நினைவு கூறுவேன் ; இன்னும் நீங்கள் எனக்கு நன்றி செலுத்துங்கள், எனக்கு மாறு செய்யாதீர்கள். (2 : 152 )

அல்லாஹ் கூறுகிறான் அவன் நம்மை நினைவு கூற வேண்டுமென்றால், நம் தேவைகளை அவன் நிறைவேற்ற வேண்டு மென்றால், நமக்கு அவன் உதவ வேண்டும் என்றால், நாம் என்ன செய்ய வேண்டும்? நாமும் அவனை நினைவு கூற வேண்டும், நினைவு கூறுவது என்றால் என்ன? அவனை நினைத்துக்கொண்டே இருப்பதா? அது மட்டும் அல்ல...

நாம் நம் நண்பர் ஒருவர் நம்மிடம் ஒரு காரியத்தை ஒப்படைத்து நம்மிடம் அதை செய்யச்சொல்லி இருக்கையில் நமக்கு அது மறந்துவிட்டது.

திடீரென அந்த நண்பரின் நியாபகம் வரும் போது, ஐயோ இவர் இதை செய்ய சொன்னாரே மறந்துவிட்டோமே என்று கூறி செய்ய ஆரம்பிக் கிறோம்.

அதேபோல் அல்லாஹ்வின் நினைப் போடே எந்நேரமும் இருக்கும் நாம், அவன் நம்மிடம் செய்ய சொன்ன காரியங்களை எல்லாம் செய்கின்றோமோ? என்றால், பதில் கேள்வி குறியாகவே இருக்கிறது.

அவன் நம்மிடம் ஒப்படைத்த பணிகளை எல்லாம் முறையாக நினைவு கூறியதுபோல்



ஆகாது.

இதனை சரியாக உணர்ந்ததால் தான் நபிகள் நாயகத்தின் மனைவிமார்களும், மகளும், இன்னும் ஸஹாபிய பெண்களும் தங்களின் வாழ்க்கையை இஸ்லாமிய அச்சில் வார்த்தெடுத்தார்கள், திருக்குர்ஆனின் நபி வழியின் சீரிய அறிவுரைகளை நயம்படக் கற்று, இறைநெறியை முழுமையாக கடைப்பிடித்து வாழ்ந்தார்கள்.

நபி (ஸல்) அவர்களின் பல செயல்பாட் டிற்கும் உறுதுணையாக நின்றி ஹதீஜா (ரழி) அவர்களும் சிறந்து விளங்கிய உம்மு உமாரா (ரலி) அவர்களும், உழைப்பிலும், அறிவிலும் சிறந்து விளங்கிய அஸ்மாபின்த் அபீ பக்ரு (ரலி) அவர்களும், வீர உயிர் தியாகி அன்னை சுமைய்யா (ரலி) அவர்களும், அழைப்பு பணியில் சிறந்த உம்மு ஸீலைம் (ரலி) அவர்களும் மார்க்கத்திற்காக முழு நேரமும் உழைத்த ஃபாத்திமா பின்த் கத்தாய் (ரலி) அவர்களும்

..................... (ரழி) அவர்கள், ஃபாத்திமா (ரழி) அவர்களும் வாழ்ந்து காட்டிய வாழ்க்கை நமக்கெல்லாம் அழகிய முன் மாதிரிகளாகும்.

இவர்கஎெல்லாம் முஃமீன்களின் தாய்மார்கள் என்று அழைக்கப்பட்டவர்கள். இவர்களை முன் மாதிரியாக கொண்டு இன்னும் சில சகோதரிகள் வாழ்ந்து வருகிறார்கள், வாழ்ந்தார்கள்.

................. தொடர்ந்து பார்ப்போம்...

**- நாதிரா அஸ்ரஃபியா**




# தமிழக விவசாயிகளுக்கு மோடி அரசு..?



**தமிழகத்தில் காவிரி பிரச்சனை, முல்லை பெரியார் பிரச்சனை, கெயில் பிரச்சனை, அடுத்தாக இப்போது நெடுவாசல் என தமிழக விவசாயிகளுக்கு தொடர்ச்சியாக பிரச்சனைகள் வருவது வேதனைக்குரியது.**

ஐந்து மாவட்ட பெரியாறு-வைகை பாசன விவசாயிகளின் சங்கத் தலைவர் கே.எம். அப்பாஸ் மதுரை காமராஜர் பல்கலைக்கழகத்தில் பேசும் போது,

"பிரமீடு, தேவகுளத்தை கேரளாவுக்கு விட்டுகொடுத்ததால் மட்டும் தமிழக்திற்கு 405 டி.எம்.சி தண்ணீர் இழப்பு ஏற்படுகிறது. தமிழகத்தில் ஆண்டுக்கு சராசரியாக 35 நாட்கள் மட்டுமே மழை பெய்கிறது. இதன் மூலம் 940 மி.மீ மழைநீர் கிடைக்கிறது. தாமிரபரணி தவிர பிற ஆறுகள் வெளிமாநிலங்களில் உற்பத்தி ஆகின்றன. நாம் நீருக்காக வெளிமாநிலங்களையே நம்பி இருக்க வேண்டியுள்ளது." என்றார்.

காவிரிக்கு மேலாண்மை வாரியம் அமைக்க உத்தரவிட்டது உச்ச நீதிமன்றம் அதனை கர்நாடக அரசு செயல்படுத்தவில்லை. ஏன் நீதிமன்ற உத்தரவை செயல்படுத்தவில்லையென மத்திய அரசும் அந்த மாநில அரசை கேள்வி கேட்கவில்லை. முல்லை பெரியார் அணையில் 1979ம் ஆண்டு தண்ணீர் சேகரிக்க மறுக்கப்பட்டது அப்போதிலிருந்து தமிழக விவசாயிகள் அதற்காக போராடி வருகிறார்கள்.

**கெயில் பிரச்சனை!**

இது தமிழகத்தில் 310 கி.மீ தூரத்தை சேலம், கோவை, தர்மபுரி, நாமக்கல், கிருஷ்ணகிரி, ஈரோடு, திருப்பூர் ஆகிய ஏழு மாவட்ட விவசாய நிலத்தை துளைத்துக் கொண்டு போகும் எரிவாயு குழாய் திட்டம். இந்த கெயில் எரிவாயு திட்டத்திற்கு 66 அடி அகலத்திலும் 3 1/2 அடி ஆழத்திலும் எரிவாயு குழாய் பதிக்கப்படுவதோடு குழாய் பயணிக்கும் இருபுறமும் கிட்டத்தட்ட 20 அடி தூரத்திற்கு விவசாயம் செய்யக்கூடாது. மேலும் குழாயைச் சுற்றியுள்ள ஒரு கிலோமீட்டர் தூரம் பாதுகாக்கப்பட்ட பகுதியாக அறிவிக்கப்பட்டும் இருக்கிறது.

கெயில் எரிவாயு குழாய் செல்லும் பாதையிலோ அதன் அருகிலோ ஆழமாக ஊடுருவும் வேர் கொண்ட பயிர்களை பயிரிடக் கூடாது. மரங்களை அறவே நடக்கூடாது. விவசாயத்திற்கு ஆதாரமான கிணறோ, வாய்க்காலோ பாதுகாக்கப்பட்ட பகுதிக்குள் வெட்டக் கூடாது. இதுமட்டுமல்ல பதிக்கப்பட்ட குழாயில் வெடிப்போ கசிவோ ஏற்பட்டால் சமபந்தப்பட்ட நிலத்தின் விவசாயியே அதற்கு முழு பொறுப்பாவாராம். அவர் மீது கிரிமினல் வழக்கு போட்டு ஏழு முதல் பத்து ஆண்டுகள் வரை சிறையில் தள்ள ஆவண செய்திருக்கிறது திருத்தப்பட்ட எரிவாயு குழாய் பாதிப்புச் சட்டம்.

குழாய்களுக்கு ஏதாவது பாதிப்பு ஏற்பட்டால், தான் நிரபராதி என்பதனையும் நிலத்தின் சொந்தக்காரரே நிருபிக்க வேண்டுமாம்.

இப்போது தமிழகத்தின் 7 மாவட்டங்களில் புதுக்கோட்டை மாவட்டதில் உள்ள நெடுவாசல் உட்பட 22 இடங்களில் ஹைட்ரோ கார்பன் எடுக்கும் திட்டம். இந்த எரிவாயு எடுக்க ஒதுக்கப்பட்ட இடங்கள் அனைத்துமே வானம் பார்த்த பூமி. விவசாய நிலங்கள். ஏற்கனவே நிலத்தடி நீர் கீழிறங்கி விட்டது என சோகத்தில் இருக்கும் மக்களுக்கு உங்கள் நிலத்தை எடுத்து ஆய்வு செய்து ஹைட்ரோ கார்பன் எடுக்க போகிறோம் என்று மட்டும் கூறிவிட்டு வேறு எந்த தகவலும் இல்லாமல் நிலத்தை அபகரிக்கும் பணியில் இறங்கினார்கள். அதற்கு எதிரான போராட்டமும் இன்று வீரியமடைந்துள்ளது.

**தமிழகம் கற்றுக் கொண்ட போராட்டம்.**

ஜல்லிக்கட்டு போராட்ட எழுச்சிக்கு பிறகு தமிழகம் முழுக்க ஒரு போராட்ட சூழ்நிலையில் தான் நகருகிறது. தமிழகத்தின் ஒரு பகுதியில் நடக்கும் பிரச்சனைகள் தமிழகத்தின் பிரச்சனையாகவே பார்க்கும் மனநிலைக்கு மக்கள் உருவாக்கப்பட்டுள்ளார்கள். இந்த மாற்றத்தை தமிழகத்துக்கு எதிரான மத்திய அரசின் துரோக நிலையும் மாணவ போராட்டமும் ஏற்படுத்திற்று.

புதுக்கோட்டை மாவட்டத்தில் மட்டும் வடகாடு, நெடுவாசல், கருவாக்குறிச்சி, கோட்டைக்காடு, வாணக்காடு ஆகிய இடங்களில் ஆய்வு செய்வதற்காக ஆழ்துளை கிணறு அமைத்து ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. இந்த நிலையில் மத்திய அரசு ஹைட்ரோ கார்பன் எடுத்துக் கொள்ள எண்ணெய் நிறுவனங்களுக்கு அனுமதி கொடுத்த நிலையில் நெடுவாசல், நல்லாண்டார்கொல்லை, கோட்டைக்காடு பகுதி மக்கள் போராட்டத்தில் இறங்கினார்கள்.

இந்த மக்களின் போராட்டத்தை தற்போதைக்கு முதலமைச்சராக இருக்கும் எடப்பாடி பழனிச்சாமி ஆதரித்து இத்திட்டத்தை கொண்டு வர மாட்டோம் என்று கூறி பின்பு எண்ணெய் வள அதிகாரிகளை அழைத்து சமரச முயற்சியில் இறங்கினார், ஆனால் அது விவசாயிகளிடம் பலிக்கவில்லை. மத்திய அரசும் போராட்டத்தை கலைக்க பெரும் முயற்சியில் ஈடுபட்டது.

**மத்திய அரசின் சூழ்ச்சிகள்.**

நெடுவாசல் திட்டத்தை எதிர்த்த மக்களிடம் மத்திய அரசை சேர்ந்த பாஜகவினர் மக்கள் விரும்பவில்லையென்றால் இந்த திட்டம் கைவிடப்படும் என அறிக்கை விட்டார்கள். ஆனால் மக்கள் தொடர்ச்சியாக 20 நாட்களுக்கு இத்திட்டம் வேண்டாம் என்று போராட்டங்கள் நடத்தியும் திட்டத்தை கைவிட்டதாக அறிவிக்கவில்லை.

இந்த நிலையில் பாஜகவின் எம்.பியான பொன். ராதாகிருஷ்ணன்

"தமிழகத்தின் போராட்டங்களில் பயங்கரவாதிகள் ஊடுருவல்" என குற்றச்சாட்டை கூறினார். ( வணக்கம் இந்தியா 10.03.2017). தமிழகத்தின் தொடர்ச்சியான போராட்டங்கள் அனைத்தும் மத்திய அரசினுடைய தமிழக துரோக நிலையை எதிர்ப்பதென்பதால் ஒட்டு மொத்த போராட்டத்தையும் திசைதிருப்ப முயற்சித்தார்கள்.





அதே நேரத்தில் பாஜகவின் செய்தி தொடர்பாளர் எச்.ராஜா,

" ஒரு விதத்தில் மத்திய அரசை எதிர்க்க வேண்டியதே அவர்களது வேலை. அதனை முறியடிப்போம்" என பேட்டி கொடுக்கிறார். (தி இந்து 06-03-17). எப்படி ஜல்லிக்கட்டு மாண வர்களின் போராட்டத்தில் மத்திய அரசுக்கு எதிராக பேசியதை இந்திய இறையாண்மைக்கு எதிராக பேசுகிறார்கள் என்று சித்தரித்து அடிதடி நடத்தினார்களோ அதே போன்று நடத்துவதற்கான முயற்சியும் எடுக்கப்பட்டது.

கர்நாடக எம்.பியான தமிழகத்தை சேர்ந்த நிர்மலா சீதாராமன் திடீரென தமிழகத்திற்கு வந்தார். மக்களிடம் பேச்சுவார்த்தை நடத்தினார். ஆனால் இதே விவசாயிகளின் பிரச்சனையான காவிரி மேலாண்மை வாரியம் அமைக்காமல் போன கர்நாடகத்தின் முடிவுக்கு குரல் கொடுக் காமல் விவசாயிகளுக்காக பரிந்து பேசுகிறேன் என்று தமிழகத்திற்கு வந்ததை தமிழகம் கவனிக் காமல் இல்லை. அதனால் மக்கள் அவரது பேச்சு வார்த்தையை நிராகரித்தனர்.

அதே போல்,தமிழகமே ஹைட்ரோகார்பன் என்று கொந்தளித்துக் கொண்டிருந்த வேளை யில் மத்திய பெட்ரோலியத்துறை அமைச்சர், அமெரிக்காவில் ஹைட்ரோ கார்பன் எடுக்கும் முதலீட்டாளர்களிடம் கூட்டத்திற்கு கம்பளம் விரித்து வரவேற்று கொண்டிருந்தார். ஹைட்ரோ கார்பன் திட்டத்துக்காகவே மத்திய அரசு சிறப்புச் சட்டம் இயற்றி ஒற்றைச் சாளர அனுமதிக்கு வழி செய்துள்ளது எனவும் இந்தியா வில் (நெடுவாசலும் அடங்கும்) பல பகுதிகளில் ஆய்வுகள் முடிந்து தனியார் நிறுவனங்கள் முன் வந்திருக்கிறது என கூறி முதலீட்டாளர்களுக்கு அழைப்பு கொடுத்தார். இப்போது இந்தியாவில் 31 நிறுவனங்களுக்கு அனுமதி கொடுத்துள்ளோம் அதில் 15 நிறுவனங்கள் புதிதாக பெட்ரோலியம் தொடர்பாக தொழில் தொடங்கியவை என பெருமையாக பேசினார். (வணக்கம் இந்தியா 10.03.17).

**மக்களின் கேள்விகள்**

பாஜக எம்.பி இல.கணேசன் நெடுவாசல் பிரச்சனையை பற்றி கூறும் போது

"எல்லா திட்டத்தையும் இப்படி எதிர்த்தீர்கள் என்றால் என்ன ஆகாயத்திலா திட்டத்தை செயல் படுத்த முடியும். ஒரு நாட்டுக்காக ஒரு மாநிலம் தியாகம் செய்யலாம்" என்றார். அதற்கு மக்களும் சில பதில்களை முன்வைத்தார்கள். அதாவது, ஆகாயத்திலா திட்டங்களை செயல்படுத்த

முடியுமா என பிஜேபி எம்.பி கேட்கிறார்! திட்டங்கள் எப்படியோ எங்களுக்கு தெரியாது. ஆனால் விவசாயம் நிலத்தில் மட்டும் தான் செய்ய முடியும். ஆகாயத்தில் முடியாது என பதில் கொடுத்தார்கள்.

ஒரு மாநிலம் தியாகம் செய்யலாம். ஆனால் அதற்காக எம்.பிக்களும் தான் தியாகம் செய்யலாமே. நாடாளுமன்ற எம்.பிக்களுக்கு ஊதியம் தவிர பேருந்து, ரயில், விமானத்தில் செல்ல சலுகைகள், இலவச தொலைப்பேசி வசதி, நாடாளுமன்ற கூட்டத்தொடரில் பங்கேற்றால் தினப்படி உட்பட பல்வேறு சலுகைகள் வழங்கப் படுகின்றன. தற்போது எம்.பிக்களுக்கு மாதந் தோறும் 50,000 ரூபாய் சம்பளம் வழங்கப் படுகிறது.

பிற படிகளாக 45 ஆயிரம் முதல் 95 ஆயிரம் ரூபாய் வரை கிடைக்கிறது. டெல்லியில் வசதி படைத்தோர்கள் இருக்கும் இடத்தில் வீடு ஒதுக்கல் என எம்.பிகளின் இந்த சலுகைகளும் சம்பளமும் பத்தாமல் போக இன்றைய உ.பி முதலவர் யோகி ஆதித்யநாத் தலைமையில் ஒரு குழு அமைக்கப்பட்டு இந்த சம்பளம் சரியானதா என ஆய்வு செய்தது மத்திய பாஜக அரசு. யோகி ஆதித்யநாத் குழு எம்.பிக்களின் சம்பளம் பத்தாது இன்னும் 100% உயர்த்த வேண்டும் என்று பரிந்துரை செய்தது (தினமலர் 01.05.2016).

நாட்டின் பொருளாதாரத்திற்காக விவசாய நிலங்களை தியாகம் செய்ய சொல்வோர்கள் எப்போது தங்களது ஏகபோக வாழ்க்கையை கொஞ்சமாக தியாகம் செய்வது?. மாநிலத்தை தியாகம் செய்ய சொன்ன இல.கணேசன் தனது சலுகைகளை நாட்டிற்காக தியாகம் செய்வாரா?

தூத்துக்குடியில் ஊடகத்திற்கு பேட்டியளித்த பாஜக எம்.பி இல.கணேசன்,

“இந்த திட்டத்தை எதிர்த்து போராடு பவர்கள் நாட்டு நலனுக்காக, மக்களுக்காக போராடுபவர்கள் அல்ல. இவர்களின் பின்னணி குறித்து மத்திய அரசு விசாரிக்க வேண்டும்“ என்றார். விவசாய நிலத்திற்காக தங்களது வாழ் வாதாரத்தை தக்க வைத்துக் கொள்ள போராடும் மக்களின் பின்னனி என்னவென்று ஆராயச் சொல்லி போராட்டத்தை களங்கப்படுத்துகிறார் கள் ஆளும் வர்க்கத்தினர்.

"தாமிரபரணி ஆற்றில் வெளிநாட்டு நிறுவனங்கள் குடிதண்ணீர் எடுப்பதற்கு அனுமதி யளித்தது கண்டிக்கத்தக்கது" என்று பேட்டி கொடுத்திருக்கிறார் பாஜக எம்.பி இல, கணேசன். அவரிடம் மக்களின் சார்பாக கேட்பது, வெளிநாட்டு நிறுவனங்கள் தண்ணீர் எடுக்கக் கூடாது என்று சொல்லும் நீங்கள் உங்கள் கட்சியின் சார்பாக அமெரிக்காவிற்கு சென்று விவசாய நிலங்களை அழித்து ஹைட்ரோ கார்பன் எடுக்க வாருங்கள் என அழைப்பு விடுக்கும் பெட்ரோலியத்துறை அமைச்சரையும் கண்டியுங்கள்.

மத்திய அரசின் அறிக்கைப்படி ஹைட்ரோ



கார்பன் திட்டம் செயல்படுத்தினால் 500 பேருக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும் என்கிறார் கள். ஆனால், எண்ணெய் நிறுவங்கள் அபகரிக் கும் இடத்தில் விளைநிலங்களை வைத்தே நாங்கள் 500க்கும் மேற்பட்டோருக்கும் வேலை தருவோம் என்கிறார்கள் நெடுவாசலில் போராடும் மக்கள்.

**தொடரும் போராட்டங்கள்...**

இப்படியான தொடர்ச்சியான போராட் டங்களுக்கு அடுத்தக்கட்டமாக டெல்லியில் தமிழக விவசாயிகள் சுமார் 100 பேர் கடந்த மார்ச் மாதம் 13ம்தேதி முதல் போராடி வருகின்றனர். வறட்சி நிவாரணம், வங்கிக் கடன் தள்ளுபடி, உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி சங்கத் தலைவர் அய்யாக்கண்ணு தலைமையில் அரை நிர்வாணப் போராட்டம் நடத்தி வருகின்றனர்.

போராட்ட பூமியாகவே மாறிவிட்டது தமிழகம், போராடித் தான் வாழ வேண்டும் என்ற நிலைக்கு தமிழக மக்கள் மத்திய அரசால் தள்ளப்பட்டுள்ளனர்.

**- அபூ.சித்திக்.**



# ஃபாரூக் கொலையும் எதிர்வினைகளும்

**இன்று ஒரு ஆங்கிலப் பத்திரிகையாள நண்பர் வெகு நேரம் பேசிக்கொண்டிருந்தார்.**

"கோவை ஃபாரூக் படுகொலை பற்றி என்ன நினைக்கிறீர்கள். கல்புர்கி போன்றவர்கள் கொல்லப்பட்டதற்கு இணையான ஒரு பயங்கரவாத நடவடிக்கைதானே இது?" -என்பது அவர் கேள்வி.

**நான் சொன்னவை:**

"1. இது கடுமையாகக் கண்டிக்கத்தக்கதும் வருந்தத்தக்கதுமான ஒரு நிகழ்ச்சிதான். இத்தகைய மனநிலை கொலையாளிக்கு உருவாகியதன் அடிப்படையிலான மதக் கருத்தியல்கள் பற்றித் தொடர்புடையவர்கள் சிந்திக்க வேண்டும் என்பதில் இம்மியும் ஐயமில்லை.

2. எனினும் இந்தக் கொலையை, இந்துத்துவ அமைப்புகள் கல்புர்கி, தபோல்கர் போன்றோரைக் கொலை செய்ததுடன் ஒப்பிட முடியாது.

இந்துத்துவ அமைப்புகள் செய்த கொலைகளுக்குப் பின்னால் ஒரு விரிவான அரசியல் திட்டமும், குறிப்பான ஒரு hard core பயங்கரவாத அமைப்பும் உள்ளது. அந்த மூன்று கொலைகளுமே ஒரே மாதிரி நடந்தவை என்பது குறிப்பிடத்தக்கது. ஃபாரூக் கொலையைப் பொருத்த மட்டில் அது தனிப்பட்ட முறையில் யாரோ ஒரு மத அடிப்படைவாதி செய்தது. இரண்டிற்கும் பெரிய வேறுபாடு உள்ளது.

3. இந்தக் கொலையை அனைத்து முஸ்லிம் இயக்கங்களும் கண்டித்தன. ஆனால் இந்துத்துவ அமைப்புகள் செய்யும் கொலைகளை எந்த இந்துத்துவ அமைப்புகளும் கண்டிப்பதில்லை. ஒரு புன்னகையோடு வேடிக்கை பார்ப்பதே அவர்களின் வழக்கம்.

4. இந்துத்துவ பயங்கரவாதங்களை எல்லா இந்துத்துவ அமைப்புகளின் தலைவர்களும் பல்வேறு வகைகளிலும் மௌனமாக ஆதரிப்பர். பால் தாக்கரே போன்ற தலைவர்கள் வெளிப்படையாகவே ஆதரித்தனர். சாத்வி பிரக்ஞா உள்ளிட்ட மலேகான் பயங்கரவாதிகளுக்கு ஒவ்வொரு இந்துவும் உதவ வேண்டும் என வெளிப்படையாக அவர் அறிவித்தது நினைவுக்குரியது. முஸ்லிம் அமைப்புகள் அப்படிச் செய்வதில்லை.

5. மதபயங்கராவாதங்களுக்காக இந்துத்துவத் தலைவர்கள் விசாரணை ஆணையங்களால் குற்றம் சாட்டப்படும் போது அவர்கள் மீது நடவடிக்கைகள் எடுக்கப்படுவதில்லை. மும்பை கலவரங்கள் தொடர்பாக ஸ்ரீகிருஷ்ணா

ஆணையத்தால் பெயர் குறிப்பிட்டுக் குற்றம் சாட்டப்பட்டவர்கள், பாபர் மசூதி இடிப்பில் குற்றம்சாட்டப்பட்ட அத்வானி ஆகியோர் சில எடுத்துக்காட்டுகள். எனவே இந்த இந்துத் துவப் பயங்கரவாதங்கள் திருப்பி நிகழ்த்தப் படும் அபாயம் அதிகம்.

**6.** மாற்றுக் கருத்துக்களை வெளிப்படுத்துவதற்காக இப்படித் தாக்கப்படுவதில் வேறு சில முக்கிய வேறுபாடுகளும் உண்டு.

எச்.ஜி.ரசூல், சல்மா, கீரனூர் ஜாஹிர் ராஜா போன்றோர் முஸ்லிம் சமுதாயம் பற்றி எழுதுவது குறித்து முஸ்லிம்களுக்குக் கோபம் இருந்தாலும் பெருமாள் முருகன் போன்றோருக்கு ஏற்பட்டது போன்ற எதிர்ப்புகள் அவர்களுக்கு ஏற்பட்டதில்லை. ரசூல் விடயத்தில் மேற்கொள்ளப்பட்ட ஊர்ப்புறக்கணிப்பு நிச்சயமாக அவருக்குப் பல சங்கடங்களை ஏற்படுத்தின என்றாலும், அது கண்டிக்கத் தக்கது என்ற போதிலும், அப்படியான சந்தர்ப்பங்களில் கூட அவர் அதே ஊரில் பாதுகாப்பாகத்தான் இருந்தார். வேறு வன்முறைகள் நிகழ்ந்த தில்லை.

**7.** அன்வர் பாலசிங்கம் என்பவர் மீனாட்சிபுரம் மதமாற்ற நிகழ்வில் மதம் மாறிய தலித் பெண்களை முஸ்லிம் இளைஞர்கள் திருமணம் செய்து கொள்வதில்லை என ஒரு நாவல் எழுதி, முஸ்லிம் வெறுப்பாளர்களால் அது பிரபலப் படுத்தப்பட்ட போதும் முஸ்லிம் சமூகமோ இயக்கமோ எந்த வன்முறை அல்லது புறக்கணிப்பிலும் இறங்கவில்லை. மாறாக ஒரு அமைப்பு மதம் மாறியவர்களில் ஒருவரான மதிப்பிற்கிரிய டி.எம்.உமர் ஃபாருக் (டி.எம்.மணி) அவர்களின் தலைமையில் ஒரு குழுவை அனுப்பி அந்த ஊருக்குச் சென்று ஆய்வு செய்து, அது பொய்த் தகவல்தான் என அறிக்கை ஒன்றுதான் அளித்ததே ஒழிய வேறு வன்முறைகள் அல்லது புறக்கணிப்பு ஏதும் இல்லை. அந்த அறிக்கைக்கு பாலசிங்கம்



தரப்பில் மறுப்பு ஏதும் வெளியிடப்படவும் இல்லை.

எனவே இதுபோன்ற விஷயங்களில் சிறுபான்மை மதங்களின் எதிர்வினையையும் பெரும்பான்மை மதவாத எதிர்வினையையும் வேறுபடுத்திப் பார்ப்பது அவசியம். அவ்வாறு வேறுபடுத்தாமல் இரண்டையும் ஒன்றாகச் சித்தரிப்பது அறிவீனம் அல்லது விஷமத்தனம்.. சிறுபான்மை மதவாதம் பயங்கரவாதமாகவும், பெரும்பான்மை மதவாதம்

தேசபக்தியாகவும் அணுகப்படும் ஆபத்து குறித்து ஜவஹர்லால் நேரு அவர்களின் எச்சரிக்கை இங்கே கருதத்தக்கது.

**பாருங்கள் இப்போது இந்த விஷயத்தில் ஒவ்வொரு தமிழ் முஸ்லிமும் தாங்களே குற்றம் சாட்டப்பட்டுள்ளது போலப் பதறி முன்வந்து கண்டிப்பதும், முஸ்லிம் மதம் அப்படிச் சொல்லவில்லை என திருக்குரானிலிருந்து மேற்கோள் காட்டுவதும்.... எத்தனை அவலம்.."**

**(தொடரும்)**

# கருப்பாயி என்ற நூர்ஜஹான் நூல் வெளியீடு




அல்லாஹ்வின் மிகப் பெரிய கருணையாலும், கிருபையாலும் கும்பகோணத்தில் 26−2−2017 அன்று ஞாயிறு மாலை 6.45 மணிக்கு ஏ.எம். மஹாலில் வைத்து தமிழ்நாட்டில் மிகப்பெரிய தாக்கத்தை ஏற்படுத்திய திருநெல்வேலி மாவட்டத்தில்உள்ள“மீனாட்சி புரம்” மதமாற்றம் நிகழ்வை மையப்படுத்தி அன்வர் பால சிங்கம்என்பவர், இஸ்லாத்திற்கு மதம் மாறிய கருப்பாயி தற்பொழுது நூர்ஜஹான் மற்றும் அவர்களின் குடும்பத்தில் உள்ள பெண்களை முஸ்லிம் ஆண்கள் திருமணம் செய்ய வில்லை. இதனால் 35 வயது அடைந்தும் திருமணம் தடைபட்டதால் அவர்கள் குடும்பத்தோடு தற்கொலை செய்து கொண்டதாகவும் அதைக் “கருப்பாயி” என்ற “நூர்ஜஹான்” என்று தலைப்பிட்டு புத்தகமாக வெளியிட்டார்.

அந்த மீனாட்சிபுரத்துக்கு சென்ற தாருல் இஸ்லாம் ஃபவுண்டேஷன் தாவா குழு மீனாட்சிபுரத்தில்நடந்தநிகழ்வு களை நேரில் ஆய்வு செய்து, அப்படி ஒரு தற்கொலை சம்பவம் நடைபெறவில்லை என்றும் இது ஒரு பொய்யான தகவல் என்பதையும், அதை அன்வர் பாலசிங்கத்துடன் நேரடி விவாதத்தில் கூறியபோது, அதை அன்வர் பாலசிங்கம் இது ஒரு நாவல்தான் என்று கூறி மன்னிப்பும் கோரினார்.

அந்த புத்தகத்திற்கு மறுப்பு தெரிவிக்கும் வகையில் தான் “கருப்பாயி” என்ற “நூர்ஜஹான்” கதை ஆசிரியர் அன்வர் பாலசிங்கத்துடன் நேர்முகம் என்றதலைப்பில்கும்பகோணத்தில் நூல் வெளியிடப்பட்டது. தாருல் இஸ்லாம் ஃபவுண்டேஷன் டிரஸ்ட்டினால்.

**மற்றொரு நூல்**
**கூரியூர் ஜின்னா ஷஹீத்**

ராமநாதபுரம் மாவட்டத்தில் கூரியூர் என்ற கிராமத்தில் ஜின்னா அவர்கள் வாழ்க்கை பற்றியது.

கிட்டத்தட்ட 40 (நாற்பது) கிராமங்களை தன் முயற்சியால் இஸ்லாத்தின் பக்கம் அழைத்தவர். இவரின் அயராது உழைப்பை பார்த்த ஆதிக்க சக்திகள் இவரை கொலை செய்தது. அவரது வாழ்க்கை வரலாற்றை புத்தகமாக வெளியிடப்பட்டது. தாருல் இஸ்லாம் ஃபவுண்டேஷன் டிரஸ்ட் தலைமை உரையை வைகறை வெளிச்சம் ஆசிரியர் மு. குலாம் முஹம்மத், எம்.ஏ., நிகழ்த்தினார்.

மஸ்ஜிதே நூர் இமாம் ஏ.எஸ்.முஹம்மத் பாகவி, எம்.ஏ., கிராஅத் ஓதி நிகழ்ச்சியைத் தொடங்கினார்கள். சீர்காழி ஓய்வு பெற்ற நீதிபதி பி. குலாம் முஹம்மத், பி.ஏ.,பி.எல்., முன்னிலை வழங்கினார்.

வரவேற்புரையை ஹாஜி. பிஸ்மி எம். ஷம்சுதீன் நிகழ்த்தினார்.

கூரியூர் ஜின்னா ஷஹூத் நூலை ஹாஜி எஸ். முஹம்மது ஜக்கரிய்யா வெளியிட்டு

உரை நிகழ்த்தினார். அந்நூலை அல்ஹாஜ் ஏ. பிர்தௌன்கான் பெற்றுக்கொண்டார்.

கருப்பாயி என்ற நூர்ஜஹான் கதை ஆசிரியருடன் நேர்முகம் என்ற நூலை மஸ்ஜிதே நூர் செயலாளர் அல்ஹாஜ் எம். அல்லாபக்ஷ் வெளியிட்டார்.

ஆய்வுரைகளை துணை வட்டாட்சியர் (ஒய்வு) ஏ. முஹம்மத் ஆரிஃப், பி.காம்., எம்.மஹாலிங்கம், பி.ஏ.டீ., சமூக ஆர்வலர். ஜனாப். கே.எம்.கலீலுர் ரஹ்மான், முன்னாள் வி.ஓ. தேரிழந்தார். பி.கே.சுவாமி தொண்டு நிறுவனம், எம். நிஷார் அஹ்மத், எம்.எஸ். டபிள்யு, மாஸ் பவுண்டேஷன், தௌபிக், டி.என்.டி.சி. கவிஞர்..................... ஆகியோர் இஸ்லாத்தின் ஆய்வுரைகளை நிகழ்த்தினார்.

இறுதியாக தாருல் இஸ்லாம் ஃபவுண்டேஷன் டிரஸ்ட் செயலாளர் ஹாஜி எஸ்.எம். அப்துல் ரவூஃப் நன்றியுரை கூறினார்.

தாஃவா குழு சார்பாக சகோதரர் உமர் இயக்கிய "விடுதலை" குறும்படம் திரையிடப் பட்டது. இறுதியாக நிகழ்ச்சி இரவு 10 மணிக்கு நிறைவு பெற்றது.

நிகழ்ச்சி ஏற்பாட்டினை தாருல் இஸ்லாம் ஃபவுண்டேஷன் மற்றும் அன்பகம் தாஃவா மதரஸா கும்பகோணம் ஏற்பாடு செய்தது.


**இப்போது பரபரப்பான விற்பனையில்**




விலை ரூ. 200 மட்டுமே




விலை ரூ. 225 மட்டுமே

**வேர்கள் பதிப்பகம்,**

52/1, மண்ணடி தெரு, மண்ணடி, சென்னை - 600 001. தொடர்ப்புக்கு : 8148129887

# புதிய கல்விக் கொள்கை முன் வைக்கும் சவால்கள்

## சிறப்புக் கருத்தரங்கம்



சேர்கலோ அறக்கட்டளையின் சார்பாக 27.03.2017 அன்று 'புதிய கல்விக் கொள்கை முன்வைக்கும் சவால்கள்' என்ற சிறப்பு கருத்தரங்கம் நடைப்பெற்றது.

இக்கருத்தரங்கில் பொதுக் கல்விக்கான மாநில மேடையின் பொதுச் செயலாளர் திருமிகு.பிரின்ஸ் கஜேந்திர பாபு அவர்கள் மேற்கண்ட தலைப்பில் சிறப்புரையாற்றினார். அவர் தனது சிறப்புரையில் 'இந்திய அரசின் மனித வளமேம்பாட்டு துறை அமைச்சகம் தனது வலைதளத்தில்'தேசிய கல்விக் கொள்கை 2016 வரைவிற்கான சில உள்ளீடுகள்' என்ற 43 பக்க ஆங்கில ஆவணத்தை வெளியிட்டார்கள்.

இந்த ஆவணத்தில் கூறப்பட்ட கொள்கை முன் மொழிவுகள் இந்தியாவில் இரண்டு நூற்றாண்டுகளுக்கு பின் இழுத்துச் செல்லும் அபாயம் உள்ளதை எடுத்துக் கூறி இது இந்திய அரசமைப்பு சட்டத்திற்கும் மக்களாட்சி மாண்பிற்கும் எதிராக உள்ளது.

எனவே மக்கள் விரோத கல்வி கொள்கை முன்மொழிவுகளை இந்திய அரசு திரும்பப் பெற வேண்டும் என்ற கோரிக்கை பாரளு மன்றத்தின் உள்ளேயும், வெளியேயும் முன் வைக்கப்பட்டது.

மனித வள மேம்பாட்டுத்துறை அமைச்சர் பாரளுமன்றத்திற்கு உள்ளேயும், வெளியேயும் உங்களின் கருத்துக்களை உள்வாங்காமல் உங்கள் ஒப்புதல் இல்லாமல் இந்த அரசு எந்த கொள்கையையும் நடை முறைப்படுத்தாது என்று உறுதியளித்தார்.

பாரளுமன்றத்தில் அளிக்கப்பட்ட உறுதியை மீறக்கூடிய வகையில் இந்திய அரசு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. மத்திய இடைநிலை கல்வி வாரியம் (CBSE) ஆட்சிமன்ற குழு (Governing Counsel) முடிவுகளின் படி 6 முதல் 8 வரை உள்ள மாணவர்களுக்கு தேர்வின் அடிப்படையிலான தேர்ச்சி, 6 முதல் 9வகுப்பு வரை உள்ள மாணவர்களுக்கு10ம் வகுப்பு பொதுத்தேர்வின் நடைமுறைபடியே ஆண்டுத் தேர்வை நடத்துவது மற்றும் ஆசிரியர்களுக்கு தலைமையாசிரியருக்கான பணி நியமன தகுதி தேர்வை நடத்தி தலைமை ஆசிரியர் பணியிடங்களை நிரப்புவது போன்ற நடைமுறைகளை வகுத்து வருகிறது. இவையனைத்தும் தமிழ்நாடு உள்ளிட்ட பல மாநிலங்கள் நிராகரித்த கொள்கை முன்மொழிவுகளாகும்.

உயர்கல்வியில் மாணவர்கள் சேர்ப்பதற்கு

தேசிய அளவில் 12ம் வகுப்பு முடித்த மாணவர்கள் தேர்வு எழுத வேண்டும். அவ்வாறான தகுதி தேர்வுகளை நடத்துவ தற்கு தனியாக ஒரு அமைப்பை உருவாக்குவது என்றும் அதற்கு நிதி ஒதுக்கப்படுவதாகவும் 2017-18 நிதியறிக்கையில் நிதியமைச்சர் தெரிவித்திருந்தார்.




இதுவும் வரைவு அறிக்கை யின் ஒரு பகுதியே. இந்திய அரசு தான் கொடுத்த வாக்குறுதியை தானே மீறுவது எந்த வகை யிலும் மக்களாட்சி மாண்புக்கு ஏற்புடைய தல்ல.

தமிழ்நாட்டில் உள்ள மாணவர்கள் பல்வேறு சமூக பொருளாதார சிக்கல்களுக் கிடையில் மேல்நிலைப் பள்ளி கல்வியை முடிக்கிறார்கள். 102 தேர்வு எழுதுவதே ஒரு மிகப்பெரிய போராட்டமாக உள்ள சூழலில் தேர்வின் மீது இன்னொரு தேர்வு என்பது மாணவர்களை பலவீனம் படுத்துமே தவிர தகுதிப்படுத்தாது' என்று குறிப்பிட்டார்.

மேலும் அவர் கற்றல் வாய்ப்பு சமமாக இல்லாத போது தேர்வு மட்டும் சமமாக நடத்த இயலாது. தமிழ்நாட்டில் வெளிப்படை தன்மையுடன் 102 மதிப்பெண் அடிப்படை யிலான மருத்துவ மாணவர் சேர்க்கை நடைப் பெற்று வருகிறது. தகுதிவாய்ந்த மாணவர்கள் மருத்துவ கல்வியில் விருப்பத்தோடு பயிலு வதற்கு தமிழ்நாட்டில் மாநில அரசே 24 மருத்துவ கல்லூரிகளை உருவாக்கி நடத்தி வருகிறது.

இந்தியாவிலேயே மாநில அரசே மருத்துவ கல்லூரிகளை நடத்தும் எண்ணிக்கை தமிழ் நாட்டில் தான் மிக அதிகம். இத்தகைய சூழலில் இந்திய அரசு நீட் தேர்வை தமிழ்நாடு மாணர்வகள் மீது திணிக்கக்கூடாது. தமிழ்நாட் டில் 102 மதிப்பெண் அடிப்படையிலான மருத் துவ மாணவர் சேர்க்கை தொடர வழிவகுக்கக் கூடிய சட்டத்தை தமிழ்நாடு சட்டமன்றத்தில் ஏகமனதாக நிறைவேற்றி குடியரசு தலைவரின் ஒப்புதலுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

உயர்கல்வியில் ஒரு மாணவர் சேர்ந்த பொழுது எத்தகைய பாடத்திட்டத்தையும், மதிப்பீட்டு முறையையும் கடைப்பிடிக்கலாம் என்பதை தான் மத்தியரசு தீர்மானிக்க முடியுமே தவிர உயர்கல்விக்கு தகுதியாக இருக்கக்கூடிய பள்ளிக் கல்வின் இறுதி; தேர்வின் மதிப்பீட்டு முறையை மத்திய அரசால் நிராகரிக்க முடியாது. எனவே தமிழ்நாடு சட்டம் மத்திய அரசின் சட்ட எல்லைக்குள் அத்துமீறவில்லை. மேலும் குடியரசு தலைவர் பிறப்பித்த அவசர சட்டத்திற்கு பாராளு மன்றம் ஏற்பளித்தது. அந்த சட்டத்தில் நீட் தேர்வு விரும்பாத மாநிலங்களுக்கு 2016-17 கல்வியாண்டிற்கு மட்டும் விலக்கு அளிக்கப்பட் டது. எந்த காரணத்திற்காக 2016-17ல் விலக்கு அளிக்கப்பட்டதோ அதே காரணங்கள் இன்னும் நீடிப்பதினால் தமிழ்நாட்டிற்கு நிரந்தர விலக்கு வழங்க வேண்டும்.

மேலும் உச்சநீதிமன்றம் 2013 அளித்த தீர்ப்பை திரும்ப பெற்ற போது மறு விசார ணைக்கு உத்தரவிட்டது. திரும்ப பெற்றதற் கான காரணத்தை தெரிவிக்காத நீதிமன்றம் மறுவிசாரணை நடைபெற உள்ளதினால் அந்த விசாரணையை பாதிக்கக்கூடிய வகையில் நாங்கள் எந்த காரணத்தையும் இப்போது கூறவில்லை என்று கூறியுள்ளது.



எனவே இவ்விசாரணை முடியும் வரை தமிழ்நாடு உள்ளிட்ட நீட் தேர்வை விரும்பாத மாநிலங்கள் மீது மத்திய அரசு நீட் தேர்வை திணிக்கமுடியாது. இதை மத்திய அரசிற்கு உணர்த்திடும் வகையில் மிகப்பெரிய மக்கள் போராட்டத்தை மாணவர்களும், பெற்றோர் களும் நிகழ்த்த வேண்டிய கட்டாயத்தை அரசு உருவாக்குகிறது' என்று கூறி பெற்றோர்களுக் கும், மாணவர்களுக்கும் அழைப்பு விடுத்தார்.

இக்கருத்தரங்கிற்கு மூட்டா அமைப்பின் முன்னாள் பொதுச் செயலாளர் பேரா.பெ. விஜயகுமார் அவர்கள் தலைமை தாங்கினார். சோக்கோ அறக்கட்டளையின் மேலாண்மை அறங்காவலர் திருமிகு.அ.மகபூப் பாட்சா அவர்கள் வரவேற்புரை நிகழ்த்தினார். சோக்கோ அறக்கட்டளையின் துணை இயக்கு நர் திருமிகு.எஸ்.செல்வ கோமதி நன்றியுரை யாற்றினார். இக்கருத்தரங்கில் சிறப்பாக கலந்துரையாடிய மாணவ மாணவிகளுக்கு பரிசளித்து கௌரவிக்கப்பட்டது.

இக்கருத்தரங்கில் வக்பு வாரியக் கல்லூரி, பாத்திமா கல்லூரி, மதுரை சமூக அறிவியல் கல்லூரி, மதுரை சட்டக் கல்லூரி மற்றும் அமெரிக்கன் கல்லூரி மாணவ, மாணவிகள் மற்றும் பேராசிரியர்கள், சமூகப் போராளிகள், மருத்துவர்கள் கலந்து கொண்டனர்.

# திப்பு சுல்தான்

## பொய்யும், மெய்யும்

2012- ஆம் ஆண்டு பாரதீய ஜனதா கட்சியில் இருந்து வெளியேறிய B.S.எட்டியூரப்பா கர்நாடகா ஜனதா பக்ஷா என்ற புதிய கட்சி ஒன்றை தொடங்கினார். முஸ்லிம் வாக்காளர் களை தன் பக்கம் இழுப்பதற்கு திப்புவின் தன்மைகளை ஆஹா ஓஹோ என்று புகழ்ந்து தள்ளினார்.

இரண்டு வருடத்திற்கு முன் பாரதீய ஜனதா கட்சியில் மீண்டும் தன்னை இணைத்து கொண்டதன்பின் நிலைமை தலைகீழ். 2016 நவம்பர் 10 ஆம் தேதி திப்பு ஜெயந்தியை கொண்டாடக் கூடாது என்பதில் மும்மரமாக இறங்கி பணியாற்றியவர் B.S.எட்டியூரப்பா. இப்படிப்பட்ட சந்தர்ப்பவாதிகளின் பிடியில் திப்பு சிக்கிக் கொள்வது முதல் முறையல்ல.



வரலாற்றில் சில தலைவர்கள் மட்டுமே தான் சார்ந்த சமுதாயத்தை தாண்டியும் அனைத்து தரப்பு மக்களாலும் போற்றப்படு கிறார்கள். அதில் மைசூர் வேங்கை திப்பு சுல்தானும் ஒருவர். (1750-1799)

திப்பு யுத்த களத்தில் வீர மரணமடைந்த பின்னர் அதாவது 1800 ஆண்டுகளில் திப்பு மறைந்த துயரத்தை வெளிபடுத்தும் இரங்கற் பாக்கள் பல இயற்றப்பட்டன. இவை 19ஆம் நூற்றாண்டில் கர்நாடகாவின் பல பகுதிகளில் நாட்டுப்புற பாடல்களாகவும் கவிதைகளா கவும் வலம் வந்து கொண்டிருந்தன. பிரிட்டிஷ் ஷாரால் கொல்லப்பட்ட திப்பு மற்றும் அவரை போன்ற தலைவர்களுக்கு மட்டுமே இப்பாடல்கள் வரலாற்றில் காணக்கிடக் கின்றன என்பதும் மற்ற தலைவர்களுக்கு இப்பாடல்கள் இயற்றப்படவில்லை என்பதும் வரலாற்று உண்மை.

19, 20 ஆம் நூற்றாண்டுகளில் திப்பு சுல்தான் சரித்திரத்தை எடுத்து சொல்லும் பல மேடை நாடகங்கள் இயற்றப்பட்டுள்ளன. வரலாற்று பாடநூல்களும், இலக்கியங்களும், அமர் சித்ரா காதா போன்ற காமிக் புத்தகமும் திப்பு சுல்தானின் வீரத்தையும் அவர் பிரிட்டிஷ் ஷாருக்கு எதிராக மேற்கொண்ட போராட் டத்தையும் தெளிவாக விளக்குகின்றன. இதில் வியப்பு என்னவெனில் 1970 ஆம் ஆண்டு ஸிஷிஷி வெளியிட்ட பாரத பாரதி தொடரில் திப்பு சுல்தானை ஒரு தேசப்பற்றுள்ளவராகவும், வீரத் திருமகனாகவும் புகழ்ந்துள்ளன. அவரை

பற்றி எந்தவித எதிர்மறை கருத்துக்களும் அத்தொடரில் இடம் பெறவில்லை.

18 ஆம் நூற்றாண்டின் கடைசி 20 ஆண்டு களில் ஆங்கிலேய அதிகாரிகள், எழுத்தாளர் கள், ஓவியர்கள் ஆகியோர் திப்புவை பற்றி அச்சத்தையும் வெறுப்பையும் ஏற்படுத்தும் வகையிலே கருத்துக்களை பரப்பினர். பிரிட்டிஷ் படைகளுக்கு எதிராக திப்பு கிளர்ந்தெழுந்த பொழுது, அவரை முஸ்லிம் மதவெறியர் என்றும் ஹிந்து கோவில்களை இடித்தவர் என்றும் கிறிஸ்தவர்களை மதமாற்றியவர் என்றுமே இக்கருத்துக்களின் வழி பதிவு செய்தனர். மைசூரை வெற்றி கொள்ளவும் தங்களுடைய எண்ணங்களை நிறைவேற்றவும் இவை பிரிட்டிஷ்ஷாருக்கு உதவியிருக்க கூடும் என்கிறார் ஆராய்ச்சியாளர் மைக்கேல் சொரகோ (Michael Soracoe).

கிழக்கு இந்தியா கம்பெனி ஒரு கறைபடிந்த நிறுவனம் அதனால் இந்தியாவில் ஆட்சி செய்ய முடியாது என்ற நிலையை ஓரங்கட்டி மறைத்து அதிலிருந்து வெளியே வந்திடவும் வெள்ளை ஆதிக்க கூறுகளின் இம்முயற்சி உதவின என்கிறார் மைக்கேல் சொரகோ. 19 ஆம் நூற்றாண்டு முழுவதும் ஆங்கிலேயர்கள் திப்புவை இரக்கமற்றவர், மதவெறியர் என்றே தொடர்ந்து எழுதி தள்ளியவையே இன்று இந்துத்துவ வலது சாரிகளால் மேற்கோள் காட்டப்படுகிறது.

திப்புவின் ஆட்சியில் மைசூரின் நிர்வாகத் துறையில் பெர்சியன், கன்னட மற்றும் மராத்தி மொழிகளே பயன்படுத்தப்பட்டன. உயர் ஜாதி பிராமனர்களே முக்கிய அமைச்சர் பதவி களை வகித்தனர். இந்து கோவில்களுக்கும், துறவிகளுக்கும் அவர் வழங்கிய தாராளமான அறக்கொடைகளும் மானியங்களும் வரலாற்று பதிவுகளில் நன்றாகவே காணக்கிடக்கின்றன. பத்து நாட்கள் தொடர்ந்து நடைபெறும் பிரமாண்ட தசரா கொண்டாட்டங்களையும் விழா நடைமுறைகளையும் நடத்தும் உரிமையை வோதையார் அரச குடும்பங்களே பெற்றிருந்தனர்.

கட்டாய மதமாற்றம் நடைபெற்றது என்ற குறிப்பு மைசூரின் எந்த பகுதியிலும் பதிவு செய்யப்படவில்லை.

பிரிட்டிஷ்ஷாரின் ஆதிக்கம் பிற்காலத்தில் மாநிலங்களை சீரழித்துவிடும் என்று நிஜாம் களுக்கும் மராத்தியர்களுக்கும் அவர் கடிதம் எழுதியதை பார்க்கும் பொழுது சுதந்திர போராட்டத்தை அப்பொழுது முன்னெடுத்த வீரராகவே அவரை அடையாளம் காண முடிகிறது.

இராணுவ தளவாடங்களை அவர் மேம் படுத்தினார். வருமானங்களை முறையாக வசூல் செய்ய அவர் கொண்டு வந்த சீர்திருத்தம் இன்றளவும் பாராட்டப்படுகின்றது. திப்புவின் தனிபட்ட நூலகத்தில் மட்டும் 2000 புத்தகங்கள் குவிந்து கிடந்தன. இதில் வானியல், சட்டம், கணிதம் தொடர்பான புத்தகங்கள் மற்ற துறைகளில் திப்புவிற்கு இருந்த அறிவுத் தாகத்தை வெளிபடுத்துகின்றது. திப்பு சுல்தான் பல துறைகளில் கொண்டிருந்த ஆளுமைகளை இருட்டடிப்பு செய்து மத விவகாரங்களை மட்டும் பெரிது படுத்துவதையே வலது சாரிகள் தங்கள் திட்டமாக கொண்டு செயல் படுகின்றனர்.

### திப்பு - புனைவுகளும் பதில்களும்

1785 ஆம் ஆண்டு கூர்க் (கொடகு) பகுதியை தாக்கினார் திப்பு. தேவதிபரம்பு என்ற இடத்தில் வைத்து நிராயுதபாணியாக நின்றிருந்த 60,000 கொடவா இனமக்களை படுகொலை செய்தது திப்புவின் படை என்று வாதிடுகிறார் கொடவா நேஷனல் கவுன்சில் தலைவர் N.U. நச்சப்பா.

திப்புவும் கொடவா இன மக்களும் என்ற கன்னட புத்தகத்தை எழுதியவர் அத்தந்த கரியப்பா. இவர் திப்பு ஜெயந்திக்கு எதிரான போராட்ட குழுவை மாநில அளவில் வழி நடத்தி செல்பவர். ஹைதர் அலியும், திப்புவும் 32 முறை கொடகு பகுதியை தாக்கியதாகவும், அதில் 30 முறை அவர்கள் தோல்வியை தழுவி யதாகவும் கூறுகிறார் கரியப்பா. சமாதான பேச்சு வார்த்தை என்ற கூறி கொடவ இராணு வத்தை அழைத்து வரசெய்து ஏமாற்றினார்

திப்பு. பின்னர் திப்புவின் படையில் இருந்த முஸ்லிம்களும் பிரெஞ்சு வீரர்களும் அவர்களை சூழ்ந்து கொண்டனர். அதன் பின்னர் அங்கே எந்த அளவுக்கு படுகொலைகள் நடந்தது என்று சொன்னால் காவிரி தண்ணீர் சிவப்பு நிறமாக மாறி ஓடியது என்கிறார் கரியப்பா.

80,000 - 111,000 பேர்களை திப்பு சிறை பிடித்து இருக்கலாம். அவர்கள் ஸ்ரீரங்கபட்டினதிற்கு அழைத்து சென்று கட்டாய மத மாற்றம் செய்யப்பட்டனர் என்கிறார் கரியப்பா.

C.P.பெல்லியப்பா என்பவர் தன்னுடைய Nuggets From Coorg History என்ற நூலில் 80,000 பேர் சிறைபிடிக்கப்பட்டதாக குறிப்பிடுகிறார்.

**A.K. சுப்பையாவின் பதில்:**

விராஜ்பெட்-ஐ சார்ந்த சுப்பையா ஒரு வழக்கறிஞர். மேலே வரலாற்று நிகழ்வுகள் என்று கூறப்பட்டவற்றை இவர் மறுக்கிறார். எந்தவிதமான படுகொலைகளும் தேவதிபரம்பு என்ற இடத்தில் நடைபெறவில்லை. கொடவாக்களில் சிலரையே திப்பு சிறைபிடித்தார். வகுப்புவாத சிந்தனையில் மூழ்கி திளைத்த சில கொடவாக்கள் இந்த சம்பவத்தை பற்றி இல்லாததும் பொல்லாததுமாக கூறுகின்றனர். இவர்களை கொண்டே திப்புவுக்கு எதிரான பிரச்சாரம் முன்னெடுத்து செல்லப்படுவதாகவும் இதில் பலர் ஙியிறி ஆதரவாளர்கள் என்பதையும் நாம் புரிந்து கொள்ளவேண்டும் என்கிறார் சுப்பையா.

1750 (அல்லது 1751) ஆம் ஆண்டு ஹைதர் அலிக்கு மகனாக பிறந்தார் திப்பு. 1761 -இல் ஹைதர் அலி மைசூரின் மன்னராக முடிசூட்டி கொண்டார். ஹைதர் அலி ஆட்சிக்கு வருவதற்கு முன் மைசூரை ஆட்சி செய்து கொண்டிருந்த வோதேயார் மன்னர்கள் கொடகு பகுதியை தங்கள் கட்டுபாட்டிற்குள் கொண்டு வர முயற்சி செய்தனர். 1765 இல் முதல் முறையும் 1773 இல் மறுபடியும் கொடகு பகுதிக்கு படைகளை கொண்டு சென்றார் ஹைதர் அலி.



அப்பொழுது ஹலேரி ராஜாக்கள் என்றழைக்கப்படும் லிங்காயத் அரசர்கள் கொடகு பகுதியை ஆண்டு கொண்டிருந்தனர். அவர்களுக்கு இடையே நிலவி வந்த பரம்பரை உட்பூசல்களை ஹைதர் அலி தனக்கு சாதகமாக பயன்படுத்திக் கொண்டார். 1782 இல் ஹைதர் அலி மரணமடைந்தார்.

திப்புவின் வாழ்க்கை வரலாற்றை எழுதிய மொஹிப்புல் ஹசன் இப்படி பதிவு செய்கிறார். “வடக்கே கிருஷ்ணா நதி வரையும், தெற்கே திருவிதாங்கூர் சமஸ்தானம் மற்றும் திருநெல்வேலி மாவட்டம் வரையும், கிழக்கே கிழக்கு தொடர்ச்சி மலை வரையும், மேற்கே அரேபியா பெருங்கடல் வரைக்கும் உட்பட்ட மிகப் பெரிய நிலப்பரப்பை ஆளும் பொறுப்பை திப்பு ஏற்றுக்கொண்டார். கொடகு பகுதியும் அவருடைய ஆட்சிக்கு உட்பட்ட பகுதிகளிலேயே வந்தது. ஸ்ரீரங்கபட்டினத்தையும் கடற்பகுதியையும் நேரடியாக இணைத்திடும் பகுதியாக கொடகு பகுதி அமைந்தது அதன் அமைவிட சிறப்பை உணர்த்துகிறது.

**திப்புவும் கொடகுவும்:**

ஹைதர் அலிக்கும், திப்புவிற்கும் எதிராக

அடிக்கடி கொடகு பகுதியினர் கிளர்ச்சி செய்து கொண்டே இருந்தனர். அவருடைய படைத் தளபதிகளால் சூழ்நிலையை சமாளிக்க முடியாமல் போகவே திப்புவே 1785 இல் கொடகு பகுதிக்கு வருகிறார்.

திப்பு சில காலங்கள் அங்கே தங்கியதாக அவருடைய ஆட்சியை பற்றிய தகவல்களை தொகுத்த வரலாற்று பதிவாளர் மிர் ஹுசைன் அலிகான் கிர்மானி குறிப்பிடுகிறார்.

"திப்பு அங்கிருந்த போதுதான் மடிக்கேரி கோட்டையை தன் முழு கட்டுபாட்டிற்குள் கொண்டு வந்தார். 7 மாதங்களில் 80,000 பேர்களை சிறைபிடித்தார். சுல்தான் ஸ்ரீரங்க பட்டினதிற்கு வந்த பின்பு, கைதிகள் அனைவரும் முஸ்லிம்களாக மாற்றப்பட்டனர். எட்டு பிரிவுகளாக அவர்கள் பிரிக்கப்பட்டனர். அவர்களுக்கு நெறிமுறைகளை பயிற்றுவிப்பதற்கு துறைதேர்ந்த அதிகாரிகளும் நியமிக்கப்பட்டு, சில நாட்களிலேயே இராணுவ பயிற்சிகளிலும் அவர்கள் கைத்தேர்ந்தவர்களாக மாறினார்."

நச்சப்பாவும், கரியப்பாவும் கிர்மானியின் எழுத்தையே முதல் ஆதாரமாக எடுத்து தங்களுடைய தேவதிபரம்பு குறித்த விவாதங்களை முன்வைக்கின்றனர். ஆனால் கிர்மானி எங்கேயும் படுகொலைகள் நடந்ததாக குறிப்பிடவில்லை. கூர்மதியுடைய வரலாற்றாசிரியர்கள் அனைவரும் கிர்மானியின் எழுத்தை மிகுந்த கவனத்தோடும் எச்சரிக்கையோடும் தான் பயன்படுத்துகின்றனர்.

திப்புவின் வாழ்க்கை வரலாற்றை எழுதிய மொஹிப்புல் ஹசன் இப்படி குறிப்பிடுகிறார். "திப்புவையும் அவருடைய தந்தையையும் கிர்மானிக்கு நன்றாகவே தெரியும். ஸ்ரீரங்கபட்டினத்தை பிரிட்டிஷார் வெற்றி கொண்டதன் பின்னர், அவர்களிடமிருந்து ஓய்வு ஊதியம் பெறும் நபராக ஆனார் கிர்மானி. கல்கத்தாவில் பிரிட்டிஷாரின் ஆதரவில் இருந்து



கொண்டு தான் இவற்றை எழுதினார். அவர்களுக்கு ஆதரவாகவே எழுத தலைபட்டு விட்டார் கிர்மானி. அவர் பயன்படுத்திய நாட்குறிப்புகளில் பிழைகளும் உள்ளன".

**பட்டோள் பளமே:**

நச்சப்பாவும் கரியப்பாவும் திப்புவை இடித்துரைக்க அடுத்ததாக மேற்கோள் காட்டும் புத்தகம் பட்டோள் பளமே. கொட வாக்களின் நாட்டுப்புற பாடல்களையும் கலாச்சாரங்களையும் சுருக்கமாக தொகுத் தளிக்கும்இப்புத்தகம்1924-இல்கர்நாடகாவில் நதிகேரியந்தாசின்னப்பாவால்எழுதப்பட்டது. 111,000 சிறைபிடிக்கப்பட்டதாக இப்புத்தகம் குறிப்பிடுகிறது.

இப்புத்தகத்தை அவருடைய பேத்தி 2003-இல் ஆங்கிலத்தில் மொழியாக்கம் செய்தார். பட்டோள் பளமே-இல் குறிப்பிடப்பட்ட எண்ணிக்கை மிகவும் அதிகரித்து சொல்லப் பட்டுள்ளது என்று பிரண்ட் லைன் (Front Line) என்ற பத்திரிக்கை உடனான உரையாடலின் போது அவருடைய பேத்தி போவெரியந்தா நஞ்சம்மா தெரிவித்தார். என்னுடைய பாட்டனார் ஒரு இலக்கத்தை அதிகப்படியாக சேர்த்துக் கொண்டார்.

ஏனெனில் கைது செய்யப்பட்டவர்களின் எண்ணிக்கை 11,000-ஐ தாண்டாது (111,000 அல்ல 11,000- ஒரு இலக்கத்தை சேர்த்து விட்டாராம்). அவரும் அவருடைய கணவர் B.M. சின்னப்பாவும் கொடவா பகுதியில் பத்தாண்டுகளுக்கும் மேலாக அம்மக்களை பற்றிய வரலாற்றை பதிவு செய்ய உழைத் துள்ளனர்.

பல புத்தகங்களை எழுதியுள்ளோம், களப்பணிகளை மேற்கொண்டுள்ளோம். இதிலிருந்து நாங்கள் தெரிந்து கொண்டது என்னவென்றால் சில ஆயிரம் கொடவாக்களே திப்புவின் படையால் கைது செய்யப்பட்டுள்ளனர். கைது செய்யப் பட்ட அனைவரும் கொடவாக்கள் அல்ல. அப்பகுதியில் வசித்த மற்ற இனத்தை சேர்ந்த மக்களும் அதில் உண்டு. பின் எப்படி, எங்கிருந்து 111,000 எண்ணிக்கை பயன்படுத் தப்பட்டது என்ற கேள்விக்கு "எங்கள் பாட்டனார் பிரிட்டிஷாரால் எழுதப்பட்ட குறிப்புகளில் இருந்தே அதை பயன்படுத்தி யுள்ளார்" என்கிறார் நஞ்சம்மா.

மேற்கத்திய எழுத்தாளர்களால் பதிவு செய்யப்பட்ட மக்கள் தொகை சான்றுகள் அதிகரித்து சொல்லப்படும் கைதிகளின் எண் ணிக்கை குறித்து கேள்வியை எழுப்புகின்றன. 1855-இல் ஜெர்மானிய சமய பரப்புரையாளர் ஹெர்மான் பிரெடெரிக் மோக்லிங் மேற் கொண்ட மக்கள் தொகை கணக்கின்படி கொடகு மக்கள் தொகை 25,000 அல்லது 26,000. அதிலும் போர்களுக்கென்று 4,000 (அ) 5,000 படைவீரர்களே அன்று ஒன்று கூடுவார்கள் என்று அவர் எழுதியுள்ளார்.

1870 ஆம் ஆண்டு வெளிவந்த கூர்க் மாவட்ட ஆவணத்தில் (Distric Gazetteer), கொடகு மக்கள் தொகை பற்றிய கணக்கை Rev.G.ரிச்டர் பதிவு செய்துள்ளார். அப்பகுதி யில் வாழ்ந்த மக்கள் தொகை 112,952 என்றும் இதில் கூர்க் (கொடவா) மக்கள் தொகை 24,585, ஹிந்துக்கள் 80,934, முஸ்லிம்கள் 5774 என்றும் பதிவு செய்துள்ளார்.

1871 ஆம் ஆண்டு வெளிவந்த முதல் மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி கூர்கில் 154,476 ஹிந்துக்களும் 11,304 முஸ்லிம்களும் வாழ்ந்ததாக குறிப்பிடுகிறது. சமகாலத்தில் நம்மோடு வாழும் ராமச்சந்திரா ராவ் புங்கநூரி (மைசூர் ஹிந்து) என்பவரின் கணக்கின்படி 500 ஆண்களும், பெண்களும் குழந்தைகளும் கொடகு பகுதியில்கைது செய்யப்பட்டு மைசூர் கொண்டு வரப்பட்டனர். மேலே கூறப்பட்ட விவரங்களின் அடிப்படையில் பார்த்தால் நச்சப்பாவும் கரியப்பாவும் மிகைபடுத்தியே எண்ணிக்கைகளை எழுதியுள்ளனர். ரிச்டர் குறிப்பிட்ட எண்ணிக்கையில் சில தவறுகள் இருந்தாலும், அதிலிருந்து நாம் கொடகு மக்கள் தொகையில் சிறிய பகுதியினரே கொடவாக்கள் என்பதை நம்மால் தெளிவாக புரிந்து கொள்ள இயலும்.

## கொடகு பகுதியில் முஸ்லிம்கள்:

*1792-மூன்றாவது ஆங்கிலோ மைசூர் போருக்கு பின்னர், கொடகு பகுதியின் உரிமையை திப்பு இழந்ததன்பின், இஸ்லாத் திற்கு மாறிய 90 குடும்பங்கள் மைசூரிலிருந்து மீண்டும் தங்கள் சொந்த இடங்களுக்கு திரும் பினர் என்று நாட்டுப்புறவியல் குறிப்புகள் கூறுகின்றன. லிங்காயத் ராஜாவின் கட்டுப் பாட்டின் கீழ் கொடகு பகுதியை சுற்றியுள்ள 2 இடங்களில் இவர்களின் குடும்பங்கள் வசித்து வந்தன. இக்குடும்பங்கள் மைசூரிலிருந்து திரும்பி வந்தவர்களை ஏற்றுக் கொள்ள வில்லை. சில கொடவாக்கள் இஸ்லாத்திற்கு மாறவில்லை என்பது நமக்கு இதிலிருந்து புரிகிறது. திப்பு வருவதற்கு முன் அப்பகுதியில் முஸ்லிம்கள் வாழவில்லை என்பதும் பொய்.*

*மடிக்கேரியிலிருந்து 30 கி.மீ. தொலைவில் அமைந்துள்ள எம்மமேடு என்ற பகுதியில் சூபி ஷஹீத் அவர்களின் கல்லறை அமைந்துள்ளது. இவரின் காலத்தில் இருந்து தான் முஸ்லிம்கள் அப்பகுதியில் வாழ்ந்துள்ளனர். இக்தர்ஹாவின் நிர்வாகத்தை கவனித்து வரும் அறக்கட்டளை வெளியிட்ட சிறு புத்தகத்தின்படி, 350 வருடங்களுக்கு முன் சூபி இப்பகுதிக்கு வந்த தாகவும் மேலும் அப்புத்தகத்தில் அவருடைய அற்புத சக்திகளையும், கொடவாக்களின் ஒரு குடும்பத்தோடு (மனவித்தரா குடும்பம்) அவருக்கு இருந்த நெருங்கிய தொடர்பு களையும் காலக்கிரமமாக பதிவு செய்யப்பட் டுள்ளது.*

## திப்புவின் மறைவு:

*1799-திப்புவின் வீழ்ச்சிக்கு பின்னரே கிழக்கு இந்தியா கம்பெனி தன்னுடைய ஆதிக் கத்தை மற்ற பகுதிகளிலும் விரிவுபடுத்தியது. திப்புவிற்கு எதிராக மேற்கொள்ளப்படும் பிரசாரத்திற்கு அடிப்படையான சான்றுகள் இல்லை. ஆனால் பிரிட்டிஷார் கக்கிய வெறுப்பையே கொடவாக்கள் உள்வாங்கி கொண்டனர். இந்தியா வெற்றிக் கொள்ளப் பட்ட வரலாற்றை எழுதும்போது பிரிட்டிஷார் திப்புவை நிந்தித்தும் திட்டியுமே எழுதினர். கலோனல் வில்லியம் கிர்க்பேட்ரிக் மற்றும் மார்க் வில்க்ஸ் போன்ற பிரிட்டிஷ் எழுத்தா ளர்கள் திப்புவின் இராணுவ நடவடிக்கையை எரிச்சலுடன் கடிந்துள்ளனர்.* Rev. *ரிச்டர் ஹைதர் அலியை "ஓநாய்" ஹைதர் என்றே 1870 களில் எழுதினார்.*

*மைக்கேல் சொரகே மேற்கொண்ட ஆராய்ச்சி படிப்பு இவ்விவாதத்திற்கு மிக்க துணை புரியும். திப்புவின் மீது களங்கம் கற்பித் தது பிரிட்டிஷாருக்கு எப்படி உதவியது என்றால் இப்படிப்பட்ட ஒரு நாகரிகமற்ற அரசனின் பிடியில் இருந்து தெற்கு இந்தியாவை மீட்கும் வலிமையும், போர் புரியும் துணிவும் கிழக்கு இந்தியா கம்பெனிக்கே உண்டு என்ற ஒரு தளத்தை ஏற்படுத்தியது என்று எழுதியுள்ளார் மைக்கேல் சொரகே.*

*1930 களில் காந்திஜி நடத்தி வந்த* Young India *பத்திரிக்கையில் காந்தி இப்படி எழுதினார். "அந்நிய வரலாற்றாசிரியர்கள் திப்புவை வெறியர் என்றும் ஹிந்துக்களை அடக்குமுறைகளுக்கு உட்படுத்தியவர் என்றும் அவர்களை கட்டாய மதமாற்றம் செய்தவர் என்றும் குறிப்பிட்டுள்ளனர்.*

*ஆனால் திப்பு இக்குணநலன்களை கொண்டவரல்ல. அதற்கு மாறாக, ஹிந்துக் களுடன் அவருக்கு இருந்த உறவு கள்ளம் கபடமற்றது, அன்பு நிறைந்தது. ஹிந்துக்களும் முஸ்லிம்களும் இப்பொழுது சுதந்திரப் போராட்டத்தின்போது தங்களை எதிரிகள் சுற்றியிருப்பதை மறந்துவிட்டு, ஒருவரின் கழுத்தை மற்றவர் நெரித்துவிட தயாராக இருக்கும் இந்நிலையில் நாம் அன்று திப்புவின் காலத்தில் அவர்கள் வாழ்ந்ததை எண்ணிப் பார்ப்பது மனநிறைவை அளிக்கக் கூடியது".*

*வெள்ளையர்களின் பிரித்தாளும் ஆளும் சூழ்ச்சியை இன்றுவரை உயிரூட்டம் தந்து கடைபிடிப்பவர்கள் பாசிஸ்டுகள். இச்சூழ்ச்சி யின் வழியே மக்களிடையே பிரிவினை தீயை கொளுத்திவிடுகின்றனர். அதில் அவர்கள் ஆனந்தமும் அடைகின்றனர்.*

*ஆதாரம்* The Hindu, Nov.9, 2016, Front Line June-6, 2017

**- அபூ ஹாசின்**



# பாபரி மஸ்ஜித்

**பாபரி மஸ்ஜித் வழக்கில் உண்மையான தீர்ப்பு ஒன்றை வழங்கினால், அது நிச்சயமாக முஸ்லிம்களுக்குச் சாதகமாகத்தான் அமையும். ஏனெனில் எல்லா நியாயங்களும், ஆவணங்களும் சாட்சியங்களும் முஸ்லிம்கள் பக்கமே இருக்கின்றது.**

ஆனால் முஸ்லிம்களுக்குச் சாதகமான தீர்ப்பொன்றை வழங்கி – பாபரி மஸ்ஜித் இருந்த இடத்தை முஸ்லிம்களிடம் தந்து, அவர்கள் அங்கே மீண்டும் பள்ளிவாசலை எழுப்புவதை இன்றளவும் உச்ச நீதிமன்றத்தில் அமர்ந்த நீதிபதிகளால் சகித்திட இயலவில்லை.

இதனால், முஸ்லிம்களுக்குச் சாதகமாகத் தீர்ப்பு வழங்கிட வேண்டியது வந்தபோதெல்லாம் கட்டப்பஞ்சாயத்திற்கான வாசல்களைத் திறந்து விடுகின்றார்கள்.

இதைத்தான் பிரபல்யமான எழுத்தாளரும் சமூக நீதி போராளியுமான வி.டி. இராஜேசேகர் காலங் காலமாக Basic hindu mind set அடிப்படையில் அனைவரும் ஓர் இந்து மன நிலையோடு தான் செயல்படுகின்றார்கள் என குறிப்பிடுகின்றார்.

இதனை இன்றும் குறிப்பாகச் சொன்னால், ஒரு இராமர் கோயில் கட்டும் விதத்தில் ஒரு தீர்ப்பு அல்லது ஒரு கட்டப்பஞ்சாயத்து என்பதே எல்லா நீதிபதிகளின் மனதிலும் இருக்கின்றது. அது நிற்கும் வரை இந்த வழக்கும் இழுத்தடிக்கப்படும், இதற்கு இப்போதைய தலைமை நீதிபதி ஜெ.எஸ்.ஹேகருள் விதிவிலக்கல்ல.

அதனால்தான் அவர் ஒரு கட்டப்பஞ்சாயத்தை வைத்துக்கொள்ளுங்கள் – நீங்கள் விரும்பினால், நானும் அந்தக் கட்டப்பஞ்சாயத்தில் கலந்துகொள்கிறேன் எனக் கூறியுள்ளார்.

நேர்மையும், நீதியும், நெஞ்சுரமும் உடையவராக இருந்திருந்தால் அடிப்படை வழக்கில், பாபரி மஸ்ஜித் இருந்த இடம் யாருக்குச் சொந்தம் என்ற வழக்கில் நீதியை நிலைநாட்டி இருக்க வேண்டும். ஆனால்...?

முஸ்லிம்கள் தங்கள் பக்கம் நியாயமிருக்கின்றது என்பதால் அழுத்தமாக

# உச்சநீதிமன்றத்தின் கட்டப்பஞ்சாயத்து

நீதிமன்றத்தில் நீதியைப் பெற்றிடலாம், என நம்புகிறார்கள். ஆனால் பாசிச இந்தியாவில் முஸ்லிம்கள் நீதியின் பெயரால் கொடுமைப் படுத்தப்படுவார்கள் என்பதே உண்மை. இதனை 24 ஆண்டுகளுக்கு முன்னர் ராஜீவ் தாவன் என்ற மூத்த வழக்கறிஞரே இப்படிக்கு கூறினார்.

In India, womens, deli.. other oppressed people will not get justice muslims will not only not get justice but will butalized in the name of justice.

அதாவது, இந்தியாவில் பெண்களுக்கு நீதி கிடைக்காது, அதேபோல் தலீத்களுக்கும், தாழ்த்தப்பட்ட மக்களுக்கும் நீதி கிடைக்காது. முஸ்லிம்களுக்கு நீதி கிடைக்காது என்பது மட்டுமல்ல, அவர்கள் நீதியின் பெயரால் கொடுமைப்பத்தப்படுவார்கள்.

நமது உச்ச நீதிமன்றம் பாபரி மஸ்ஜித் வழக்கை வேண்டுமென்றே இழுத்தடித்தது. உண்மையை உரக்க முழங்கினால் பாபரி மஸ்ஜித் வழக்கு இன்றளவும் இழுத்தக்கப்பட்டது என்றால் அதற்கு உச்ச நீதிமன்றந்தான் காரணம். இதனை நீதிபதி ஹோஸ்பட் சுரேஷ் என்பவர் 2002 ஆம் ஆண்டில் இப்படிக் குறிப்பிட்டார்கள்.

The issue of Ramajamma Bhoomi was keptalike by an order ot the supreme court. it is the india any that kept the issue alive, since 1949, by panding a series of arders which only farouned the Hindu Community, over the others. This trend set by the Judiciarg wao to the exploited lata by the commend elements in political parties and to the hijaoked and monopocised as their exclusive agenda by the sangh parirras & in about 1980

இதன்பொருள் : “இராமர் ஜென்மபூமி என்ற பிரச்சனையை உயிருடன் வைத்திருப்பது உச்ச நீதிமன்றத்தின் ஆணைதான். 1949 முதலே இந்தப் பிரச்சனையை உயிருடன் வைத்திருப்பது நீதிமன்றங்கள் தாம், நீதி மன்றங்கள் தொடர்ந்து பிறப்பித்த ஆணைகள், இதர சமுதாயத்தைப் புறக்கணித்தன. இந்து சமுதாயத்திற்குச் சாதகமானவையாக இருந்தன. இதனால்தான் இந்தப் பிரச்சனை இன்றளவும் உயிருடன் இருக்கின்றது. நீதித்துறை உருவாக்கித் தந்த சூழ்நிலைகளைப் பின்னர் அரசியல் கட்சியிலுள்ள வகுப்புவாத சக்திகள் பயன்படுத்திக் கொண்டன. இந்தச் சூழ் நிலையை சங்க பரிவார் 1980 முதல் முழுமையாகத் தங்களதாக்கி ஆதாயம் தேடிக் கொண்டன” CC : Sept - 2002.

முஸ்லிம்களில் சிலர் தங்களை ஏமாற்றிக் கொள்ள ஒரு வாதத்தை முன் வைப்பதுண்டு. அதுவும் ஒரு பள்ளிவாசல்தான் அதற்கென்ன அவ்வளவு முக்கியத்துவம் ; இவர்கள் புரிந்து கொள்ளாதது என்னவெனில்...

1980 முதலே இந்துத்துவ பாசிஸ்ட்டுகள் இந்திய மக்களை, இந்துக்கள் என்றும், முஸ்லிம்கள் என்றும் பிரித்திடவும், பாமர இந்துக்களையும், முஸ்லிம்கள் மீது ஏவிவிடவும், இந்தப் பாபரி பள்ளிவாசலை பிரச்சினையாக்கித்தான்.

முதலில் நமக்கென்ன என்றிருந்த முஸ்லிம்களும், பின்னர் இந்தப் பிரச்சனையில் தங்களை ஈடுபடுத்திட வேண்டியவர்களானார்கள்.

இது வடக்கே உள்ள பிரச்சனை, தெற்கே உள்ள முஸ்லிம்களுக்கு என்ன என்றிருந்தவர்களும், பின்னர் இதில் சிக்கினர், சிறை சென்றனர். பல முஸ்லிம்கள் நிரந்தரமாகவே சிறையில் இருக்கின்றனர்.

பாபரி பள்ளிவாசல், பிரச்சனையாக ஆக்கித்தான் இவர்கள், இந்துத்துவ பாசிஸ்ட்டுகள், இந்தியாவைப் பிளந்து போகின்றார்கள். அதற்கு உச்ச நீதிமன்றம் துணை போகின்றது. – அந்தப் பிரச்சனையை உயிரோட்டமாக வைத்துக்கொண்டிருப்பதே உச்ச நீதிமன்றந்தான் என்பதை ஹோஸ்பெட் சுரேஷ் போன்றவர்கள், புரிந்துகொண்ட அளவுக்கு நாம் புரிந்து கொள்ளவில்லை.

இந்த வகையில் இந்துத்துவ பாசிஸ்ட்டுகள் பாபரி மஸ்ஜித் இடிக்கப்பட்டவுடன் இந்து பெருங்குடி மக்கள் எப்படி உசுப்பேற்றினார்கள் என்றால், “நாட்டின் அடிமைச் சின்னம் அகன்றது” என்று கூறினார்கள், விளம்பரம் செய்தார்கள்.

அப்போது உச்ச நீதிமன்றம் இந்த விவகாரத்தை எப்படிப்பார்த்தது என்பதற்கு

ஒரு எடுத்துக்காட்டை இங்கே சொல்லிட வேண்டும்.



பாபரி மஸ்ஜித் இடிக்கப்பட்ட பின்னணியில் இந்துக்கள் அங்கே வைக்கப்பட்ட சிலைகளுக்கு பூஜை செய்தார்கள். இந்தப் பின்னணியில் சிலர் முஸ்லிம்கள், பாபரி மஸ்ஜித் இடிக்கப்பட்டதால் நாங்கள் தொழும் உரிமையை இழந்தோம், எங்களுக்கும் அதில் Right to worship இருக்கின்றது என்றார்கள். அப்பொழுது நீதிமன்றம் இந்த வகையில் ஒரு மனுவையும் நீதிமன்றத்தில் சமர்ப்பித்தார்கள்.

இந்த மனுவை விசாரணைக்கு எடுத்துக் கொண்ட நீதிபதிகள் இப்படிக் கூறினார்கள்.

Due to the demolition of Babari Masjid, it is the Hindus and not the Muslims who lort the rights to workship

பாபரி மஸ்ஜித் – இடிப்பினால், வழிபாட்டு உரிமையை இழந்தவர்கள் – இந்துக்களே தவிர முஸ்லிம்கள் அல்ல. இப்படியெல்லாம் தீர்ப்புகளை எழுதித்தான் நீதிமன்றங்கள், குறிப்பாக உச்ச நீதிமன்றம் இந்த வழக்கை – இந்தப் பாபரி – மஸ்ஜித் பிரச்சனையை வாழ வைத்தான். முஸ்லிம்களுக்கு வரலாறு முழுவதும் துரோகங்களைச் செய்தன.

மோடியை மத்தியிலும், பல குண்டு வைப்புகளுக்குப் பணம் தந்து அப்பாவி உயிர்களை பலி வாங்கி யோகி. ஆதியானந்த்–ஐ மாநிலத்திலும் கொண்டு வைத்ததில் பாபரி மஸ்ஜித் – இருந்த இடத்தில் கோயில் கட்டுவோம் என்று மக்களிடையே பிரச்சாரம் செய்தார்கள், என்பதும் ஒரு முக்கிய காரணம் பிரச்சாரம் செய்தார்கள் என்பதோடு மட்டுமல்லாமல் அவற்றை முக்கிய தேர்தல் வாக்குறுதிகளாகவும் வழங்கினார்கள். நாங்கள் தேர்தல் அறிக்கையிலே அதை இடம்பெறச் செய்தார்கள்.

மதத்தை அரசியலில் நுழைத்திடக்கூடாது என்று சட்டம் வகுத்தவர்கள், அதனை செயல்படுத்தாமல், வேடிக்கைப் பார்த்துக் கொண்டிருப்பதைத் தவிர வேறென்ன செய்ய முடிந்தது.

இதற்கு முன்னர் இந்துத்துவா ஒரு வழக்கை முறை என கூறி, இந்து பாசிசத்திற்கு வாழ்வழித் ததும், இதே உச்ச நீதிமன்றம்தான். இதனை அ.எ. நூராணி என்ற சிந்தனையாளர் உச்ச நீதிமன்றம் இந்தியாவுக்கும் செய்த நஹக் ஐ வருத்தத்திற்குரிய துரோகம் எனப் பட்டியல் இருக்கின்றனர். ஊழ்ர்யற் கண்ய்ங்.

இப்படிப்பட்ட நீதிமன்றம் தான் தீர்ப்பு என்றொன்றை வழங்கினால், அது முஸ்லிம்களுக்குள், நீதிக்கும் சாதகமாக அமைந்துவிடும் எனப்பதறுகின்றது. கட்டப்பஞ்சாயத்திற்கு வழிவிடுகின்றது.

ஆக, பாபரி மஸ்ஜித் வழக்கைப் பொறுத்த வரை இனி நீதிமன்றங்களும் செத்துப் போய் விட்டன என்றே எடுத்துக்கொள்ள வேண்டும். ஏனெனின் அங்கு கோயில் கட்டுவதையே உச்ச நீதிமன்றம் எதிர்பார்க்கின்றது.

இந்தப் பின்னணியில் பாபரி மஸ்ஜிதே செயற்குழு BMAC (Babari Masjid Aclimi Committee) –ன் ஒருங்கிணைப்பாளர் காப்ரியஸ் ஜ௫லினி அவர்கள், தலைமை நீதிபதி ஒ.ந. ஹேகரின் பரிந்துரையை நாம் ஏற்றுக்கொள்ளவில்லை. குறிப்பாக பாபரி மஸ்ஜித் இருந்த இடம் யாருக்குச் சொந்தம் என்ற பிரச்சனையில் நீதிமன்றம் மட்டும்தான் தீர்ப்பு வழங்கிட இயலும் எனக் கூறியுள்ளார்.

**அதேபோல், சுவாமி யோகி யானந்தை மாநில முதலமைச்சராகவும், மோடியைப் பிரதம அமைச்சராகவும் வைத்துக்கொண்டு பேச்சுவார்த்தை என்றே பேச்சுக்கே இடமில்லை எனவும் கூறியுள்ளார்.**

# அல் காயிதா அமைப்பு உருவானது எப்படி?



முஸ்லிம் நாடுகளின் மீது ஒரு பெரும் போரை தொடுத்திட வேண்டும். அதற்கு என்ன வழி? ஒரு காரணத்தைக் கண்டுபிடித்தாக வேண்டும்.

இதற்கான ஆய்வை, உண்மையைச் சொன்னால் போர் திட்டத்தை, அமெரிக்காவும், ஐரோப்பிய நாடுகளும், நீண்ட நாள்களாகவே தீட்டி வந்தன. இதற்காக அமெரிக்க, ஐரோப்பிய நாடுகளின் உளவுத்துறைகள், போலியானபலஅமைப்புக்களைஉருவாக்கின; இந்த அமைப்புகள் இஸ்லாத்தின் பெயராலயே இயங்க செய்யப்பட்டன. இப்படி உருவாக்கப்பட்ட ஓர் அமைப்புத்தான், “அல்–காயிதா” என்ற அமைப்பு ; இந்த அமைப்பை உருவாக்கிட அமெரிக்கா முதன் முதலில் செலவு செய்த தொகை 540 மில்லியன் டாலர்கள்.

இந்தத் தொகையின் பெரும் பகுதி பிரச்சார உத்திகளை வகுத்திடப் பயன்படுத்தப்பட்டதுதான். அல்–காயிதாவின் பெயரில் ஆயிரக் கணக்கான வீடியோக்கள் என்ற காட்சிப் படங்கள் தயாரிக்கப்பட்டு உலகெங்கும், காட்சிப்படுத்தப்பட்டன.

ஆதாரம் Dr. Ramzy Baroud : Founder : Palestine choronicle.com

Article in Radience Viewed weekly 25/31-12

பொய், பொய்க்குமேல், பொய்கள் அவற்றைஉண்மைப்படுத்துவதுபோல்காட்சிப் படங்கள், இவற்றால் அல்காயிதா என்ற அமைப்பு பலகோடி ரூபாய் செலவில் மக்கள் மனதில் உருவாக்கப்பட்டுவிட்டது. அதன் பின் அதனை ஏற்படுத்திய சதிகாரர்களின் திட்டம் வெகுலாவகமா நிறைவேறிவிட்டது. வன்முறைகளை நிகழ்த்திட வேண்டியது இழப்புகளை நடத்திட வேண்டியது, பழியை அல்–காயிதா அமைப்பின் மேல் போட்டிட வேண்டியது. அதன்வழி முஸ்லிம்கள் குற்றவாளிகள் என்று கூண்டில் நிறுத்திட வேண்டியது, இப்படியும் இன்று முஸ்லிம்கள் உலகை அச்சுறுத்தும் ஒரு சமுதாயமாகக் காட்டப்பட்டு வருகின்றது.

பல்லாயிரக்கணக்கான போலி வீடியோக்கள் வழியாகத்தான் அல்–காயிதா அமைப்புத் தோற்றுவிக்கப்பட்டது என்பதை உலக மக்களுக்கு, தனது இடைவிடா எழுத்துகள் வழி, தெளிவுபடுத்திவரும் டாக்டர் ரம்ஸ் பரப்டி அவர்கள், இன்னொரு உண்மையையும் நமக்கு வெளிச்சம் போட்டுக் காட்டுகின்றார்.

அது, “அமெரிக்கா, லண்டனை சார்ந்த, பெல் பொன்டிங்க் என்ற "Bell Ponitings" என்ற நிறுவனத்தைத்தான் இந்தப் போலி (வீடியோக்களை காட்சிகளை) உருவாக்கிட

நியமித்தது. இந்தக்கம்பெனியின் வேலை Create Fake Al- Qaeda Videos" போலி அல்காயிதா வீடியோக்களை உருவாக்குவது தான். அத்தோடு இந்த நிறுவனம் பல செய்திக் கட்டுரைகளையும் உருவாக்கிட வேண்டும், அந்தச்செய்தி கட்டுரைகள் உண்மையான அரபு ஊடகங்கள் உண்மையிலேயே தயாரித்தது போன்று இருந்திட வேண்டும்''

இந்த உண்மைகளை ரம்ஸ் பரப்டி –யின் சொற்களால் சொன்னால் :

"It was only recently revealed that, the us has hired a landon based fire, bell poltringer, to weate fake al quaida videos and news report thatwere designed to appear as it writen by legilimate arab media"

"The pob pagamda videos were personally approved by the commander of the us led coalition fore is in Iragat the time, general David Pelia........ and others reported"

இதன்பொருள் :

அல் காயிதா பற்றி உருவாக்கப்பட்ட போலி வீடியோக்களை அமெரிக்காவின் இராணுவ தளபதி, டேவிட் பார்ட்டிரஸ் என்பவரே நேரடியாகப் பார்வையிட்டார்.

அமரிக்கா நியமித்த லண்டன் கம்பெனி பல வீடியோக்களை ஈராக்கு உள்ளிருந்தே தயாரித்ததாகக் கூறினார்கள். இதனால் இந்த வீடியோக்கள் பெரிதாக நம்பப்பட்டன.

இந்த வீடியோக்களால் இவர்கள் பல கோடி மக்களின் மனங்களில் பொய்களையும். புனைந்துரைகளையும் பதிய வைத்து விட்டார்கள். எவ்வளவு பெரிய ஏமாற்று வேலையைச் செய்துவிட்டார்கள்'' என ஆதங்கப்படுகின்றார். டாக்டர் ரம்சு பரவ்டி.

**பொய்களின் மேல் போர்கள்...**

முஸ்லிம் உலகின்மேல் தொடுத்துள்ள போர்களுக்குப் பொய்களும் புனைந்துரை களுந்தான் காரணம். ஆனால் நமது ஊடகங் கள் அமெரிக்கா மேலும் மேலும் அவிழ்த்து விடும் இந்தப் பொய்களுக்கே பலம் சேர்த்து எழுதிக்கொண்டே இருந்தன. காட்சி ஊடகங் கள் தங்கள் அளவில் போலியாகத் தயாரிக்கப் பட்ட வீடியோக்களைக் காட்டிக்கொண்டே இருந்தன. அவற்றை உண்மைப்படுத்தும் விதத் தில் விவாதங்களை நடந்தன. இந்தப் பொய்கள், போலி வீடியோக்கள் இவற்றின் அடிப்படையில் தான் ஈராக் மீது, படை யெடுத்தார்கள். மொத்த ஈராக் ஐம் குண்டுகளை வீசி மயானமாக்கினார்கள். லட்சக்கணக்கான முஸ்லிம்களைக் கொலை செய்தார்கள், பல லட்சம் பேரை ஊனமுற்றவர்களாக ஆக்கி னார்கள். இன்னும் பல லட்சம்பேரை அநாதை களாக ஆக்கினார்கள்.

ஈராக் மீது இவர்கள் திணித்தப் போரினால் திக்கு முக்காடி இன்றைக்கும் ஏராளமானோர் எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். பல லட்சம் மக்கள் சல்லடைகளாக ஆக்கப்பட்டு விட்டார் கள்.

ஒரு நாட்டில் அமெரிக்கா போன்ற ரவுடி நாடுகள் ஆக்கிரமித்து வெளியேறும்போது அழிவுகள் வெளியேறிய உடன் முடிந்து விடுவதில்லை. மாறாக அதற்குப் பின்னும் தொடர்ந்து கொண்டிருக்கும். ஈராக் அன்றைய ஆட்சியாளர்கள் சதாம் ஹு ஸைனையும் அவர் வைத்திருந்ததாகப் பிரச்சாரம் செய்யப் பட்ட பேரழிவு ஆயுதங்களையும் தேடுகின் றோம், இதனால் ஈராக் –இல் பேரழிவுகள் ஏற்படுகின்றன என்பது உண்மைதான். அவற்றை ஈடு செய்து ஈராக்–ஐ சீர் செய்வோம் என்றார்கள்.

உலக அரங்கில் வாக்குறுதிகளை வழங் கிக்கொண்டே இருந்தார்கள். ஆனால் புனர மைப்புப் பணிகளில் சல்லிக்காசைக்கூட செலவு செய்யாமல் அந்த நாட்டை அப்படியே அழிவில் விட்டு விட்டு அகப்பட்டதை யெல்லாம் அள்ளிச் சுருட்டிக்கொண்டனர். இப்போது அங்கே ஈராக்–இல் கண்படும் இடங்களிளெல்லாம் கூட்டுப் புதைகுழிகளே தென்படுகின்றன. அத்தனை அழிவுகளுக்கும் பிறகு பொய்களைப் பெரிய அளவில் பிரச்சாரம் செய்தே போர்களைக் கட்டவிழ்த்திட்டிருக் கின்றார்கள். என்பது தெரியவந்தது. ஆனால் யாரும் அதை எதிர்த்துக் கேட்கவில்லை.

நாம் – ஊடகவிய லாளர்கள் நமது வேலைகளைக் கவனிக்கத் தொடங்கி விடுகின்றோம்.

அன்றுவரை அமெரிக்க ஏகாதி பத்தியத்தின் கைப் பாவைகளைப்போல் வேலை செய்து கொண்டிருந்ததை மறந்துவிட்டோம். தொடர்ந்து நமக்கு இப்போது தீனி போடும் செய்திகள் – திகில்கள் இவற்றிற்குப் பின்னால் நகர்ந்திடத் தலைப்பட்டுவிட்டோம்.




இப்போதும் அமெரிக்கா, அல்–காயிதா, பற்றிச் சொல்லும் பொய்களைத் துணிந்து பரப்பி வருகின்றோம். இதில் யாருக்கும் எந்த ஊடகத்திற்கும் வெட்கமில்லை என்றே படுகின்றது.

என்னே நமது பத்திரிகை தர்மம்? எங்கே சென்றது நமது மனசாட்சிகள்..?



அல்–காயிதாவின் உருவாக்கம் பற்றி அவசியம் தெரிந்திட வேண்டும், அதனை உலக நாட்டு மக்கக்கு சொல்லி யாக வேண்டும் என்ற ரம்ஸ் பரேடியாகிய எனது இடைவிடா முயற்சியில் கண்டெடுக்கப்பட்ட உண்மையே அல்–காயிதா பெல்பாண்டிங்க் – நிறு வனத்தால் உருவாக்கப் பட்டது என்பதே. இதற்கான முதல் முதலீடு 540 மில்லியன் டாலர்கள் தொடர்ந்து பல மில்லி யன் டாலர்கள் முதலீடு செய்யப்பட்டுள்ளது இந்த உண்மையை உலகெங்கும் சொல்வோம்.

– ரம்ஸ் பெரவ்டி.

ஆதாரம் Radience Viewed weekly 25-31 December 2016

– தமிழாக்கம் : **M.G.M.**

Owned and published by **M. GULAM MOHAMED** from 52/1, Mannady Street, Mannady, Chennai - 600 001.
Editor **M. GULAM MOHAMED,** Printed by M. Gulam Mohamed at **CHENNAI OFFSET PRINTERS,**
19/1, 21/2, Kitabath Khan Bhadhur Street, Chennai - 600 002.

# திசை திருப்பப்படும் கோவை சசிக்குமார் கொலை வழக்கு.... தப்பிக்க நினைக்கும் காவல்துறை

*22.09.2016 அன்று கோவை மாவட்ட இந்து முன்னிணியைச் சேர்ந்த சசிக்குமார் கொலை. 23.09.2016 கோவையில் கலவரத்தை ஏற்படுத்தி பல நூறு கோடி ரூபாய் மதிப்புள்ள பொது சொத்துக்களை அழித்தனர் பி.ஜே.பி.யினர். பல பள்ளிவாசல்களும், தேவாலயங்களும் (தேவாலயங்களுடன் கூடிய பள்ளிக்கூடங்களும்) கடுமையான தாக்குதலுக்குள்ளாயின. காட்டுமிராண்டிகளால். இதே நாளில் (முன்னாள்) முதலமைச்சர் ஜெயலலிதா மருத்துவமனையில் அனுமதி. காவல்துறை கட்டுப்பாடுகள் அனைத்தும் பொன். ராதாகிருஷ்ணன் கைக்கு மாறியது.*

*விசாரணையின் ஆரம்பக் கட்டம்*

*போலீசார் கலவரக்காரர்களுக்கு உதவியாக இருந்த அதே நேரத்தில் கொலையாளிகளையும் நெருங்கிவிட்டனர். போத்தனூர் மேட்டூர் பகுதியைச் சேர்ந்த ஆனந்த்குமார் 3.10.2016 அன்று தன்னை போலீசார் நெருங்குவதை உணர்ந்து மண்ணெண்ணையை ஊற்றி தீவைத்துக் கொண்டான். சிகிச்சைப் பலனின்றி 8.10.2016 அன்று உயிரிழந்தான். தடயத்தை கூட அழிப்பதில் பி.ஜே.பி.யினர் வல்லுநர்கள் என்பது போலீசாருக்கு மட்டுமே தெரிந்த உண்மை.*

*அழிக்கப்பட்ட தடயங்கள்*

*அடுத்ததாக போலீசார் ஆனந்த்குமாரின் அண்ணன் ரஞ்சித்குமாரை நெருங்கியது. இவன் தனது தம்பியோடு உதவி என்ற காரணத்தால் மருத்துவமனையில் தெளிந்து இருந்தவன் 6.10.2016 அன்று மருத்துவமனை வளாகத்திலேயே பாட்டிலை உடைத்து தற்கொலை முயற்சி செய்து மருத்துவமனையில் உள் நோயாளியாக படுத்துக்கொண்டான். அடுத்த இரண்டு நாட்களில் (08.10.2016) இவன் தர்மபுரி ஆனந்தகுமார் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தான். இப்போது புரிகிறதா? ஆனந்தகுமாரும் கொலைதான் செய்யப்பட்டானென்று இப்படித்தான் தடயத்தை அழிப்பார்கள்.*

*குற்றவாளி யாரென்று தெரியாததுபோலும், தேடிக்கொண்டிருப்பது போலும் இத்தனை மாதங்களாக கஷ்டப்பட்டு நடித்துக்கொண்டிருந்தனர் கோவை மாவட்ட சி.பி.சி.பி.ஐ. போலீசார்.*

*மூன்று மாதங்களுக்கு முன் வடகோவை கருணாநிதி நகரைச் சேர்ந்த சதாம் உசேன், முபாரக் என்ற இரு இளைஞர்களை காணவில்லை என்று அவரின் பெற்றோர் காவல்துறை ஆணையாளரிடம் புகார் செய்தனர்.*

*வரலாற்றில் இடம்பிடித்த சி.பி.சி.ஐ.டி. போலீசார்*

*இரண்டு முஸ்லிம் இளைஞர்களை காணவில்லை என்று கேள்விப்பட்ட போலீசார் மிக லாவகமாக சசிக்குமார் கொலை வழக்கில் இதனை இணைத்து தலைமறை குற்றவாளிகளாக சதாம் உசேன், முபாரக் ஆகியோரை அறிவித்தனர். இனிமேல் காணாமல் போனவரை கண்டுபிடிக்க இயலாத மற்றும் திசை திருப்ப நினைக்கும் குற்ற வழக்கோடு இணைத்து வரலாற்றில் இடம் பிடித்தனர் கோவை மாவட்ட சி.பி.சி.ஐ.டி. போலீசார்.*

*ஊடக உதவியுடன் சி.பி.சி.ஐ.டி.*

*காணாமல் போன சதாம் உசேன், முபாரக் ஆகியோரை தேடுவதை விட்டுவிட்டு*

சசிக்குமார் கொலை செய்தி குற்றவாளிகள் இவர்கள்தான் என்று அனுதினமும் இந்து முன்னணியினர் பிரமுகர் கொலை வழக்கில் மாயமான கோவை வாலிபர்களை பிடிக்க சி.பி.சி.ஐ.டி. போலீஸ் நடவடிக்கை 2 WANTED சந்தேகத்தின்பேரில் இருவரைத் தேடும் சி.பி.சி.ஐ.டி. போலீஸ் – அண்டை மாநிலங்களில் அறிவிப்பு வெளியீடு போன்ற செய்திகளை வெளிநாட:டு மக்கள் மத்தியில் பரபரப்பை ஏற்படுத்திக் கொண்டிருக்கிறார்கள் சி.பி.சி.ஐ.டி. போலீசார்.

புது கோணத்தில் சி.பி.சி.ஐ.டி.

வடகோவை பள்ளிவாசலின் நிர்வாகத்தில் ஏற்பட்டுள்ள குழப்பங்களை நன்கு தெரிந்துகொண்டனர் சி.பி.சி.ஐ.டி. போலீஸார். முன்னாள் வடகோவை ஜமாஅத் செயலாளர் முஹம்மத் அலி ரகசிய பேரில் யார் யாருடைய பெயரையோ எல்லாம் சந்தேகப் பட்டியலில் வைக்க வேண்டும் என்ற முடிவுக்கு வந்தனர். இதனடிப்படையில் கிட்டத்தட்ட 40 நபர்களுக்கும் மேலோட்டமான விசாரணை என்ற பெயரில் அவர்களின் தினசரி வாழ்க்கையில் தலைவிட்டன ர். அதில் ஒருவர்தான் சையது அபுதாஹிர்.

சையது அபுதாஹிர் யார்?

இவர் உக்கடம் பேருந்து நிலையம் அருகிலுள்ள உணவு விடுதியின் வாசலில் துணி வைத்து வியாபாரம் செய்து வந்தார். அனுதினமும் செய்யும் வியாபாரத்தின் அடிப்படையில் கிடைக்கும் வருமானத்தைக் கொண்டு தன்னுடைய குடும்பத்தை நடத்தி வந்ததோடு மட்டுமல்லாமல் அக்கம் பக்கத்தினர் படும் கஷ்டங்களையும் தீர்க்க முயலும் மனிதாபிமாணி.

இவர் செய்தி மாபெரும் குற்றம் காணாமல்போன சதாம் உசேன் மற்றும் முபாரக் குடும்பத்தினருக்கு பொருளுதவி செய்ததுதான்.

போலீசாரே கடத்திய அதிசயம்

கடந்த 20.3.2017 அன்று இரவு 11.30 மணியளவில் தினசரி துணிக்கடையை மூடிவிட்டு உணவகத்திற்க சென்று உணவு உண்டு வெளியில் வந்து நின்றுள்ளார். ஒரு ஜீப்பில் வந்த சி.பி.சி.ஐ.டி. போலீசார் கண் இமைக்கும் நேரத்தில் அங்கு நின்று கொண்டிருந்த சையது அபுதாஹிரை கடத்திச் சென்றனர். CCTV கேமரா என்பது குற்றவாளிகளை கண்டுபிடிக்க போலீசாருக்கு மட்டும்தான் உதவுமா? போலீசார் கடத்தியதையும் பதிவு செய்யாதா என்ன?

குற்றவாளி என்று போலீஸாரால் கருதப்படும் ஒரு நபரை இப்படித்தான் கடத்திச் செல்வார்களா? ஏன் அவரை ஏற்கனவே பலமுறை விசாரணை என்ற பெயரில் சி.பி.சி.ஐ.டி. அலுவலுகத்திற்கே வரச் சொல்லி, அவரும் சென்று வந்துள்ளாரே? அழைத்தாலே வந்துவிடும் சுபாவம் கொண்ட அமைதியான நபரை இப்படி அடாவடித்தனமாக கடத்திச் செல்ல வேண்டிய அவசியம் என்ன? யாருடைய தூண்டுதலில் யாரை திருப்திப்படுத்த இந்த அவசர கடத்தில்?

சட்ட விரோத காவல்

சட்ட விரோத காவல் என்பது சி.பி.சி.ஐ.டி. போலீசார் மட்டுமல்ல சாதாரண போலீஸாருக்கு கைவந்த கலை.

1. மேட்டுப்பாளையத்தில் சோமசுந்தரம் என்ற இன்ஸ்பெக்டர் செய்வது என்ற இன்ஸ்பெக்டர் செய்வது என்ற இளைஞனை தனியார் லாட்ஜில் ரூம் போட்டு (சட்ட விரோத காவலில்) பல நாட்கள் சித்ரவதை செய்த கொடுமை எல்லோரும் அறிவர்.

2. நாகர்கோவிலில் மோகன் அய்யர் மற்றும் .... மாஹிர் என்ற இளைஞரை எங்கு அடைத்து வைத்திருக்கின்றார்கள் என்றே தெரியாமல் மறைத்து வைத்து சித்ரவதை செய்தனர். உண்மை கண்டறியும் குழு எஸ்.பி.யை சந்தித்து மறுநாள் காலை நீதிமன்றத்தில் சமர்ப்பித்தனர்.

இதேபோல சையது அபுதாஹிரையும் கடத்திச் சென்ற சி.பி.சி.ஐ.டி. போலீசார் மிக தைரியமாக சி.பி.சி.ஐ.டி. அலுவலகத்திலுள்ளேயே அடைத்து வைத்து சித்ரவதை செய்துள்ளன ர். போலீஸ் கமிஷனர் மறுநாள் காலை (21.3.2017) அன்று சையது அபுதாஹிரின் குடும்பத்தார் மற்றும் உறவினர்கள் அலுவலகத்தை முற்றுகையிட்டனர். பின்னர் அவர்கள் போலீஸ் கமிஷன ர் அமல்ராஜை சந்தித்து ஒரு புகார் மனு கொடுத்தனர். அதில் சையது அபுதாஹிரை துப்பாக்கி முனையில் அழைத்துச் சென்றனர். அதன் பிறகு அவரை பற்றி எந்த தகவலும் தெரியவில்லை. எனவே அவரை கண்டுபிடித்துத் தர வேண்டும் என்று கூறியிருந்தனர்.

இது குறித்து போலீஸ் கமிஷனர் உத்தரவின்பேரில் போலீஸார் விசாரணை நடத்தி சையது அபுதாஹிரை கோவை மாநகர போலீஸார் கடத்திச் செல்லவில்லை என்று உறுதி செய்து, சையது அபுதாஹிரின் பெற்றோருக்கு தகவல் தெரிவித்தனர்.

இதை தொடர்ந்து இந்து முன்னணி பிரமுகர் சசிக்குமார் கொலை வழக்கு தொடர்பாக சையது அபுதாஹிரை சி.பி.சி.ஐ.டி. போலீஸார் ஏற்கனவே இருபது முறை விசாரணைக்காக அழைத்துச் சென்றுள்ளதால் அங்கு சென்று பெற்றோர் விசாரித்தனர். ஆனால் சையது அபுதாஹிரை தாங்கள் கடத்தி வரவில்லை என்று பொய் சொல்லி திருப்பி அனுப்பிவிட்டனர்.

இதனால் தனது மகன் எங்கே இருக்கின்றான்? என்று தெரியாது சையது அபுதாஹிரின் தந்தை ஜாபர் அலி வழக்கறிஞர் நவ்பல் மூலம் கோவை தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்ற த்தில் 22.03.2017 அன்று ஆட்கொனர்வு மனு தாக்கல் செய்தார். அந்த மனு நீதிபதி மதுரசேகரன் முன்பு உடனடியாக விசாரணைக்கு வந்தது. அப்போது ஆஜரான வழக்கறிஞர் நவ்பல் கூறியதாவது...

“சி.பி.சி.ஐ.டி. போலீஸார் சையது அபுதாஹிரை விசாரணைக்காக அழைத்து சென்றதற்கு தகுந்த ஆதாரங்கள் உள்ளன. அவர் அங்குதான் உள்ளார். இது தொடர்பாக கோவை மாநகர போலீஸாரும் விசாரித்து அவர் எங்கள் காவலில் இல்லை என்று உறுதியாக கூறிவிட்டதால் அவர் சி.பி.சி.ஐ.டி. போலீஹாரின் பிடியில்தான் இருக்க வேண்டும்.

மேலும் விசாரணைக்காக அழைத்துச் செல்லப்படும் ஒருவரை 24 மணி நேரத்திற்குள் போலீஸார் கோர்டில் ஆஜர்படுத்த வேண்டும் என்று விதிமுறை உள்ளது. ஆனால் சையது அபுதாஹிரை போலீஸார் அழைத்துச் சென்று 24 மணிநேரத்திற்கு மேலாகிவிட்டதால் அவரை சி.பி.சி.ஐ.டி. போலீஸார் சட்ட விரோதமாக காவலில் வைத்துள்ளது உறுதியாகி உள்ளது.

எனவே குற்றவியல் நடைமுறை சட்டபிரிவு 97–ன் படி அவரை சட்ட விரோதமாக அழைத்து வந்துள்ள சி.பி.சி.ஐ.டி. போலீஸாரின் அலுவலகத்தை சோதனையின்படி உத்தர வேண்டும் என்று வழக்கறிஞர் நவ்பல் வாதாடினார்.

நீதிபதியின் உத்தரவு

இதைத் தொடர்ந்து சி.பி.சி.ஐ.டி. போலீஸாரின் அலுவலகத்தை சோதனை இடுவதற்கு தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்ற நீதிபதி மதுரசேகரன் உத்தரவிட்டார். இதற்கான பிடியாணையை வழங்கி கோவை 3–ம் எண் மாஜிஸ்திரேட்டு நிறைவேற்ற வேண்டும் என்றும் தனது உத்தரவில் அவர் கூறியிருந்தார்.

சோதனையிடப்பட்ட சி.பி.சி.ஐ.டி அலுவலகம்

இதைத் தொடர்ந்து போலீஸ் பயிற்சி பள்ளி வளாகத்தில் உள்ள சி.பி.சி.ஐ.டி. அலுவலகத்திற்கு 3–ம் எண் மாஜிஸ்திரேட்டு வேலுச்சாமி 22.3.2017 அன்று மதியம் 2.45 மணிக்கு சென்றார். இதுபற்றி தகவல் தெரிய வந்ததும் சையது அபுதாஹிரின் குடும்பத்தின ர், நண்பர்கள் மற்றும் வழக்கறிஞர்கள், போலீஸ் பயிற்சி பள்ளி வளாகத்தில் குவிந்தனர். அங்கு

வந்த மாஜிஸ்திரேட்டை சி.பி.சி.ஐ.டி. போலீஸ் துணை கண்காணிப்பாளர் சுகாசினி மற்றும் அதிகாரிகள் உள்ளே அழைத்துச் சென்றனர்.

அவருடன் சையது அபுதாஹிரின் தந்தை ஜாபர் அலி மற்றும் அவரது வழக்கறிஞர்கள் உள்ளே செல்ல முயன்றனர். ஆனால் அவர்களை சி.பி.சி.ஐ.டி. போலீஸார் உள்ளே செல்ல அனுமதிக்கவில்லை. சி.பி.சி.ஐ.டி. அலுவலகத்திற்குள் சென்ற மாஜிஸ்திரேட்டு வேலுச்சாமி சையது அபுதாஹிர் அங்கிருப்பதை உறுதி செய்தார். இதைத் தொடர்ந்து அவரிடம் விசாரணை நடத்தினர்.

மேலும் சி.பி.சி.ஐ.டி. போலீஸ் அதிகாரிகளிடமும் அவர் சில விளக்கங்கள் கேட்டார். அவை அனைத்தையும் மாஜிஸ்திரேட்டு பதவு செய்து கொண்டார். பின்னர் ஜாபர் அலியிடம் மாஜிஸ்திரேட்டு விசாரணை நடத்தினார். மதியம் **2.45** மணி முதல் **3.45** மணிவரை சோதனையிட்டு விசாரணை நடத்திய பின்னர் மாஜிஸ்திரேட்டு வேலுச்சாமி அங்கிருந்து புறப்பட்டார். இதுபோன்ற ஒரு மாஜிஸ்திரேட்டு சி.பி.சி.ஐ.டி. அலுவலகத்தை (கடத்தி செல்லப்பட்ட ஒரு நபர் இருக்கிறாரா இல்லையா என்று) சோதனையிடுவது கோவை வரலாற்றில் இதுவே முதன்முறை. இதுபோன்ற கேவலமான துணை கண்காணிப்பாளர் பாலமுருகன் மற்றும் அவரது குழுவினரையே சாரும்.

தர்மசங்கடமான சூழ்நிலை

சி.பி.சி.ஐ.டி. அலுவலகம் சோதனைக்குள்ளாகும் என்று கனவிலும் எதிர்பார்த்திராத சி.பி.சி.ஐ.டி. போலீஸார் ஒரு தர்மசங்கடமான சூழ்நிலையில் மாட்டிக் கொண்டனர்.

சையது அபுதாஹிரை கடத்தி வந்து தங்கள் அலுவலகத்திலேயே மறைத்து சட்ட விரோத காவலில் வைத்திருந்து அவரது பெற்றோர் அனுகியபோது இல்லை என்று பொய் சொல்லி ஏமாற்றினர். அபுதாஹிர் இங்குதான் இருக்கிறார் என்று தெரிந்தபிறகு வெறுமனே விசாரணைக்கு அழைத்தோம் என்று கூறினால் ஏன் பெற்றோருக்கு தகவல் தெரிவிக்கவில்லலை என்றும் **24** மணிநேரத்திற்குள் சட்ட விரோதமாக காவலில் ஏன் வைத்திருந்தீர்கள் என்ற நீதிமன்ற அவமதிப்புக்கு ஆளாக வேண்டியிருக்குமோ என்ற பயத்தின் காரணமாக சையது அபுதாஹிரை சசிக்குமார் கொலை வழக்கில் இணைத்தால் தான் தனது துறை தப்பிக்க முடியும் என்று முடிவுக்கு வந்துவிட்டார். இதைப்போன்றுதான் முஸ்லிம்கள் குற்றவாளிகளாக்கப்படுகின்றனர் என்பதற்கு கோவை மாவட்ட நீதித்துறையும் சிறப்பு புலனாய்வு பிரிவுகளும் சாட்சி.

முஸ்லிம்களின் கடமை

ஒரு முஃமீன் இன்னொரு முஃமீனுக்கு கட்டிடத்தை போன்றவன். அதன் ஒரு பகுதி மற்றொரு பகுதியை பலப்படுத்திக் கொண்டிருக்கும் (புகாரி முஸ்லிம்)

“இறை மறுப்பாளர்களில் சிலர் சிலருக்கு தோழர்களே” (குர்ஆன்)

அதேபோல

“முஃமினான ஆண்களும், பெண்களும் அவர்களில் சிலர் சிலருக்கு தோழர்களே” (குர்ஆன்)

எனவே உம்மத்தினரே பாதிக்கப்படும் சகோதரன் எந்தி அமைப்பு, கட்சி இயக்கம் என்ற வேதம் பார்த்திடாமல் ஒருவருக்கொருவர் உதவி செய்து கொள்ளுங்கள். நீங்கள் உங்களுக்குள் பிரிந்து விடாதீர்கள்.

“ஈயத்தில் உருக்கி வார்க்கப்பட்ட பலமான அரணைப்போன்று அணி சேர்ந்து நின்று அல்லாஹ்வுடைய பாதையில் போர் செய்பவர்களை நிச்சயமாக அல்லாஹ் நேசிக்கின்றான்” ( **61 : 4** குர்ஆன்)